இந்தியப் பெருமக்கள்

Approved by the Text Book Committee, Madras, vide F. S. G. G. List Page 120 dated 19—5—54

வித்வான் :

L. நஞ்சப்பா B.A., B.O.L., L.T.,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை : : : : சென்னை

மை பெற்றது] 1954 [விலை அணா 14

இந்தியப் பெருமக்கள்

MADURA TAMIL SANGAM

வித்வான் :

L. நஞ்சப்பா, B.A., B.O.L., L.T.

6966

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை : : : : சென்னை

[உரிமை பெற்றது] 1954 [விலை அணா 14

First Edition—1953 **Reprinted—1954.**

Approved for class use by the Madras T. B. C. Vide C. List Page 120 dated 19–5–54.

Printed at the Janatha Press, Madurai.

முகவுரை.

இன்றுள்ள புதிய இந்தியாவில் கல்வி யறிவு, நாட்டுப் பற்று, பரந்த நோக்கம், விரிந்த சிந்தை முதலிய நற்பண்புகள் வளர்ந்து வருகின்றன. இவற்றுக்கு அடிப்படையிட்ட பெருமக்கள் பலராவர். அவர்களுட் பலர் தம் ஆயுட்காலம் முழுவதும் இவற்றுக்காகவே செலவிட்டு மறைந்தவர்; சிலர், இன்றும் உயிருடன் வாழ்ந்து தொண்டு செய்து வருகின்றனர். அப்பெருமக்கள் வரலாறுகளை இக்கால மாணவராகவும், எதிர்கால உரிமை வீரராக விளங்க இருப்பவரும் ஆகிய இந்திய இளைஞர் அறிதல், அவர் தம் பிறப்புரிமை ஆகும்; அங்ஙனம் அறிதல் அவர் தம் எதிர்கால வாழ்விற்குப் பெருந்துணை செய்வதுமாகும்.

இந்த நன்னோக்கம் கொண்டே இங்கு இந்தியப் பெரியார் மூவர் வரலாறுகள் தரப்பட்டுள்ளன. அந்த மூவர் (1) டாக்டர் இராதாகிருஷ்ணன், (2) தண்டு கேசவ கார்வே, (3) சர் அசுடோஷ் முக்கர்ஜி, என்பவர் ஆவர். இப்பெருமக்கள் வரலாறுகளால் மாணவர் வாழ்வு செம்மைப் படுவதே இத்தகைய நூல்களின் சிறந்த பயன் என்பது அறிஞர் நன்கறிந்த உண்மையே ஆகும் அன்றோ!

வித்வான், L. நஞ்சப்பா, B.A., B.O.L., L.T.

பொருள் அடக்கம்

எண்	விஷயம்		பக்கம்
	I. டாக்டர் இராதாகிருஷ்ணன்		
1.	இளமைப் பருவம்	....	1
2.	ஆசிரியர் வேலை	....	6
3.	உலகப் பிரயாணமும் புகழும்	....	13
4.	இந்தியாவில் சொற்பொழிவுகள்	....	24
5.	குண நலன்கள்	....	29
	II. தண்டு கேசவ கார்வே		
1.	இளமைப் பருவம்	....	34
2.	பம்பாயில் ஆசிரியர் தொழில்	....	40
3	பூனாவில் பேராசிரியர் பதவி	....	47
4.	கைம்பெண் மறுமணம்	....	51
5.	கைம்பெண்கட்குத் தொண்டு	....	61
6.	விதவையர் விடுதி	....	65
7	பெண் கல்விக்கு உழைத்தல்	....	71
8.	குண நலன்கள்	....	78
	III. அசுடோஷ் முக்கர்ஜி		
1.	இளமைப் பருவம்	....	82
2.	பல்கலைக் கழகப் படிப்பு	....	89
3.	கல்விக்குத் தொண்டு புரிதல்	....	95
4.	பதவிகளும் பொதுப் பணியும்	....	100
5.	குண நலன்கள்	....	106

டாக்டர் இராதாகிருஷ்ணன்

இந்தியப் பெருமக்கள்

I. டாக்டர் இராதாகிருஷ்ணன்

1. இளமைப் பருவம்

இன்றுள்ள இந்தியப் பெரியாருள் டாக்டர் இராதா கிருஷ்ணன் ஒருவர் ஆவர். அவர் உலகெலாம் சுற்றி, இந்து சமயதத்துவப் பேராசிரியர் என்ற முறையிற் சொற்பொழிவுகள் செய்து புகழ்பெற்றவர். உழைப் பாற் படிப்படியாக உயர்ந்த பெரியவர்; ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தவர்; காசி இந்து சர்வகலாசாலைத் துணைவேந்தராகவும் இருந்த வர். அப்பெரியார் சிறந்த ஆங்கிலப் பேச்சாளர்; இணையற்ற சமயதத்துவப் பேராசிரியர். அவரது வரலாறு இளைஞராகவுள்ள உங்கட்கு ஊக்கத்தையும், உள்ளக் கிளர்ச்சியையும் ஊட்டவல்லது.

திருத்தணிகை, முருகன் தலங்களுள் ஒன்று. அது பல நூற்றாண்டுகளாகப் புகழ் பெற்ற தலமாகும். அது சித்தூர் ஜில்லாவில் இருக்கின்றது. அந்தத் தலத்தில் நமது இராதாகிருஷ்ணன் கி. பி. 1888-ல் பிறந்தார். அவர் தந்தையார் வடமொழியும், தெலுங் கும் படித்த பிராமணர். அவர் ஒரு சமீந்தாரிடம்

அலுவல் பார்த்து வந்தார். அவர் முன்னோர் வேதங்களில் வல்லவராக இருந்தனர். இராதாகிருஷ்ணன் பெற்றோர் சிறந்த ஒழுக்கம் உடையவர்கள்; சமயத் தொடர்பான சட்ட திட்டங்களை இறுகப் பின்பற்றியவர்கள். இத்தகைய வைதிகக் குடும்பத்தில் இராதாகிருஷ்ணன் பிறந்து வளர்ந்தார்.

சிறந்த சமய அறிஞராக விளங்கப் போவதாலோ-என்னவோ, அவர் இளமை முதலே தனித்திருத்தலையும், தனித்திருந்து சிந்தனையில் ஆழ்தலையும் அவாவினார். அச் சிறுவர் பிள்ளைகளுடன் கலந்து விளையாடவில்லை. தாம் பிறந்து வளர்ந்த திருத்தணிகை அவருக்குச் சமய உணர்ச்சியை மிகுதியாக ஊட்டியது போலும்! பின்னர் அவர் திருப்பதியிற் சிறிது காலம் இருந்தார். திருத்தணிகை சிவத்தலம்; திருப்பதி வைணவத்தலம்; நீலமேனி நெடியோன் பல நூற்றாண்டுகளாக நின்ற வண்ணம் இருந்து பக்த கோடிகட்கு அருள் சுரக்கின்ற இடம். அந்த இடத்தில் இருந்த பொழுதும் அவரது உள்ளம் தனித்திருந்து சமயவுணர்ச்சி பெறுவதிலேயே விருப்பம் கொண்டது. இங்ஙனம் இளமையிலேயே தனித்து இருந்த பழக்கத்தாற்றான் அவர் பாவம்! இன்றும் மிக மெலிந்தவராகக் காணப்படுகின்றார்; 'ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி'யவராகக் காண்கிறார்.

பிள்ளைகள் பலர் ஓயாமற் படிப்பார்கள்; ஆனால் படித்தவற்றை நினைத்துப் பாரார். அதனாற் படித்தவை மனத்திற் படிவதில்லை. இக்குறையாற்றான் மாணவர் பலர் தேர்வில் தவறுகின்றனர். ஆனால் நமது இராதாகிருஷ்ணன் படிப்பதுடன் நிற்பவர் அல்லர்; படித்ததைச சிந்தித்து மனத்திற் பதிய வைக்கும் பழக்கம் உடையவர். அப்பழக்கம் அவரிடம் இருந்ததாற்றான் எந்தக் கூட்டத்திலும், எந்த நேரத்திலும் சாத்திரங்களிலிருந்து கணக்கற்ற சுலோகங்களை மேற்கோளாகக் காட்டிக் கடல்மடை திறந்தாற்போலப் பேசலாயினர்; இன்றும் அவ்வாறு பேசி வருகின்றனர். ஆதலின் இளைஞர் இராதாகிருஷ்ணன் கையாண்ட நற்பழகக்த்தைப் பின்பற்றினாற்றான் ஆண்டுதோறும் தவறாது தேர்ச்சி பெறலாம்; சிறந்த படிப்பாளிகளாகவும் விளங்கலாம்.

இராதாகிருஷ்ணன் 13 வயது வரை திருத்தணிகையிலும், திருப்பதியிலும் படித்தார். பின்னர்ச் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியிற் சேர்ந்து படித்தார்; 1903-ல் மெட்றிகுலேஷன் வகுப்பிற் சிறப்புறத் தேறினர்; பின்னர் அதே கல்லூரியிற் சேர்ந்து உயர்நிலைப் படிப்பைக் கவனிக்கலானார். அவர் ஆசிரியரிடம் அடக்கம், அன்பு, மரியாதை உடையவராக இருந்தார். ஆசிரியர் விரும்பத்தக்க முறையில் நன்றாகப் படித்தும் வந்தார். இங்ஙனம் வருந்திக் கற்று 1905-ல் எப். ஏ.

தேர்வில் முதல்வராகத் தேறினர்; ஆசிரியர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்; பெற்றோர் ஆசீர் வதித்தனர். இளைஞர் முனனிலும் பன்மடங்கு ஊக்கங்கொண்டு படித்துப் பி. ஏ. தேர்விலும் முதல் வராகத் தேறினர். கல்லூரி ஆசிரியர்கள் 'இவரது எதிர்கால வாழ்வு சிறப்புறும். இவர் ஒரு பெரிய மனிதராக விளங்குவார்' என்றனர். சான்றோர் கூற்றுத் தவறாது அன்றோ?

இளமையில் சமயவுணர்ச்சியும், சிந்தனையும் கொண்டிருந்த இராதாகிருஷ்ணன் கல்லூரியிலும் சமயக் கலையையே தம் விருப்பப் பாடமாக எடுத்துக் கொண்டார்; எனவே, அது சம்பந்தமான நூல்கள் எல்லாவற்றையும் நன்றாகக் கற்றார்; சுவாமி விவே கானந்தர் சொற்பொழிவுகளையும், கடிதங்களையும் கருத்தூன்றிக் கவனித்தார். அதனால் அவருக்கு இந்து மதத்தில் இருந்த பற்று மிகுதிப்பட்டது. அவர் மேலும் மாக்ஸ்முல்லர் முதலிய மேனாட்டு அறிஞர்,வேதங்கள் முதலியவற்றைப்பற்றி வரைந்த நூல்களையும் நன்றாக ஆராய்ந்தார்; "மக்கள் சில நாள் வாழ்வுடையவர்கள்; பிறக்கும்பொழுது ஒருவ ரும் செல்வத்தைக் கொண்டுவரவில்லை; இறக்கும் பொழுதும் அதனை எடுத்துச் செல்வதில்லை. எனவே, கிடைத்ததைக் கொண்டு திருப்தியாக நல்வாழ்வு வாழ்ந்து இறத்தலே நல்லது," என்று எளிய மக்க

ளும் கூறி, மன அமைதி உடையவராகக் காலம் கழிப்பதைக் கண்டார்; மிகவுயர்ந்த மன அமைதி மிக எளிய மக்களிடம் இருப்பதைக் கண்டதும் அவர் வியப்புற்றார்; இந்து சமயக்கொள்கைகளே அந்த மன அமைதிக்குக் காரணம் என்பதை அறிந்தார்; கல்வியறிவு கடுகளவும் இல்லாத கிராமவாசிகளது நல்லொழுக்கம் இந்து சமயச் சிறப்பையே உணர்த்துவதாகும் என்பதை உணர்ந்தார்; 'மக்கள் காசிக்கும், இராமேசுவரத்திற்கும் பெரும்பொருளைச் செலவழித்துப் போவது ஆன்ம அமைதி பெறுதற்காக என்பதையும் பணம் ஒன்றைக் கொண்டு இந்துக்கள் இன்பப்படவில்லை — அதனையே இன்ப முடிவாகக் கருதவில்லை — ஆன்ம அமைதிக்குரியது செல்வமன்று என்பதை மககள் உணர்ந்திருந்தனர்' என்பனவற்றையும் நன்கு அறிந்தார். இத்தகைய ஆராய்ச்சி அவரைச் சிறந்த சமய அறிஞர் ஆக்கியது.

இராதாகிருஷ்ணன் பிற சமயங்களைப் பற்றியும் ஓரளவு படித்தறிந்தார்; ஒவ்வொரு சமயத்திலும் உண்மை உண்டு என்பதை உணர்ந்தார்; அதனால் 'எல்லாச் சமயங்களும் இறைவன் புகழையே எடுத்தியம்புவன; உலக நிலையை உள்ளவாறு விளக்குவன; மனிதர் நடந்துகொள்ள வேண்டுவனவற்றை வகுத்துக் கூறுவன' என்பதை அறிந்தார். இங்ஙனம் சமய ஆராய்ச்சியிற் புகுந்து நடுவு நிலையில் இருந்து ஆராய்ந்து தாம் கண்ட முடிவுகளை ஓர்

ஆராய்ச்சிக் கட்டுரையாக எம். ஏ. தேர்வுக்கு எழுதினர். அக்கட்டுரையைப் பார்வையிட்ட ஆராய்ச்சி அறிஞர் அவரைப் பாராட்டிப் பட்டம் அளித்தனர்.

கல்லூரியில் படிக்கும் பொழுதே இராதாகிருஷ்ணனுக்குத் திருமணம் நடந்தேறியது. இத்தகைய இளமை மணம் இக்காலத்திற் குறைந்து வருகிறது; ஆயின் நாற்பது ஆண்டுகட்கு முன் சாதாரணமாக நடந்து வந்தது. இராதாகிருஷ்ணன் மனைவியார் ஓரளவு படித்தவர்; எனினும் கணவர் கூட்டுறவினால் தம் படிப்பை நாளடைவில் வளர்த்துக்கொண்டார். அந்த அம்மையாரை இந்து சமய ஆசாரங்களின்படி நடந்துவரும் உதாரணப் பெண் மணியாகக் கூறலாம். அவர் தம் கணவரைக் கோபித்த நாள் இல்லை; தம் இல்லற நிலையை எண்ணி வருந்திய நாள் இல்லை. கணவரும், மனைவியாரும் கருத்து ஒருமித்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். கணவர் கூட்டுறவினால் அம்மையார் உலகச் சமயங்களைப் பற்றிப் பொதுவாகவும், இந்து சமயத்தைப் பற்றிச் சிறப்பாகவும் பல செய்திகளை அறியும் பேறு பெற்றார். இருவரும் மலரும், மணமும் போல வாழ்ந்து வந்தனர்.

2. ஆசிரியர் வேலை.

எம். ஏ. பட்டம் பெற்ற இராதாகிருஷ்ணன் முதலில் சென்னை மாகாணக் கல்லூரியில் தத்துவ உதவிப் பேராசிரியராக வேலை பார்க்கலானார்; அந்த இளவயதில் அவர் சிறந்த ஆசிரியர் என்று

பெயர் பெற்றார். அதற்கு என்ன காரணம்? அவர் தாம் போதித்த சமயக் கலையில் தாமே நிபுணராக இருந்தமை ஒரு காரணம்; ஆங்கில மொழியில் வல்லுநராக இருந்தமை மற்றொரு காரணம். இந்த இரண்டு காரணங்களால் அவர் சொற்பொழிவுகள் மாணவர் பாராட்டத் தக்கனவாக இருந்தன.

உண்மையான ஆசிரியன் தான் கற்பிக்கப் புகும் கலையை நனகு அறிந்தவனாக இருத்தல் வேண்டும்; அறிந்த உண்மைகளைப் பிறர் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் விளக்கமாக எடுத்துச் சொல பவனாக இருத்தல் வேண்டும். இந்த இரண்டு பண்புகளும் அமையப் பெற்றவரே நலல ஆசிரியர் என்று பெயர் பெறுவர். இங்ஙனம் பெற்றவரே சர் ஜகதீச சந்திர போஸ், சர் சி. வி. இராமன், சர் பி. ச. ரே., கோபாலகிருஷ்ண கோகலே, மகாதேவ கோவிந்த ரானடே, தண்டு கேசவ கார்வே, வி. சீநிவாச சாஸ்திரி முதலிய இந்தியப் பெருமக்கள் ஆவர். அப்பெரியோர் வரிசையில் நமது இராதாகிருஷ்ணனும் ஒருவராகக் கருதப்படுகின்றமைக்குக் காரணம் மேற்சொன்ன இரண்டு பண்புகளே ஆகும்.

ஆசிரியர் சிலர் நன்றாகப் படித்திருப்பார்கள்; பிள்ளைகட்குப் புரியுமாறு எடுத்துச் சொல்ல ஆற்றல் அற்றவராக இருப்பர். வேறு சிலர் பேசுவதில் வல்லவராக இருப்பர்; ஆனால் விஷயம் தெளிவாகத்

தெரியாதவராக இருப்பர். இந்த இரு சார் ஆசிரியரும் ஆசிரிய வாழ்வில் தோல்வி ஒன்றையே தரிசிப்பவர் ஆவர். அவர்கள் பிள்ளைகளால் நன்கு மதிக்கப்பட மாட்டார்கள்.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்னும் வள்ளுவர் வாக்கு இங்குச் சிந்திக்கற்பாலது.

தேனினைச் சுற்றி மொய்க்கும் ஈக்களைப் போலத் தன்னை எப்பொழுதும் மாணவர் சுற்றிக் கொண்டு தன்னிடமிருந்து வெளிப்படும் நல்லுரை கேட்க அவாவி நிற்கும்படி செய்து கொள்பவனே சிறந்த ஆசிரியன். அந்த இலக்கணத்திற்கு இயைய நமது இராதாகிருஷ்ணன் இயங்கினர். மாகாணக் கல்லூரியில் அவர் பேருரை நிகழும் பொழுதெல்லாம் மாணவர் அசைவற்று, அவரது பேச்சைக் கவனித்துக்கொண்டிருப்பர்; அவரது பேருரையில் சொல்லும், பொருளும் பருந்தும், நிழலும் போலப் பிணைந்து செல்லும் பான்மையைக் கண்டு உளங் குளிர்ந்து மாணவர் வீற்றிருப்பர். வறண்ட பாடமாகிய சமயபாடத்தை இராதாகிருஷ்ணன் தம் திறமையுரையால் மாணவர் மிக விரும்பிப் படிக்கத்தக்க நற் பாடமாக மாற்றினர் எனின், அவரது பேராசிரிய ஆற்றலை என்னென்று கூறுவது!

இங்ஙனம் சமய தத்துவத் துறையிற் பெயர் பெற்ற இராதாகிருஷ்ணன் பிள்ளைகட்குக் கற்பிப்ப

றுடன் நின்றுவிடவில்லை. அவர் தம் சமயக் கருத்து களை ஆங்கிலத் தாள்களில் விடாமல் எழுதிவந்தார். இதுவே செய்யத்தக்கது. இதனல் மேனாட்டார் இந்து சமயச் சிறப்பை நன்கு அறிய வாய்ப்பு உண்டானது; அக்கட்டுரைகள் வாயிலாக இராதா கிருஷ்ணன் ஆற்றலையும் அறிய வழி ஏற்பட்டது.

"இந்து சமயம் இல்லறக் கடமைகளை வற் புறுத்துகிறது; எல்லாச் சமயத்தாருடனும் ஒற்று மையுடன் வாழ இசைகிறது; ஒவ்வொரு செயலிலும் கடமை ஒன்றையே கருதுமாறு வற்புறுத்துகிறது; மனிதன் உலகப் பற்றை ஓரளவு பயன்படுத்திக் கொண்டு நேரிய வாழ்க்கையை நடத்தலே வேண்டற் பாலது. மனிதன் பல உயிர்கட்கும் பயன்படும் பழு மரம் போல இருந்து வாழ்வதே வாழ்க்கை எனப் படும் என்பதை நன்கு வற்புறுத்துகிறது; உலக மக்களை ஒரு கடவுள் பெற்ற மக்களாகக் கருதுவதே இந்து சமய உயிர் நாடி" என்பன அக்கட்டுரை களின் சாரமாகும்.

இராதாகிருஷ்ணன் இரவீந்திரநாத தாகூர் வெளியிட்ட பல நூல்களைப் படித்தார்; தாம் கருதும் சமயக் கருத்துகளையே அப்பெரியாரும் தம் நூல் களில் வெளியிடுவதைக் கண்டு வியப்புற்றார்; பின் னர்த் 'தாகூருடைய சமயக் கருத்துகள்' என்னும் ஆராய்ச்சி நூலை வரைந்து வெளிப்படுத்தினர். தாகூர் அந்நூலினை முழுவதும் படித்துப் பெருவியப்

புற்ருர்; "என்னுடன் நெருங்கிப் பழகாது என் நூல் களைப் படித்தே என் கருத்துகளை உள்ளவாறு உணர்ந்து வெளிப்படுத்திய உங்கள் பேரறிவு பாராட்டற்பாலது. வேறு எவரும் என்னை உள்ள வாறு உணர்ந்தவர் இல்லை" என்று பாராட்டிக் கடிதம் வரைந்தார். இங்ஙனம் தாகூரைப் பற்றி வரைந்த புதிய நூலினல் இராதாகிருஷ்ணன் பெயர் இந்திய அறிஞர் உலகிற் பரவத் தொடங்கி யது. அவர் ஒரு சிந்தனையாளர் என்றும், எழுத் தாளர் என்றும் அறிவுடை உலகம் மதிக்கத் தொடங்கியது.

இங்ஙனம் இராதாகிருஷ்ணன் பெயர்நாட்டிற் பரவிவந்த காலத்தில் மைசூர்ச் சமஸ்தானத்தில் பல் கலைக் கழகம் ஏற்பட்டது. அதனில் சமய தத்துவப் பேராசிரியர் வேலை பார்க்குமாறு இராதா கிருஷ்ணற்கு அழைப்பு வந்தது. அவர் மூன்று வருட காலம் அப்பதவியில இருந்து தொண்டாற்றினர்; அப்பொழுது உலகச் சமய வல்லுநர் கருத்துகளை நன்கு ஆராய்ந்து ஓர் அரிய ஆராய்ச்சி நூலை வெளி யிட்டார். அதனைப் படித்த உலக அறிஞர் பலர் அவரை மிக்க உயர்வாக மதிக்கத் தொடங்கினர். அமெரிக்க அறிஞர் அவரை வானளாவப் புகழ்ந்து பாராட்டினர். ஓர் அமெரிக்க சமய ஆசிரியர், 'இராதாகிருஷ்ணன் சமயக் கருத்துகள்' என்பது பற்றியே அமெரிக்காவில் சமய மகாநாட்டில் பேச

லாயினர் எனின், இராதாகிருஷ்ணன் பெற்ற பெரும் புகழை என்னெனக் கூறுவது!

இங்ஙனம் இராதாகிருஷ்ணன் மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் புகழுடன் இருந்த பொழுது கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் வேலை காலி ஆயிற்று. அந்தப் பதவியில் பேராசிரியராக இருந்தவர் மைசூர் பல்கலைக் கழகத் துணை வேந்தராகச் சென்றார். அதனால் காலி ஏற்பட்ட பதவிக்கு யாரை நியமனம் செய்வது என்பது கேள்வியாக இருந்தது. அப்பொழுது கல்கத்தாப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் யாவர்? அவரே மிக்க புகழ் பெற்ற சர் அசுடோஷ் முக்கர்ஜி என்பவர். அப் பெரியார் அறிவு ஆற்றல்கட்கே மதிப்பைத் தரும் உத்தமர் அல்லவா? அதனால் அவர் உலகப் புகழ் பெற்ற நமது இராதாகிருஷ்ணனை அப் பதவியில் நியமித்தார். கல்கத்தாப் பல்கலைக் கழகம் இந்தியப் பல்கலைக் கழகங்களில் மிகச் சிறந்தது என்பது அக்காலத்தார் எண்ணம். அதனால் அங்குப் பேராசிரியராகச் செல்லுதல் பெருஞ்சிறப்பு என்பது அக்காலத்தில் கருதப்பட்டது.

இராதாகிருஷ்ணன் வங்க மாகாணத்தில் சமயக் கொள்கைகளைப் பற்றிப் பல முதிர்ந்த கருத்துகளை வெளியிட்டுப் பல இடங்களிற் பேசினார். அவர் கட்டுரைகள் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டன.

அதனால் இங்கிலாந்தில் உள்ள புத்தக வியாபாரி ஒருவர் 'இந்து சமயம்' பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதுமாறு வேண்டினார். இராதாகிருஷ்ணன் வேதங்கள் - உபநிஷத்துகள் - தர்ம சாத்திரங்கள் - பிற்கால இந்து நூல்கள் - இவற்றை நன்கு ஆராய்ந்து தம் ஆராய்ச்சியிற்பட்ட உண்மைகளையும் தொகுத்து மிகச் சிறந்த ஆங்கில நடையில் தெளிவான முறையில் எழுதி அனுப்பினார். அந்நூல் இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது.

அந்நூல் மேனாடுகளில் மிகுதியாக விற்பனை ஆயிற்று. அதனைப் படித்த மேனாட்டார் இந்து சமயக் குறிப்புகளை நன்கு உணர்ந்தனர்; அதன் உயரிய தத்துவங்களை அறிந்து மகிழ்ந்தனர்; தத்தம் நாட்டுப் பல்கலைக் கழக மாணவர் படிக்கத் தக்க பாடங்களில் 'இந்து சமய பாடம்' ஒன்றாக இருத்தல் நல்லது என்று எண்ணினர். இராதாகிருஷ்ணனுடைய நூல்கள் மிகுதியாக மேனாடுகளிற் பரவப் பரவ, அவருடைய சமய ஆராய்ச்சிக் கருத்துகளும் இந்து சமயச் சிறப்பும் உலக அறிஞரிடையே நன்கு பரவியது. இப்பரவலால் உலக அறிஞர், இந்தியா அறிவுக்கும் ஆன்ம அமைதிக்கும் மிகச் சிறந்த இடமாகும் என்பதை நன்குணர்ந்து நமது தாய் நாட்டைப் பெருமைப் படுத்தலாயினர்.

3. உலகப் பிரயாணமும் புகழும்

இராதாகிருஷ்ணன் பெயர் உலகெலாம் பரவத் தொடங்கியது முதல் மேனாட்டுப் பல்கலைக் கழகங்கள், அறிவியல் கழகங்கள் முதலியன அவரை வந்து சமயச் சொற்பொழிவு செய்யுமாறு அழைத்தன. அவர் வெளி நாடுகட்குச் செல்ல விரும்பவில்லை. ஆயின், அவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தபொழுது, இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் என்னும் கலைவளம் செறிந்துள்ள நகரத்தில் பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட்ட நாடுகளில் உள்ள பல்கலைக் கழகப் பிரதிநிதிகள் மாநாடு 1926-ல் நடைபெற்றது. கல்கத்தாப் பல்கலைக் கழகம் நமது இராதாகிருஷ்ணனைப் போகுமாறு வற்புறுத்தியது. அதனால் அவர் கப்பல் ஏறினார்.

அவர் நம் நாட்டுக்கு வருகிறார் என்பதை அறிந்த பல கழகங்கள் அவரைப் பேசுமாறு வேண்டின. அவர் சிலவற்றிற் பேசவே உடன்பட்டார். ஆக்ஸ்போர்டில் உள்ள மான்செஸ்டர் கல்லூரியிற் சொற்பொழியாற்றினார். 'கல்கத்தாப் பல்கலைக் கழகம் மெய்யாகவே சிறந்த அறிஞர் ஒருவரைப் பேராசிரியராகப் பெற்றுள்ளது பாராட்டத்தக்கது. அவர் இங்கு வந்து பேசியது நமக்குச் சிறப்பளித்ததாகும். மிக்க பழையதும் புகழ் பெற்றதுமாகிய ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திற்கு இராதாகிருஷ்

ணன் வந்து பேசியது பாராட்டுக்குரியது' என்று அவர் சொற்பொழிவுகளைச் செவிமடுத்தோர் பாராட்டிப் பேசி மகிழ்ந்தனர்.

பின்னர் அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் "பிராட்லியும் சங்கரரும்" என்பதுபற்றிப் பேசினார். பிராட்லி என்பவர் மிகச் சிறந்த ஆங்கிலச் சமய அறிஞர். சங்கரர் நமது நாட்டு வேதாந்த ஆசிரியர். இந்த இருவருடைய கல்வி, அறிவுநிலை, ஆராய்ச்சி நிலை, சமயக் கொள்கைகள், இருவர் கருத்துக்களிலும் உள்ள ஒற்றுமை - வேற்றுமைகள் முதலியவற்றைச் சாதாரண மக்களும் கேட்டு எளிதில் அறிந்துகொள்ளும்படி மிகத் தெளிவாகப் பேசினார். அவரது சொல் ஆற்றலையும் விஷய ஞானத்தையும் கண்ட அறிஞர்கள் பெருவியப்புக் கொண்டனர்; சொற்பொழிவின் இறுதியில் அவருக்குப் புகழ்மாலை அணிந்தார்கள்.

"அவரது சொற்பொழிவைக் கேட்க அறிஞர் பலர் திரண்டனர். அவர் கீழ்நாட்டுச் சமய நூல்களிலும் மேனாட்டுச் சமயநூல்களிலும் சிறந்த புலமை உடையவராகக் காண்கிறார். அவர் இந்து சமயத்தின் சிறந்த ஆசிரியர் என்று கூறலாம். அவர் ஆங்கில மொழியில் கடல்மடை திறந்தார்போலப் பேசும் பேராற்றல் படைத்தவராகக் காணப்படுகிறார். குறிப்புகள் இன்றியே பலமணி நேரம் மிகவும் கடினமான சமயக் கருத்துக்களைப் பற்றிப்

பேசவல்லவர் என்பது தெரிகிறது. இத்தகைய பேரறிஞர்க்கு நமது வாழ்த்து உரியதாகுக,'' என்று ஆங்கில அறிஞர் பாராட்டினர்; பத்திரிகைகளும் அங்ஙனமே பாராட்டின.

இவ்வாறு இங்கிலாந்தில் பெரும் புகழ் பெற்ற நமது இராதாகிருஷ்ணன் அமெரிக்காவிற்குச் சென்றார். அங்கு பல நாட்டுச் சமயப் பேரறிஞர் மாநாடு நடந்தது. இராதாகிருஷ்ணன் அங்குப் பல நாட்டுச் சமயப் பேரறிஞரும் பாராட்டத் தக்கவாறு சொற்பெருக்காற்றினார்; பின்னர்ச் சிகாகோ, ஹார்வார்ட், ஏல் முதலிய பல்கலைக் கழகங்களில் விருந்தினராகச் சென்று சொற்பொழிவு ஆற்றினர். 'விவேகானந்தருக்குப் பின் இங்ஙனம் இந்து சமயப் பிரசாரம் செய்தவர் மிகச் சிலரே. இராதாகிருஷ்ணன் உலகத்துச் சமயப் பேரறிஞருள் ஒருவர் என்பதில் ஐயமே இல்லை' என்று அமெரிக்க அறிஞர் பாராட்டினர். 'கற்றவர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்னும் முதுரை எக்காலமும் உண்மையானதே ஆகும் அல்லவா?

இங்ஙனம் ஆங்கிலேயராலும் அமெரிக்கராலும் பாராட்டப் பெற்ற இந்து சமயப் பேராசிரியர் '**நாகரிகத்தின் எதிர்காலம்**' என்னும் ஆராய்ச்சி மிக்க நூலை எழுதி வெளியிட்டார். அதனில், "விஞ்ஞானம் மக்கட்குப் பல நன்மைகள் செய்துள்ளது; நம் முன்னோரைவிட நம்மை உயர் நிலையில் வாழ வைத்துள்ளது; பொருள் குவிக்க வழி காட்டி

யுள்ளது; ஆனால் நமது உள்ளத்திற்கும் ஆன்மா விற்கும் உணவு தரத் தவறிவிட்டது. அதனால் நாம் நம் முன்னோரைவிட மிகுந்த சுகவாசிகளாக இருப் பினும் அறிவிலும் ஆன்ம வளர்ச்சியிலும் மிக இழிந்த நிலையில் இருக்கின்றோம். ஆதலின், விஞ் ஞான வளர்ச்சியும் ஆன்ம உணர்ச்சியின் வளர்ச்சி யும் ஒன்றுபட்டுச் சென்றுகொண்டே இருத்தல் வேண்டும். அந்த நிலையே 'நாகரிக நிலை' ஆகும். இரண்டில் எது குறையினும் 'முற்றிய நாகரிகம்' ஆகாது" என்று குறித்திருத்தல் அறிஞர் உளளத் தைக் கவர்வதாகும்.

இராதாகிருஷ்ணன் தாய்மொழி தெலுங்கு. அதனால் அவர் மேனாடுகளில் புகழ் பெற்றதை அறிந்து தெலுங்கர் மகிழ்ந்தனர். அவர் தாய்நாடு மீண்டதும் அவர்கள் அப்பெரியாரை 1927-ல் வரவேற்று உபசரித்தனர்; ஆந்திரப் பல்கலைக் கழ கத்தின் சார்பாக அவருக்கு டி. லிட். (D. Litt)*, என்னும் கௌரவப் பட்டத்தை அளித்து மகிழ்ச்சி கொண்டனர். தாம் பிறந்த மாகாண மக்கள் தம் மைப் பெருமைப்படுத்தியதைக் கண்ட டாக்டர் இராதாகிருஷ்ணன் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்கத்தாப் பல் கலைக் கழகத்தில் முன்போலவே பேராசிரியராக இருந்தார். இப்பொழுது ஆக்ஸ்போர்டுப் பல்கலைக்

* Doctor of Literature.

கழகத்தில் சமயப்பேராசிரியர் பதவி காலி ஆயிற்று. அப்பதவிக்கு வருமாறு இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு அழைப்பு வந்தது. டாக்டர் இராதாகிருஷ்ணன் அதனை ஏற்றுக்கொண்டார்.

அவர் இங்கிலாந்து வருகிறார் என்பதை அறிந்ததும் முன்போலவே பலர் அவரை வந்து தத்தம் கழகங்களில் பேசுமாறு வேண்டினர். அவர் இரண்டொன்றை மட்டும் ஏற்றுப் பேசினர். லண்டன் நகரிலும் மான்செஸ்டரிலும் 'ஹிப்பர்ட் சொற்பொழிவுகள்' என்ற தலைப்பில் பேசினர். பேரறிஞர் பலர் குழுமி இருந்தனர். லண்டன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நமது டாக்டரை நன்ருகப் பாராட்டினர்.

டாக்டர் செய்த சொற்பொழிவுகள் ஒரு நூலாக வெளிவந்தன. அந்த நூலின் ஆயிரக் கணக்கான பிரதிகள் விற்பனை ஆயின. அந்நூல் மனிதனுக்குக் கடவுள் உணர்ச்சியையும் கடமை உணர்ச்சியையும் தெளிவான முறையில் ஊட்டுகின்றது; எதிர் கால உலகத்தில் மனிதன் வாழ வேண்டும் முறையையும் வகுத்துக் கூறுகின்றது. அந்நூலினைப் படித்த மேனாட்டு அறிஞர் நமது டாக்டரது சமய அறிவு நுட்பத்தை வியந்து பாராட்டினர்.

ஆங்கிலேயர் அறிஞரைப் பாராட்டலில் பின்னடையாதவர்; அறிவுக்கு மதிப்பைத்தரும் மேன்மக்கள். அதனல் அவர்கள் இராதாகிருஷ்ணனது மதி

நுட்பத்தைக் கண்டதும் அவரை நன்கு பாராட்டி மதிப்பித்தனர்; அவரைத் தம் கோவிற் கூட்டங்கள் முன்னிலையில் பேசுமாறு வேண்டினர். டாக்டர் அதற்கு இசைந்து சமய உபதேசம் பல இடங்களிற் செய்துள்ளார். "ஒவ்வொருவருக்கும் நியாயம் வழங்குதல், எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்தல், ஏழைகளிடம் அன்பும் ஆதரவும் காட்டல் என்பன சிறந்த சமயக் கொள்கைகள் ஆகும். இவை பின் பற்றப்படின், உலகில் பூசல்கள் நடைபெற இடம் இல்லை அல்லவா?" என்பது அவரது கோவிற் சொற்பொழிவின் ஒரு பகுதி.

டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திற் செய்த சொற்பொழிவுகளும் வெற்றிகரமாக முடிந்தன. பேராசிரியர்கள் அவர் பேச்சைப் பலபடப் பாராட்டினர். நமது டாக்டர் கீழ்நாட்டுச் சமய அறிவும் மேனுட்டுச் சமய அறிவும் வாய்க்கப்பட்டவர். அதனுல் இரண்டையும் ஒப்பிட்டு விளக்கிப் பேசுகையில் அம் மேனுட்டறிஞர் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். மேலும், டாக்டருடைய அன்புகுழைந்த பேச்சு, நடை, உடை, பாவனைகள் எல்லாம் அவர்கட்கு மிகுந்த பற்றை உண்டாக்கின. அவர்கள் அவரை இந்தியாவிலிருந்து வந்த சமய தூதராகவே எண்ணினர்; "டாக்டர் இராதாகிருஷ்ணன் இங்கிலாந்து வந்து இந்து சமயக் கொள்கைகளைப் பேசுவது போலவே இங்குள்ள சமய அறிஞர் இந்தியா சென்று கிறித்தவ சமயக் கொள்கைகளைப்

பேசுதல் நல்லது. அப்பொழுதுதான் இரண்டு நாடு கட்கும் உள்ள கருத்து ஒற்றுமை பலப்படும்; உறவும் வன்மை பெறும்" என்று தமக்குட் பேசிக் கொண்டனர். சுருங்கக் கூறின், நமது டாக்டருடைய சொற்பொழிவுகள் வெள்ளையர் இந்தியாவைப் பற்றிக் கொண்டிருந்த கீழான எண்ணத்தை மாற்றி விட்டன; அவர்கள், 'இந்தியா சிறந்த சமயக் கொள்கைகட்குத் தாயகம்' என்று எண்ணும்படி செய்தன என்னலாம்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் 1930-ல் இந்தியா மீண்டார். கல்கத்தாப் பல்கலைக் கழகம் அவரது சேவையைப் பாராட்டி அவர் ஆயுள் முழுவதும் பேராசிரியர் வேலையில் இருக்கலாம் என்று தீர்மானித்தது. இத்தகைய சிறப்பு மிகச் சிலருக்கே கிடைக்க வல்லது. எனினும், டாக்டர் அந்தப் பதவியில் இருக்கக் கூடவில்லை. காரணம் என்ன?

ஆந்திரப் பல்கலைக் கழகம் நன்கு வளர்ச்சியடைய வேண்டும். அது 1926-ல் ஏற்பட்டது; பெயரளவில் மாணவரைப் பரீக்ஷிக்கும் பல்கலைக் கழகமாக இருந்ததே தவிரக் கற்பிக்கும் பல்கலைக் கழகமாக இருக்கவில்லை. ஆதலின் அதனை வளம்பெறச் செய்யத் தக்க துணைவேந்தர் ஒருவர் தேவை. அவர் பல பல்கலைக் கழகங்களைப் பார்த்தவராக - அவற்றின் நடைமுறைகளை நன்கு அறிந்தவராக - இருத்தல் வேண்டும்; கல்லூரி மாணவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்பவராக இருத்தல் வேண்டும்;

சிறந்த பேச்சாற்றல், சிறந்த பட்டங்கள், மாணவரைத் தம்பால் ஈர்க்கும் மதி வன்மை, நாட்டு மக்கள் மதிக்கத்தக்க தகுதி இவை அனைத்தும் பெற்றவராக இருத்தல் வேண்டும். இவற்றுடன் அரசாங்கத்தார் மதிக்கும் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும். இத்துணையும் ஒருங்கே பெற்ற அறிஞர் இராதாகிருஷ்ணனே என்று ஆந்திரப் பல்கலைக் கழகத்தினர் தீர்மானித்தனர்; 'நம்மவரைக் கல்கத்தாவில் சேவை செய்ய விட்டு நாம் தவித்தல் தவறு; அவரை உடனே வரவழைப்போம்' என்று முடிவு செய்தனர்; டாக்டருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

அவர் தமது மாகாணத்தார் வேண்டுகோளை எங்ஙனம் மறுக்க முடியும்? அதனுல் டாக்டர் கல்கத்தா வேலையை விட்டு ஆந்திரப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக வந்தார்; 1931 முதல் 1936 வரை அவ்வேலையைத் திறம்படச் செய்தார்.

உலகப் புகழ் பெற்ற டாக்டர் இராதாகிருஷ்ணனுக்கு அரசாங்கத்தார் 'சர்' என்னும் கௌரவப் பட்டத்தை அளித்து மகிழ்ந்தனர். அவர் தம் பல்கலைக் கழகத் துணை வேந்தராக வந்துள்ளார் என்பது கேள்விப்பட்டதும் ஆந்திர இளைஞர் பல்கலைக் கழகத்தை ஆதரிக்கத் தொடங்கினர். அவரைப் போலத் தாமும் சிறந்த அறிஞராக வேண்டும் என்று மாணவர்கள் பலர் முயன்றனர்; ஆராய்ச்சிக்

கூடங்களில் மாணவர் தொகை பெருகியது. பல்கலைக் கழக ஆசிரியர் புதிய ஊக்கம் கொண்டவராய் நன்றாக வேலை செய்தனர்; இராதாகிருஷ்ணன் தூண்டுதலால் மாணவர் கழகங்கள் நன்றாக வேலை செய்தன; மாணவர் பல பொருள் பற்றி ஊக்கம் கொண்டு பேசிப் பழகினர்; போட்டிப் பேச்சுகளும் நடைபெற்றன; உடற்பயிற்சிக் கூடங்கள் பெருகின. 'அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்' என்பது போலத் துணை வேந்தர் ஊக்கம் காட்ட, மாணவர் பல துறைகளிலும் ஊக்கம் பெற்று உடலையும், அறிவையும் வளர்க்கலாயினர்.

1936-ல் டாக்டர் - சர் - இராதாகிருஷ்ணனுக்கு ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திலிருந்து அழைப்பு வந்தது. அங்குக் கீழ்நாட்டுச் சமயப் பேராசிரியர் பதவி காலி ஆயிற்று. அதனை இராதாகிருஷ்ணனுக்கு அளிக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தார் விரும்பினர். அப்பொறுப்புள்ள பதவியைப் பெற்ற முதல் இந்தியர் நமது டாக்டரே ஆவர்.

தமது நாட்டுப் பேரறிஞர் ஆக்ஸ்போர்டுக்குப் போகிறார் என்பதை அறிந்ததும் ஆந்திர மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. ஆந்திர நாட்டுக் கழகங்களும், அறிஞர் சங்கங்களும், கல்லூரிக் கழகங்களும், பொதுமக்கள் சங்கங்களும் அவருக்குப் பல விருந்துகள் நடத்தி வாழ்த்துக் கூறின. இராதாகிருஷ்ணன் அப்பொழுதுதான் தம்

மாகாண மக்கள் தம்மிடம் கொண்டுள்ள பற்றை உள்ளவாறு உணர்ந்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

நமது டாக்டர் ஆக்ஸ்போர்டை அடைந்து முன்போலவே தம் தாய் நாட்டின் சமயச்சிறப்பை மேனாடுகளில் அறியுமாறு செய்தார். அவர் கீழ் நாட்டுச் சமயங்களும், மேனாட்டுக் கருத்துகளும் என்பது பொருளாகக் கொண்டு பல சொற்பொழிவுகள் செய்தார். அவை ஒரு நூலாக வெளியிடப் பட்டன. அந்நூற் பிரதிகள் ஆயிரக் கணக்கில் விற்பனை ஆயின. அவற்றைப் படித்த அறிஞர், 'இது மேனாட்டு நாகரிகத்தில் ஒரு மாறுதலைச் செய்யும் நூலாகும். சிறந்த பேரறிஞர் நுண்ணறிவிலிருந்து வெளிப்போந்த அரிய கருத்துக்களைக் கொண்ட இந்நூல் இயந்திர நாகரிகத்தில் உழலும் நம்மவர்க்குத் தேவையானதே' என்று பத்திரிகைகளில் பாராட்டி எழுதினர்.

பிரிட்டிஷ் அறிஞர் சங்க ஆண்டு விழாவில் 1938-ல் நமது டாக்டர் 'கௌதம புத்தர்' என்பது பற்றிப் பேசினார். புத்தர்க்கு முன் நாடு இருந்த நிலை--சமூக நிலை --- புத்தர் வரலாறு — அவர் துறவு பூண்ட காரணம் — அவருடைய உபதேச மொழிகள் — அவர் உண்டாக்கிய சங்கம் — அதன் தேவை — அதன் விதிகள் — அவர் உலகத்திற்குச் செய்த மாபெருந்தொண்டு என்பவற்றை மிகத்

தெளிவாகக் கேட்பவர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு எடுத்துப் பேசினார். அச்சொற்பொழிவினைக் கேட்ட பெருமக்கள் நமது டாக்டரை அகமும், முகமும் மலர வாழ்த்தினர்.

பிரிட்டிஷ் அறிஞர் சங்கத்தில் பேசும் பேறு கிடைத்தல் அரிது. அதனில் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தல் மிக்க அருமை. ஆயினும் நமது டாக்டரது பேரறிவுத்திறனைக் கண்டு வியந்து அறிஞர் சங்கத்தார் அவரை ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்துச் சிறப்புச் செய்தனர் எனின், நமது தாய்நாடு பெருமை பெற்றதே அன்றோ? உலகம் போற்றத்தக்க அறிஞர் மணிகள் இந்தியாவிலும் இருக்கின்றனர் என்பதை மேனட்டார் நன்கறிந்தனர் என்பதற்கு அஃது ஒரு சிறந்த சான்றாகும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் விருப்பம் கீழ்நாடுகட்கும் மேல் நாடுகட்கும் நெருங்கிய நட்பை உண்டாக்க வேண்டும் என்பதே ஆகும். அதற்காகவே அவர் அரும்பாடுபட்டார். ஒவ்வொரு மனிதரும் மேல் நாட்டு விஞ்ஞான அறிவையும், கீழ் நாட்டுச் சமய அறிவையும் பெறவேண்டும் என்பது அவர் எண்ணம். அவர் இதனையே தம் சொற்பொழிவுகளில் வற்புறுத்தி வந்தார்; 'இந்திய நாட்டுச் சமய அறிவுச் செல்வத்தை மேனடுகளில் எடுத்துப் பயன்படுத்த வேண்டும்' என்று மேனட்டுக் கூட்டங்களில் பலபடியாகப் பேசியுள்ளார். அவரது இந்த நல்ல நோக்கத்தைப் பாராட்டிய அரசாங்கத்தார்

அவரை ஜினிவாவில் கூடிய எல்லா நாட்டு அறிஞர் சங்கத்திற்கு இந்தியாவின் சார்பில் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பினர். இராதாகிருஷ்ணன் ஒன்பதாண்டுகள் அச்சங்கத்தில் உறுப்பினராக இருந்து, இந்தியாவின் சமயச் சிறப்பையும், ஒழுக்கச் சிறப்பையும் பல அரிய சொற்பொழிவுகள் வாயிலாக விளக்கி வந்தார்.

---

4. இந்தியாவில் சொற்பொழிவுகள்

சர் இராதாகிருஷ்ணன் மேனாடுகளில் சொற்பொழிவுகள் செய்ததுடன் நின்றுவிடவில்லை. அவர் இந்தியாவில் பல பல்கலைக் கழகங்களில் பட்டமளிப்பு விழாக்களின் போதும் பிற சமயங்களிலும் அரிய பெரிய சொற்பொழிவுகள் செய்துள்ளார். அவர் 1927-ல் ஆந்திரப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் 'பட்டதாரிகள் கடமை' என்பது பற்றி உருக்கமாகப் பேசினர். 'இந்தியாவின் எதிர் கால நன்மைக்கு வேலை செய்வதாயின் அதன் இறந்த கால வரலாற்றைப் படித்தறிய வேண்டும். நீங்கள் நாட்டுமக்கள் முன்னேற்றத்துக்கு உழைப்பது உண்மையாயின் கைத்தொழிலாளிகளையும், உழவர்களையும் ஆதரியுங்கள்; அவர்கட்கு உதவிசெய்யுங்கள். ஒழுக்கம் விழுப்பம் தரலால் உயிரினும் மேலாக அதனை மதியுங்கள்" என்று அறிவுரை கூறினர்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் 1930-ல் மைசூர்ப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் 'கல்வியும் தேசியமும்' என்பது பற்றி அரிய சொற்பெருக்கு ஆற்றினார். பின்னர்த் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டிலும் ஒவ்வோர் இந்தியப் பல்கலைக் கழகத்திலும் பட்டமளிப்பு விழாவிற் சொற்பொழிவு செய்தார். அவர் பட்டம் பெற்ற மாணவர்க்குச் செய்த சொற்பொழிவுகளின் சுருக்கம் என்ன ?

"பட்டம் பெற்ற மாணவர்களே! நீங்களே இந்தியாவின் எதிர்காலச் சிற்பிகள். இந்தியா உங்கள் கையிற்றான் ஒப்படைக்கப்படும். அதனை உங்கள் முயற்சியால் மேனிலைக்குக் கொண்டுவரத் தக்கவரும் நீங்களே. அல்லது உங்கள் ஊக்கத் தளர்ச்சியால் அதனைக் கீழ் நிலைக்குக் கொண்டு வருபவரும் நீங்களே. நீங்கள் நம் தாயகத்தின் பழம் பெருமையை எண்ணி, உள்ளத்தில் உரங் கொண்டு, பொது நலத்தொண்டு செய்ய முன்வர வேண்டும்; ஒன்றுக்கும் பற்றாத ஜாதிச் சண்டை, மதச் சண்டைகளில் உள்ளத்தைச் செல்லவிட்டு வாழ்நாளை வீணாக்க வேண்டா; நாம் உலகில் வாழும் நாட்களோ மிகச்சில. ஆதலின் அவற்றைப் பயனுடையனவாக்க வேண்டும்; நாட்டு முன்னேற்றத்துக்கான நற்பணிகளைப் புரியுங்கள்; நம் ஜனத்தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண் மணிகளைப் படிக்க வையுங்கள்; கல்வி வாசனையே அறியாத கிராமவாசிகட்குக் கல்வித் தொண்டு

செய்யுங்கள்; பட்டம் பெற்ற நீங்கள் நம் நாட்டுக் கிராமங்களிற் குடியேறி, உங்கள் சகோதரராகிய கிராம வாசிகட்குக் கல்வியறிவை ஊட்டுங்கள்; சாத்திரீய முறையில் பயிரிடச் செய்யுங்கள்; கிராமக் கைத்தொழில்களைப் பெருக்க உதவி புரியுங்கள்; கிராமங்களைச் சுகாதார முறையில் வைத்திருக்கத் தூண்டுங்கள்; கிராமங்களில் நூல் நிலையங்கள் தோன்ற வேண்டும். உண்மைக்கு மதிப்பு ஆன்ம சுத்தி, ஆன்ம அமைதி இவை கிராமவாசிகட்கு உண்டாகுமாறு ஆன்றோர் வரலாறுகளையும், நல்லுரைகளையும் எடுத்துக் கூறுங்கள். இத்தகைய நற்பணிகளே நீங்கள் செய்யத் தகுவன. கேவலம் வயிறு வளர்ப்பதற்காகக் குமாஸ்தா வேலையை வேட்டையாடித் திரிய வேண்டாம். மனிதன் உணவுக்காக மட்டும் வாழ்வில்லை; உள்ளம், ஆன்ம அமைதி, பிறர்க்குத் தொண்டு இவற்றுக்காகவே சிறப்புற வாழ்கிறான். இறைவன் உள்ளத் தூய்மையைக் கவனிக்கிறானே தவிரப் பணத்தையோ, ஜாதியையோ கவனிக்கவில்லை. ஆதலால் மனிதனால் உண்டாக்கப் பட்ட ஜாதிகளைக் கவனியாது எக்குலத்தாராயினும் அவர்களை உங்கள் உடன் பிறந்தாராகக் கருதி, அவர்கள் முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம் என்பதையும எண்ணிப் பொதுமக்கட்குத் தொண்டு செய்வதையே பெருநோக்கமாகக் கொண்டு நல் வாழ்வு வாழுங்கள். உங்களை இறைவன் ஆசீர்வதிப்பான்.''

இந்தியாவில் உள்ள சமயதத்துவ அறிஞர் மகாநாடு ஒன்று சென்ற (1947) டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி காசியிற் கூடியது அப்பொழுது வரவேற்புக் கழகத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பேசியது கவனிக்கத் தக்கது.

“நமது தாய்நாடாகிய இந்தியா உரிமை பெற்றுள்ள இந்தக் காலத்தில் நாம் உரிமை நாட்டு மக்களாக இங்குக் கூடியிருத்தல் மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. உரிமை பெற்ற இந்தியா இன்று மதப் போரில் மமதையுடன் இறங்கி ஈவு இரக்கமின்றி நாட்டைப் படுகுழியில் தள்ளிவருகின்றது. மனிதத் தன்மை - அன்பு - அருள் - சகோதர உணர்ச்சி - அறநெறி என்பவற்றை உலகிற்கு அறிவுறுத்தும் பெருமை பெற்ற இந்நாடு இன்று மதவெறியில் கொக்கரித்து லக்ஷக்கணக்கான மக்களைப் பலியிடுதல் கொடுமையினும் கொடுமை! நாம் சமூகப் புரட்சியில் சீர்திருத்தம் அடைந்தாற்றான் நாடு உருப்பெறும்..................இத்தகைய துன்ப நிலையில் சமய தத்துவ அறிஞர் கடமை யாது? ஆன்ம விடுதலை, சமூகக் கடமை என்னும் இரண்டுமே அவர் கொள்கைகளாக இருத்தல் வேண்டும். சமய தத்துவ அறிஞன் தன்னளவில் ஆன்ம விடுதலைக்குப் பாடுபடுதலைவிடத் தான்வாழும் சமூகத்தை அந்நெறிக்குக் கொண்டு செல்லல் சிறந்தது. மக்கட்கு ஆன்ம உணர்வு தேவை. இன்றைய விஞ்ஞான அறிவு

வளர்ச்சி உலக அழிவினை நாடுவதை நிறுத்தி, உலக ஆக்கத்திற்குப் பயன்படுமாறு செய்ய வேண்டும். மனிதன் தன் உள் உணர்ச்சியைச் சோதித்துப் பக்குவப்படுத்த வேண்டும். அதினின்றும் புறப் படும் தூய கருத்துக்களின்படி நடந்து அவற்றைப் பிறர்க்கும் எடுத்துரைத்து நல்வழிப்படுத்த வேண் டும். மனிதன் இவ்வுலக வாழ்க்கைக்கும் ஆன்ம, வளர்ச்சிக்கும் சேர்ந்து பாடுபட அறிதல் வேண்டும். இன்று முன்னதற்குமட்டுமே மனிதன் பாடுபடு கிருன்; அதனல் முழுவளர்ச்சி இன்றி மாண்டொழி கிருன்; இரண்டும் கைவரப்பெறின் அவன் வாழ்வு சீர்பெறும். அவ்வாழ்வே உலகத்தில் அமைதியை நிலைநாட்டும். "யாவரும் கேளிர்" என்ற எண்ணம் உண்டாகும் நிலையிற்ருன் மனித சமூகம் அன்புற்று இன்ப வாழ்வு வாழமுடியும். அதற்கு ஆன்ம வளர்ச்சி தேவை. மக்கள் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும். எதனையும் எண்ணிப் பார்த்துச் செய்யும் பழக்கம் வலுப்பெறின் தீமைகள் குறை யும். மனிதன் தன்னைப்போல மற்றவனை எண்ணு வான்; அன்புடன் நடந்துகொள்வான். அப் பொழுது உலகத்தில் அன்பு வாழ்க்கைக்கு இட முண்டு."

5. குண நலன்கள்.

டாக்டர் சர் இராதாகிருஷ்ணன் இப்பொழுது ஆக்ஸ்போர்டுப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்து வருகின்றார். அப்பெரியாரை விரும்பி ஏற்றுக்கொள்ளாத பல்கலைக் கழகம் உண்டா? அப்பேரறிஞர் இந்தியத் தாயின் தவப் புதல்வர் சிலருள் ஒருவர் ஆவர். அவர் சிறந்த சிந்தனையாளர்; தனித்திருந்து சிந்திப்பதையே சிறு வயதிலிருந்து மேற்கொண்டவர். நினைக்க நினைக்க உள்ளப் பயிற்சி உரம் பெறும். அவர் அப்பழக்கத்தால் சமய சம்பந்தமான பல சிக்கல்களைச் சிக்கறுத்து உண்மை கண்டவரானர்; அதனாற்றான் மிகக் கடினமான சமய சம்பந்தமான செய்திகளையும் மிகவும் தெளிவாகப் பிறர்க்கு எடுத்துக் கூறும் பேராற்றல் பெற்றார்.

அவர் தனித்திருந்து வாசிப்பதில் பெரு விருப்பம் கொண்டவர். அவரது பெரும் படிப்புச் சமயத் தொடர்பானது மட்டும் அன்று. அவர் நாட்டு முன்னேற்றத்துக்கான துறையில் பல நூல்களையும் நன்றாகப் படித்தவர்; சமய நூல்களை மிகுதியாகப் படித்தவர்; எல்லா நாட்டுச் சமய நூல்களையும் நன்றாகப் படித்து ஆராய்ச்சி செய்தவர்; பல சமயக் கொள்கைகளையும் ஒப்பிட்டுப் பேசி விளங்க வைக்கும் ஆற்றல் பெற்றவர். அவர் விஷயங்களை நன்றாக விளக்கிக் கொண்டிருப்பதாற்றான் பிறர்க்கு நன்

ருகப் புரியும் முறையில் பேசும் ஆற்றல் பெற்றிருக்கிறார்.

நமது டாக்டர் ஏழை - பணக்காரர், முதலாளி - தொழிலாளி, கற்றவர்-கல்லாதவர் என்ற வேறுபாடு இன்றி, மக்கள் எல்லோரிடமும் அன்பாகப் பழகினர்; தாம் பெரிய படிப்பாளி என்னும் எண்ணம் அவர் உள்ளத்தில் இல்லை; அவர் கர்வப்பட்டதும் இல்லை. அவர்

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற வள்ளுவர் கருத்தை அடிக்கடி வற்புறுத்துவார். அப்பெரியார் தாம் உதவி செய்வதை உதவி பெறுபவர் அறியாத வகையில் உதவும் இயல்புடையவர். இங்ஙனம் உதவி செய்பவரைக் காணல் அரிதினும் அரிதன்றோ? அப்பெரியார், அனைவர்க்கும் தாழ்மையாகவே பதில் கூறும் பண்புடையவர்; எவரிடமும் சினத்துடன் பேசி அறியாதவர்; அடக்கத்தை அணிகலனைக் கொண்டவர்; எப்பொழுதும் எளிய உடைகளையே உடுத்துபவர்; அரையில் ஓர் வேட்டி, மேல் ஒரு கோட், தலையில் பாகை இவையே அவர் உடை விசேடம். அரசரைக் காண்பதாயினும், ஆண்டியைக் காண்பதாயினும் இந்த ஒரே உடை தான். ஆடம்பர உடைகளை அவரிடம் காணல் இயலாது.

இராதாகிருஷ்ணன் நாட்டுப் பற்று மிக்குடையவர். அவரது கூரிய அறிவினையும், நாட்டுப் பற்றையும் நன்கு பாராட்டிய நாட்டுத் தலைவர்கள் அவரை இந்திய அரசியல் அமைப்புக் குழுவில் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர். அப்பெரியார் அக்குழுவில் இருந்து இந்திய அரசியல் அமைப்பு முறையைப் பற்றிப் பல நுணுக்கங்களைத் தெளிவாக வற்புறுத்திப் பேசினார்.

1947 ஆகஸ்டில் இந்தியா விடுதலை பெற்றது. விடுதலைக் கொண்டாட்டத்தன்று அவர் முழு இந்திய ஒலிபரப்பில் பேசிய பேச்சு உள்ளத்தில் இருககத் தக்கது: "நமது தாய்நாடு இன்று விடுதலை பெற்றது குறித்து நாம் விழாக் கொண்டாடுகிறோம். இந்த நாளில் — (1) 'இந்த விடுதலை நிலைபெற நாம் பாடுபடவேண்டும்; அதற்கு அடிப்படையாக இந்தியர் அனைவரும் ஒரு தாயீன்ற மக்கள் என்னும் எண்ணத்தைச் செயலளவில் மெய்ப்பித்துக் காட்டவேண்டும்; (2) நம் நாட்டுப் பெரும்பாலான மக்கள் ஏழைகள்; கிராமவாசிகள்; கல்வியறிவு அற்றவர்கள். அவர்களை மேனிலையில் உயர்த்தப் பாடுபடவேண்டும்; (3) இந்தியக் கைத்தொழில் - விவசாயம் - வாணிகம் இவை வளர்ச்சி பெறப் பாடுபடுவோம்; (4) தொன்று தொட்டு இந்தியாவின் பெருமைக்குக் காரணமாக விளங்கிவரும் அறக் கொள்கைகளைக் கைப்பற்றி வாழ்க்கை நடத்துவோம்' என்று நாம் சபதம் செய்து

கொள்ள வேண்டும். உரிமை பெற்ற தாய் நாடு வாழ்க!"

போர்க் கருவிகளைக் கொண்டு போராடும் வன்மை பெற்ற பிரிட்டிஷாரிடம் போர்க் கருவிகள் கொண்டு போராடாமல் அறவழியிற் போர் புரிந்து நாட்டுக்கு உரிமை தேடித்தந்த காந்தியடிகளிடம் நமது இராதாகிருஷ்ணன் மட்டற்ற அன்பு கொண்டவர்; அவரது அருள் உரையே உலகத்தை உய்விக்கும் என்ற நம்பிக்கை கொண்டவர்; அதனல் அவர் உரைகளை எல்லாம் நன்கு கவனித்து அவரது வாழ்க்கையை நன்கு பரிசோதித்து அவரது சமய தத்துவக் கொள்கைகளைப் பற்றி அரிய நூல் ஒன்றை வரைந்தார்.

சென்ற ஜனவரி மாதம் உலகம் போற்றும் காந்தியடிகள் சுடப்பட்டது கேட்டு நமது இராதாகிருஷ்ணன் திடுக்கிட்டுவிட்டார்; கண்ணீர் மல்கினர். அப்பொழுது அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட சொற்கள் இவை: "காந்தியடிகள் தாக்கப்பட்டது கேட்டுத் திடுக்கிட்டேன். ஒழுங்கற்றதும் எண்ண முடியாததுமான செயல் நிகழ்ந்துவிட்டது. மிகத் தூய்மையான, மிக உயரிய நோக்கம் கொண்ட - மக்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட உத்தமர் சுடப்பட்டார் என்பது சாக்ரடிஸ் விஷம் ஊட்டப் பட்ட கொடுமையிலிருந்தும், இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்த கொடுமையிலிருந்தும் நாம் இன்றளவும் திருத்தம் பெறவில்லை என்பதைத்

தான் காட்டுகிறது. காந்தியடிகள் பழைய-தூய நாகரிகத்தின் கடைசி அடையாளம் என்னலாம். அந்த அடையாளம் மறைந்துவிட்டது. அவரது பூத வுடல் அழிந்தது. ஆயினும் அவரது தூய ஒளி உடம்பு-தெய்வீக சக்தி வாய்ந்த உண்மை - அன்பு என்பவற்றிலிருந்து வெளிப்பட்ட ஒளி உடம்பு என்றும் நிலைபெற்றிருக்கும். உலகம் மகாத்மாக்களை மதிக்கும் காலம் எப்பொழுது வரும்? காந்தியடிகள் தம் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்த அன்புக்கும், உண்மைக்கும் உலகம் மதிப்புத் தரும் நாளிற்றான் அமைதி என்பது உலகத்திற் குடி கொள்ளும்.''

'உண்மைக் கல்வி அறிவை வளர்க்க வேண்டும்; பிழைக்க வழி காட்ட வேண்டும்; பிறர்க்குப் பணி செய்ய உதவியும் செய்ய வேண்டும். இம்மூன்றையும் கற்பிப்பதே மெய்க்கல்வி ஆகும்' என்பது அப் பெரியார் கருத்தாகும். 'இக்கருத்தை இந்தியர் முன்னாளில் கொண்டிருந்தனர். இக்கால மக்களும் இக் கருத்தைக் கொண்டு நடைமுறையில் பள்ளிகளை அமைத்து வேலை செய்யின் நாடு நன்னிலை பெறும். இந்தியர் உண்மை மனிதராக வாழ முடியும்' என்று அவர் பல இடங்களில் பேசியுள்ளார். அப்பெரியாரது பொன்னுரை செயலுக்கு வரும் நாளே இந்தியர் வாழ்வு பயன் பெறும் நன்னாள் ஆகும். இங்ஙனம் சமய தத்துவப் பேரறிஞராகவும் ஒழுக்க சீலராகவும் இருந்து நமது தாய் நாட்டின் சிறப்பை உலகறியச் செய்து வரும் இராதாகிருஷ்ணன் அவர்கள் பல்லாண்டு வாழ இறைவன் திருவருளை இறைஞ்சுவோமாக!

II. தண்டு கேசவ கார்வே

1. இளமைப் பருவம்

கார்வே பெண்களுக்கு உழைக்கும் பெரியார்; அவர்கள் கல்விக்குத் தம் ஆயுள் முழுவதையும் அர்ப்பணம் செய்த வீரர்; மறுமணத்தைச் செய்து காட்டிய தீரர்; அப்பெரியார் வரலாறு சீர்திருத்தங்களை விரும்பும் இக்காலத்திற்கு ஏற்றது; இளைஞர் எதிர்கால வாழ்க்கைக்குப் பெருந்துணை புரிவது.

கார்வே பம்பாய் மாகாணத்தில் இரத்தினகிரி ஜில்லாவில் உள்ள மூரத் கிராமத்தைச் சேர்ந்தவர்; அக்கிராமத்தில் அவர் முன்னோர் பெருஞ் செல்வராக இருந்து புகழ் பெற்றவர்கள். மஹாராஷ்டிர நாட்டை ஆண்டுவந்த பேஷ்வாக்கள் காலத்தில் லக்ஷக்கணக்கான ரூபாய்களைப் பெற்றிருந்தனர்; அரசாண்ட பெருமக்கட்குக் கடன் உதவியும் செய்து வந்தனர். அவர்கள் மூரத் கிராமத்தில் முடிசூடா மன்னராக விளங்கினர். ஆயினும், சீதேவி ஒரே இடத்தில் நீண்டகாலம் இராள் அல்லவா? அதனல் அவர்கள் செல்வம் பின்வந்த மரபினரால் பாழாக்கப்பட்டது; அதன் பயனாகக் கார்வேயின் தகப்பனர் எளியவராக விளங்கினர்; அக்கிராமச் செல்வரது நிலங்களைப் பார்வையிடும்

டாக்டர் இராதாகிருஷ்ணன்

வேலையில் இருந்தார். அவரது வருமானத்தைக் கொண்டு அவரது குடும்பம் மிக எளிய வாழ்க்கையை நடத்தவேண்டி யிருந்தது.

கார்வேயின் தாயார் பெருமக்கள் மரபில் வந்தவர். அந்த அம்மையார் தம் தந்தையாரைப் போன்ற உள்ளம் படைத்தவர். அத் தந்தையார் ஒழுக்கத்திற் சிறந்தவர்; கொடையிற் பெரியவர்; அஞ்சாமை, உண்மையுடைமை முதலிய நல்லியல்புகட்குப் பெயர் பெற்றவர். அவர் மகளாரான கார்வேயின் தாயார் அவ்வியல்புகள் அனைத்தையும் பெற்றிருந்தார். அவர் தம் கணவரது குறைந்த வருவாயைக் கொண்டு மன அமைதியுடன் இல்லறத்தை இனிதாக நடத்தி வந்தார்; கணவர் மன மகிழ நடந்து வந்தார். பிள்ளைகளைச் சிறு வயது முதலே நன்னடத்தையிற் செலுத்தி வந்தார்; மஹாராஷ்டிரப் பெருமக்களுடைய வீர வரலாறுகளையும் நல்லொழுக்க வரலாறுகளையும் படிப்படியாக ஊட்டிவந்தார். கார்வே அவரது தமையனார், சகோதரி ஆகிய மூவரும் அந்த அம்மையாருடைய அருங்குணங்களைப் பெற்றிருந்தனர். அவ்வம்மையார் இளமையில் கற்பித்த நல்லியல்புகள் அவர்கள் ஆயுட்காலம் முடிய இருந்தன—இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. பிள்ளைகள் மூவரும் தம் தாய் தந்தையாரைக் கண் கண்ட தெய்வமாகக் கருதிப் பயபக்தியுடன் நடந்துவந்தனர்.

கார்வே 1858-ல் பிறந்தவர். அவரும் அவர் தமையனாரும் மூரத் கிராமத்தில் இருந்த சிறிய பள்ளியிற் சேர்ந்து படித்தனர். கார்வே கிராமப் பள்ளியில் செவ்வனே படித்துவந்தார். அவர் காலையில் எழுந்து நீராடுவார்; பிறகு தம் பாடங்களைச் செவ்வனே படிப்பார்; ஆசிரியர் தந்துள்ள வீட்டு வேலைகளைச் (கணக்குப் போடுதல்-எழுதுதல்) செய்வார்; பின்னர் உணவுண்டு குறித்த நேரத்திற் பள்ளிக்குச் செல்வார்; பள்ளியில் பிள்ளைகளுடன் தாராளமாகப் பழகுவதில்லை. அவர் மிகுந்த கூச்சமுடையவர். அதனால் பிற நலங்கள் வாய்க்கப்பெற்றிருந்தும் அவர் பல காரியங்களில் விரைந்து முன்னேறக் கூடவில்லை. அவர் அக்குறையினால் பல சமயங்களில் துன்பப்பட்டார்.

அக்காலத்தில் 5-ஆம் வகுப்புத் தேர்வு அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வந்தது. அதற்குக் கார்வே தம்மைத் தயார் செய்துகொண்டார்; அதனில் தேறிய பிறகு ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர விரும்பினார். அக்காலத்துக் கிராமப் பிள்ளைகளது பேரவா அதுவாக இருந்தது. கார்வே அரசாங்கத் தேர்வுக்கு நண்பர் நால்வருடன் சதாரா என்ற ஊர்க்குச் சென்றனர். அங்குப் பரீக்ஷை நடத்திய ஆசிரியர்கள் கார்வேயுடன் சென்ற நண்பர்களைப் பரிசோதித்துப் பரீக்ஷை எழுத அநுமதித்தனர்; ஆனால் கார்வேயினிடம் இருந்த தகுதிப் பத்திரத்தைப் பார்த்த பிறகும் அவரது இளமையை எண்

ணித் தேர்வு எழுத அநுமதிக்கவில்லை. கார்வே சிறிது தைரியமாக அவர்களுடன் வாதிட்டிருந்தால், எளிதில் அநுமதிக்கப்பட்டிருப்பார். பாவம்! அவரது கூச்சம் அவரை மௌனியாக்கிவிட்டது. அதனால் அவர் பரீக்ஷை எழுதாமல் தம் ஊர்க்கு வறிதே திரும்பினார்; அடுத்த ஆண்டு நடந்த பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றார்.

அரசாங்கத் தேர்வில் தேர்ச்சி பெற்ற கார்வே முன்னர் எண்ணியவாறு ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிற் சேரவில்லை; தம் கிராமத்தில் இருந்து கொண்டே ஆங்கிலம் கற்கத்தொடங்கினார். அந்த ஊரில் இருந்த செல்வர் ஒருவர் தம் மகனுக்கு ஆங்கிலம் கற்பிக்க ஓர் ஆசிரியரை அமர்த்தியிருந்தார். கார்வே அம்மகனுடன் சேர்ந்து ஆங்கிலம் கற்றார்; நாட்கள் செல்லச் செல்லச் செல்வர் மகனினும் சிறந்து விளங்கினார். அது கண்டு மகிழ்ந்த செல்வர் கார்வேயின் படிப்பில் கருத்தைச் செலுத்தினார்; அவருக்குப் பல ஆங்கில நூல்களை வாங்கித் தந்தார்; பிறரும் அவருக்கு உதவி புரியலாயினர். கார்வே மூரத் கிராமத்திற்கு வந்த ஆங்கிலம் கற்ற மாணவரை எல்லாம் கண்டு கண்டு பாடங்களைக் கேட்டுக்கொண்டார்; சிறிது காலம் இரத்தினகிரியில் இருந்து படித்தார். இங்ஙனம் பலவாறு உழன்று முயன்று பத்தாம் வகுப்புவரை படிக்கத்தக்க ஆங்கில நூல்களைப் படித்து முடித்தார்; கணிதத்திலும் போதிய பயிற்சி பெற்றார்;

பின்னர்ப் பம்பாயில் ஒரு பள்ளியில் சேர்ந்து படித்தார்; 1881-ல் மெட்ரிகுலேஷன் தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றார்.

கார்வே பி. ஏ. பட்டம் பெறவேண்டும் என்னும் அவாவினால் கல்லூரியிற் சேர்ந்தார். அவர் மிகுந்த ஏழை ஆதலால் கீழ் வகுப்பு மாணவர்க்குக் காலை மாலைகளில் பாடம் கற்பித்து ஊதியம் பெற்றார்; அந்த ஊதியத்தைக் கொண்டு தம் கல்லூரிச் சம்பளம் கட்டினார்; தமக்கு வேண்டிய பாடப்புத்தகங்களை வாங்கிக்கொண்டார்; உடைகளை வாங்கினார். பாவம்! மாணவப் பருவத்திற் பட்ட துன்பங்கள் பல. அவர் ஒருநாளைக்கு ஒருவர் வீட்டில் உணவு உண்டு வந்தார்; இங்ஙனம் ஏழு பெரியார்கள் அவருக்கு வாரத்திற்கு ஒருநாள் உணவு வழங்கி வந்தனர். கார்வேயின் கல்வி ஆர்வத்தைக் கண்டு பாராட்டிய பெருமக்கள் சிலர் அவரைத் தம் வீட்டுப் பிள்ளைகட்குப் பாடம் கற்பிக்குமாறு செய்து பொருள் உதவினர். இவ்வாறு உடலை வருத்தி உழைத்துப் பொருளீட்டிக் கார்வே படித்து வந்தார். அவர் சிறந்த ஒழுக்கம் உடையவர்; அதனால் தாம் வருந்திப் பெற்ற சிறு தொகையை வீணான காரியங்களில் செலவழிக்கவில்லை; எளிய வாழ்வு வாழ்ந்து கொண்டு சிறிது தொகையை மீதப்படுத்தி வந்தார். அவர் வண்டிகளிற் பிரயாணம் செய்வதில்லை; கல்லூரிக்கு நடந்தே செல்வார்; தம் ஆடைகளைத்

தாமே தினந்தோறும் துவைத்துக்கொள்வார்; வீட்டு வேலைகளைத் தாமே செய்துகொள்வார்.

கார்வே பதினைந்து வயது இளைஞராக இருந்த பொழுது அவருக்குத் திருமணம் நடந்தது. அவர் மனைவியார் நல்லவர்; எவரையும் கடிந்து பேசாதவர்; எல்லோரிடமும் அன்புடன் பழகும் இயல்புடையவர்; தம் கணவரது மாணவப் பருவத்தில் அவர் பொருளீட்டும் பாட்டைக் கண்டு அதற்கு ஏற்பச் சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி வந்தார். கார்வே தம் எளிய வாழ்வையே பெரு வாழ்வாகக் கருதும் மாண்புறு மனையாள் கிடைத்தமைக்கு மகிழ்ந்தார். இருவரும் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்தலாயினர். கார்வே கல்லூரியிற் படிக்கும்பொழுதே அவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அந்தப் பிள்ளைக்கு **ரகுநாதன்** என்று பெயரிட்டுப் பெற்றோர் வளர்த்து வந்தனர்.

இங்ஙனம் கார்வே கல்லூரியில் படித்துக் கொண்டே குடும்பத்தையும் நடத்தி வந்தார்; எனினும், அவரது முழுக் கவனமும் படிப்பின்மீதே படிந்திருந்தது. அவர் உடல் நலத்தையும் கருதாமல் இராப்பகலாகப் படித்தார்; பி. ஏ. வகுப்பில் மிகுந்த கவனம் செலுத்திப் படித்துவந்தார். அவருடைய முயற்சியையும் ஏழ்மையையும் உழைப்பையும் கவனித்த கல்லூரி ஆசிரியர்கள் அவரை மனமாரப் பாராட்டினர். இவ்வாறு அனைவர்

பாராட்டலுக்கும் தம்மை உரியவராக்கிக் கொண் டும் கார்வே, தம் கூச்சத்தை விட்டிலராய் அடக் கத்தையே அணிகலனகக் கொண்டிருந்தார். அவர் சிறிது முன்வரும் உணர்ச்சி பெற்றிருந்திருப் பாராயின், கல்லூரியில் எல்லாக் கழகங்களிலும் முதல்வராகத் திகழ்ந்திருப்பர் என்பதில் ஐய மில்லை. அவரை முன்னுக்குத் தள்ள மாணவர் முயன்றனர்; ஆசிரியரும் முயற்சி செய்தனர்; எனி னும் கார்வே பின்னணியில் இருந்தே செவ்வை யாகப் படித்து வந்தார்; கல்லூரித் தொடர்பான பல கழகங்களில் பங்கெடுத்து வேலை செய்ய வெட்கி னர்; எனினும், பி. ஏ. பட்டம் பெற வேண்டும் என் னும் தமது நோக்கத்தில் 1885-ல் வெற்றி பெற்ருர்.

---

2. பம்பாயில் ஆசிரியர் தொழில்

கார்வே பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு பம்பா யில் பல ஆண்டுகள் நிலைத்திருந்தார். அவர் அர சாங்கப் பள்ளியில் நிலையான ஆசிரியராக இருக்க விரும்பவில்லை; குடும்ப உதவிக்குத் தேவையான ஓரளவு பொருளைச் சம்பாதித்த பிறகு, கல்வி பரப் புந் தொண்டில் ஈடுபடவேண்டும் என்று விரும்பி னர். அவர் பல வீட்டுப் பிள்ளைகட்குத் தனித் தனியே பாடம் சொல்லிவந்தார். அதனல் அவ ருக்கு மாதம் 175 ரூபாய்க்குக் குறையாமல் ஊதியம் கிடைத்துவந்தது. அவரிடம் உயர்நிலைப்பள்ளி மாணவரும் கல்லூரி மாணவரும் படித்துவந்தனர்.

கார்வே காலையில் ஐந்து மணிக்கு வீட்டை விட்டுப் புறப்படுவார்; வீடுவீடாகச் சென்று பாடம் கற்பிப்பார்; பிறகு தாம் ஆசிரியராக இருந்த பள்ளிக்குச் செல்வார்; மாலையில் மீண்டும் பிள்ளைகள் வீடுகட்குச் செல்வார்; இரவு எட்டு மணிக்குத் தம் வீடு திரும்புவார். பாவம்! கார்வே தம் பள்ளிப் பருவத்தில் உழைத்ததைவிட மிகுதியாக இந்தப் பருவத்தில் உழைத்தார்; இரவு எட்டு மணிக்குமேல் தம் வீட்டில் இருந்த பிள்ளைகட்குப் பாடம் கற்பிப்பார்.

கார்வே ஏழை மாணவராக இருந்து கல்வி கற்றவர் அல்லவா? ஆகலின் அவருக்குக் கல்வியின் அருமை நன்கு தெரிந்திருந்தது. அதனால் அவர் தம் கிராமத்தில் இருந்த நெருங்கிய எளிய உறவினர் பிள்ளைகளைத் தம் வீட்டிற் கொணர்ந்து வைத்து இலவசக் கல்வி கற்பித்துவந்தார்; அவருள் கார்வே மனைவியாரின் கடைசித் தம்பி ஒருவன். பிள்ளைகள் மூவர் கார்வே வீட்டில் இருந்து கல்வி கற்றனர்; கார்வே அவர்கட்குப் பொருள் உதவி செய்தார்; தாம் பிறர் உதவியால் முன்னுக்கு வந்ததை எண்ணியே அப்பெரியார் பிற ஏழைப் பிள்ளைகளைத் தம் செலவில் முன்னுக்குக் கொணர விரும்பினர்.

அவர் அப்பிள்ளைகளுக்கு முதலிற் கற்பித்த பாடம் ஒன்று. அஃது, அவரவர் வேலைகளை அவர

வர் செய்யவேண்டும் என்பது. அதன்படி அப்பிள்ளைகள் காலையில் எழுந்து தங்கள் விகிதாச்சாரமான வீட்டு வேலைகளைச் செய்வர். அவர்கள் வீட்டை மெழுகுவர்; சமையல் செய்வர்; கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்கிவருவர்; அன்றாடச் செலவுகளை எழுதிவைப்பர். கார்வேயும் வீட்டை மெழுகுவார்; பெருக்குவார்; தண்ணீர் இறைப்பார்; சமையல் வேலை செய்வார். இங்ஙனம் அனைவரும் விருப்பத்துடன் அவரவர் விகிதாச்சாரப்படி வீட்டு வேலைகளைச் செய்துவந்தனர். இதனால் அப் பிள்ளைகள் இளம் பருவத்திலேயே வீட்டு வேலைகளில் நல்ல பயிற்சி பெற்றனர்; தன்னம்பிக்கையும் ஊக்கமும் கொண்டனர்.

கார்வேக்குப் **பாலகிருஷ்ண ஜோஷி** என்பவர் சிறந்த நண்பராவர். அவர் குடும்பமும் கார்வே குடும்பமும் ஒரே வீட்டில் ஒன்றாக இருந்தன. செலவுத் தொகையைப் பங்கிட்டுக்கொண்டு ஒத்த உணர்ச்சியினராக இரு குடும்பத்தாரும் இன்புற்று வாழ்ந்து வந்தனர். கார்வே தம் வீட்டுப் பிள்ளைகட்குத் தாம் செலவழித்துவந்த தொகையை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வந்தார்; எனினும், அவர் அவர்களிடம் அத்தொகையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டதில்லை.

கார்வே இளமை முதலே சீர்திருத்த உணர்ச்சி கொண்டவர்; இளமை மணத்தை அறவே வெறுத்த

வர்; அப்பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்; சாதி வேறுபாடுகள் ஒழிந்தாற்றான் இந்து சமூகம் ஒற்றுமைப்படும் என்னும் நம்பிக்கை கொண்டவர்; பெண்களுக்குக் கல்வி அளிப்பதாற்றான் பெண்கள உலகத்தை மேனிலைக்குக் கொண்டு வருதல் கூடும் என்பதை நம்பியவர். அவர் வாயளவில் சீர்திருத்தம் பேசுவோர் கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்லர்; சொல்வதைச் செய்கையிற் காட்டும் பெரியவர். அவர் தம் மனைவியார்க்கும் தங்கைக்கும் வீட்டிலேயே எழுதவும் படிக்கவும் கற்பித்து வந்தார்; அவர்களை நன்றாகப் பேசவும் பழக்கினார்.

கார்வே ஆடம்பரச் செலவுகளை வெறுத்தவர்; வீட்டுச் சடங்குகட்குச் செலவாகும் பெருந்தொகையைக் குறைத்து எஞ்சிய பணத்தைக் கல்விக்கு உதவவேண்டும் என்னும் கருத்துடையவர்; 'ஐயோ, அறிவற்ற-சமூக உணர்வற்ற பணக்காரர் - ஆடம்பரத்தைக் கருதித் தம் பொருளை வீணாகச் செலவழிக்கின்றனரே! அத்தொகையில் பாதியைக் கல்விக்கு உதவலாகாதா! இவ்வாறு செல்வர் செய்வராயின், நாட்டில் பல பள்ளிகள் தோன்றி அறியாமையை அகற்றுமே! செல்வர்க்கு ஏழைகள்மீது என்று கருணை பிறக்கும்? பூணூல் சடங்குக்கு எவ்வளவு பணம் வீணாக்கப்படுகிறது!' என்றெல்லாம் கூறி வருந்துவார். அப் பெரியார் தம் மூத்த மகனது பூணூல் மணத்தை மிகச் சுருங்கிய தொகையில் நடத்தி, எஞ்சிய தொகையை - 200 ரூபாய்களை-மராத்

சீர்திருத்தச் சங்கத்திற்கு உதவினர். எளியவரான கார்வேயின் தியாகவுணர்ச்சிதான் என்னே!

'இந்தியா கிராமங்கள் நிறைந்த நாடு. ஒவ்வொரு கிராமமும் நன்னிலையில் இருந்தால் இந்திய நாடு நன்னிலையை எய்தும்; ஆதலால் ஒவ்வொரு கிராமத்தாரும் சங்கம் ஒன்றைத் தாபித்துப் பொதுப்பணத்தைச் சேர்த்து, அக் கிராம முன்னேற்றத்துக்குரிய காரியங்கட்குச் செலவழிக்க வேண்டும்; ஏரி-குளங்களைப் பழுது பார்த்தல், பாதைகளைச் செப்பனிடல், பள்ளிக்கூடம் வைத்து நடத்தல், தெருக்களில் விளக்குப் போடுதல், கோவில்களையும் மடங்களையும் பழுது பார்த்தல், நூல் நிலயம் வைத்துக் கல்வியை வளர்த்தல் முதலிய நற்பணிகளைச் செய்யலாம்,' என்று கார்வே அவ்வப்போது தம் நண்பர்களிடம் கூறிவந்தார்; அந்த எண்ணத்தைச் செயலில் செய்துகாட்ட விழைந்து தம் கிராமத்தில் 'முரத் கிராமத்தார் சங்கம்' ஒன்றை ஏற்படுத்தினர்; பம்பாயில் பல வேலைகளில் ஈடுபட்டிருந்த முரத் கிராமத்தாரை ஒன்று சேர்த்தார்; அவர்கள் மாதக் கட்டணம் இவ்வளவு என்று செலுத்திவர உடன்பட்டனர். கார்வே அச்சங்கப் பொறுப்பை ஏற்றி நடத்திவரலானர்; பல சடங்குகளைக் குறைந்த செலவிற் செய்து, எஞ்சிய தொகையை அச் சங்கத்துக்கு உதவி வந்தார்.

கார்வே கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் அல்லவா? அதனால் அவர் முரத் சங்கத்தின் உதவி கொண்டு தம் கிராமத்தில் ஆரம்பப் பள்ளி ஒன்றைத் தோற்றுவித்தார்; அதற்குப் பிறகு ஆங்கிலப் பள்ளி ஒன்றையும் தொடங்கி வைத்தார்; கல்வி கற்பதன் தேவையை முரத் கிராம வாசிகட்குப் பல சொற்பொழிவுகள் மூலமாக விளக்கினார்; ஏழைப் பிள்ளைகளை இலவசமாகவே சேர்த்துக் கற்பிக்க ஏற்பாடு செய்தார்; பின்னர்த் தம் தாலூகா வாசிகளை ஒன்று சேர்க்கக் கழகம் ஒன்றை அமைத்தார்; ஆண்டுக்கு ஒரு முறை தாலூகாவின் ஒரு பகுதியில் அவர்களைக் கூட்டினார்; தாலூகா வாசிகள் அங்குக் கூடிப் பல பொது நலச் செயல்களைப் பற்றிப் பேச ஏற்பாடு செய்தார். 'இஃதொரு நல்ல முயற்சியே' என்று தாலூகா வாசிகள் அவரைப் பாராட்டினர். இங்ஙனம் கார்வே சிறிய அளவில் தம்மால் இயன்ற பொதுத் தொண்டுகளைப் புரிந்து வந்தார். அவர் பெயர் அவர் கிராமத்திலும், தாலூகாவிலும் நன்கு பரவியது. பொது மக்கள் அவரைப் 'பொது நல ஊழியர்' என்று பாராட்டிப் பேசினர்.

இங்ஙனம், கார்வே பம்பாயில் இருந்து தம் அன்றாட வேலைகளைச் செய்துகொண்டே தம் கிராம முன்னேற்றத்துக்கு உரிய வேலைகளையும் தாலூகா முன்னேற்றத்துக்குரிய வேலைகளையும் செய்து வந்தார். அவர் 1891 வரை பம்பாயில் இருந்தார். 1891-ல் அவரது ஆருயிர் மனைவியார் காலமா

ஞர். அதனால் கார்வே மனக் கவலை கொண்டு தம் வேலைகளைக் கவனியாது விட்டு விட்டனரா? இல்லை, இல்லை. அவர் தம் துயரத்தை வெளிக்காட்ட வில்லை; வழக்கம் போலத் தம் அன்றாட வேலை களைச் செவ்வனே செய்துவந்தார். 'உலகில் மக்கள் பிறப்பதும், இறப்பதும் இயற்கை. இரண்டும் தவிர்க்க முடியாதன. இவற்றுக்காக முறையே மகிழ்தலும் வருந்தலும் அறிஞர் செயலன்று. இந்த இயற்கை நிகழ்ச்சிகளை அவற்றின் போக்கிலேயே விட்டு மனிதர் தத்தம் காரியங்களைச் செய்து போவதே அவரவர் கடமையாகும்' என்பது கார்வே கருத்தாகும். இஃது உண்மைதானே!

மனைவியார் காலமான பிறகும் கார்வே பம் பாயில் இருந்தார். பூனவில் இருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அது, **கோபால கிருஷ்ண கோகலே** என்ற பேராசிரியரால் வரையப்பட்டது. அவர் பூனவில் பேர்கூசன் கல்லூரியிற் பேராசிரியராக இருந்தார். அக் கல்லூரியில் கணிதப் பேராசிரி யர் பதவி காலி ஆயிற்று. அப்பதவியை ஏற்றுச் செயலாற்றத் தக்கவர் நமது **கார்வே** என்பது கோகலே கருத்தாக இருந்தது. மேலும் கோகலே நமது கார்வேயுடன் படித்தவர்; கார்வேயின் நற் குணங்களையும், நல்லியல்புகளையும், கணிதப் புல மையையும் நன்கு அறிந்தவர்; பொதுநலத் தொண் டில் கார்வே ஆர்வம் மிக்கவர் என்பதையும் அறிந் தவர்; ஆதலின் பொதுநலத் தொண்டு கருதிக்

குறைந்த ஊதியத்தில் ஆசிரியராகப் பலர் பணியாற்றி வந்த பெர்கூசன் கல்லூரிக்கு ஆசிரியராக வருமாறு கார்வேக்குக் கடிதம் எழுதினர்.

கார்வே பொருள் ஈட்ட வேண்டும் என்னும் பேராசை அற்றவர்; பொதுநலத் தொண்டையே செல்வமாகக் கருதியவர்; மேலும் நீண்ட காலம் பம்பாயில் இருந்து தொழிலாற்றியவர். ஆதலின் அவர் தந்நலமற்ற பெருமக்கள் நிறைந்த பெர்கூசன் கல்லூரியில் ஆசிரியராகச் சேர இசைந்தார்; பம்பாயை விட்டுப் பூனா நகரத்தை அடைந்தார்.

---

3. பூனாவில் பேராசிரியர் பதவி

பெர்கூசன் கல்லூரி 1885-ல் திறக்கப்பட்டது. அதில் 1891 வரை இடைநிலை வகுப்புகளே இருந்து வந்தன. 1891-ல் பி. ஏ. வகுப்புக்கள் இரண்டினை வைக்க அநுமதி கிடைத்தது. 1890 வரை சிறந்த தேச பக்தரான **பாலகங்காதர திலகர்** கணிதப் பேராசிரியராக இருந்தார்; அவர் தம்முடன் இருந்த ஆசிரியர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டு தம் பதவியிலிருந்து விலகினர். கோகலே அவருக்குப் பதிலாக ஓராண்டு அந்தப் பதவியில் இருந்தார். பின்னர் ஆங்கிலம் முதலிய வேறு பாடங்கள் கற்பிக்க அவர் மாற்றப்பட்டுவிட்டனர்; ஆதலின் கணிதப் பேராசிரியர் வேலை நமது கார்வேக்குக் கிடைக்க இடமுண்டாயிற்று. கார்வே

மாதம் நூறு ரூபாய் வருமானத்தில் பேராசிரியராக அமர்த்தப்பட்டார்.

கார்வே பம்பாயில், மாதம் 175 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்து வந்தவர் அல்லவா? அவர் பூனவில் 100 ரூபாய் தரத்தக்க உத்தியோகத்தை ஏன் ஏற்றுக்கொண்டார்? கல்வி உலகத்திற்குப் பணி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஒன்றே அவரைத் தியாக உணர்ச்சி கொள்ளச் செய்தது. இங்ஙனம் எத்துணை ஆசிரியர் தியாகம் செய்ய இக் காலத்தில் இருக்கின்றனர்? கார்வே 'போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற கொள்கை உடையவர்; எளிய வாழ்க்கையில் இன் பத்தைக் கண்டவர்; பொதுநலத்தொண்டு ஒன்றே அவரது வாழ்க்கைக் குறிக்கோள். ஆதலின் அப் பெரியார் கோகலே அழைப்பிற்கு இணங்கிக் கணிதப் பேராசிரியர் வேலையை மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டார்.

இங்ஙனம் தாம் ஒப்புக்கொண்ட வேலையை அவர் எங்ஙனம் செய்து வந்தார்? அவர் திலகர் இருந்த பதவியை அல்லவா ஏற்றுக்கொண்டவர்! திலகர் கணிதத்தில் பெரும் புலமை பெற்றவர்; அறிவற்ற கடைப்பட்ட மாணவனும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்க விளக்க முறையில் கடின மான கணக்குகளை எல்லாம் கற்பிக்கும் ஆற்றல் பெற்றவர். அதனால் கல்லூரி மாணவர் அவரிடம்

மிக்க மதிப்புக்காட்டி வந்தனர்; அவரிடம் ஏனைய ஆசிரியரும் மதிப்பு வைத்திருந்தனர். அத்தகைய திறமை வாய்ந்த பேராசிரியர் இடத்தில் கார்வே அமர்ந்தமையால், அவரது பொறுப்பு மிகுதிப்பட்டது. அவர் அக்கல்லூரி மாணவரிடம் நற்பெயர் எடுக்கவேண்டியவர் ஆனார். அதில் அவர், தினந்தோறும் தாம் கல்லூரியில் நடத்தப்போகும் கணக்குகளை வீட்டில் ஒருமுறை செய்து பழகினார்; தமக்குத் தெளிவான பின்னரே அக்கணக்குகளை வகுப்புக்களில் கற்பித்தார்; அவருடைய அடக்கம், அன்பு, நல்லொழுக்கம் இவற்றில் மாணவர் ஈடுபட்டனர்; அதனால் அமைதியாக இருந்து அவர் கற்பித்தவற்றைக் கவனித்தனர்; அவை தெளிவாக இருந்தமையால் அவர்மீது அன்புகாட்டத் தொடங்கினர். மாணவர் இரண்டு மூன்று மாதங்கட்குப் பிறகு, 'கார்வே சிறந்த கணிதப் பேராசிரியர்' என்று நகரமெங்கும் கூறத்தொடங்கினர்.

டெக்கான் கல்விக் கழகம் என்பது பூனாவில் இருந்து கல்விக்குத் தொண்டு செய்து வந்தது. அதனில் கோகலே போன்ற அறிஞர் இருந்து பணியாற்றி வந்தனர். அவர்கள் அதனில் வாழ்நாள் உறுப்பினராக இருந்துவந்தனர். கார்வேயும் அவர்களைப் போல வாணாள் உறுப்பினர் ஆனார். அவர் 1893 வரை பூனாவில் பலருக்கும் தெரியாதவராக இருந்தார்; கல்லூரி வேலையில் கருத்தூன்றி இருந்தமையே அதற்குக் காரணமாகும்; கல்லூரி

வேலை நன்கு பிடிபட்டபிறகு வெளியுலகில் தலை காட்டலாம் என்பது அவர் எண்ணம். கல்லூரி வேலையுடன் டெக்கான் கல்விக்கழகம் நடத்திவந்த பள்ளி ஒன்றிலும் அவர் ஆசிரியராக இருந்தார்.

கார்வே அடக்கமுடையவர் என்பதைப் பல முறை குறித்தோம் அல்லவா? அவர் 'நாம் வயதிலும் அனுபவத்திலும் முற்பட்டுள்ளோம்; இளைஞர் பிற்பட்டவர்; நமக்குக் கீழ் இருந்து வேலை செய்யத்தக்கவர்' என்ற எண்ணமில்லாதவர்; நிருவாகப் பொறுப்பைத் தம்மினும் இளைய ஆசிரியரிடம் ஒப்புவித்துத் தாம் ஆசிரியப் பணியைமட்டும் விருப்பத்துடன் செய்யும் இயல்புடையவர்; அவர் பலரைப்போலத் தமக்கு முதலிடம் வேண்டும் - கவுரவம் வேண்டும் என்றெல்லாம் போராட்டம் நிகழ்த்தவில்லை. இருக்கும் இடம் தெரியாமல் அமைதியாகத் தம் கடமையை ஆற்றிவருவதில் மகிழ்ச்சி கொண்டவர்.

கார்வே இங்ஙனம் பெர்கூசன் கல்லூரியில் 1891 முதல் 1914 வரை பேராசிரியராக இருந்து தொண்டு செய்தார். அந்தக் காலம் முழுவதிலும் அவர் செய்துவந்த வெளித்தொண்டுகள் பலவகைப்படும்; எனினும், தமது ஆசிரியப்பதவிக்குக் கெட்ட பெயர் வராத நிலையில் கல்லூரி வேலையைக் கவனித்துச் செய்துவந்தார். டெக்கான் கல்விக்கழக அதிகாரிகள் அவரைப் பற்றி நல்லெண்ணம் கொண்டி

ருந்தனர். "கார்வே ஒழுங்கு தவறாதவர்; கடமை உணர்ச்சி உடையவர்; சட்ட வரம்பைமீறி எக்காரியமும் செய்யாதவர்; அடக்கத்தை அணிகலனுகக் கொண்டவர்; கணிதப் பேராசிரியர் என்னும் பதவிக்குத் தகுதிவாய்ந்தவர்; மாணவரிடம் மிக்க மதிப்பும் பெற்றவர்; மன உறுதியுடன் எடுத்த காரியத்தை முடித்துக்காட்டும் ஆற்றல் உடையவர்; உண்மை ஊழியர்; அனைவர் நம்பிக்கைக்கும் உரியவர்; எளிய வாழ்க்கையில் இன்பம் காண்பவர்; தந்நலமற்ற சேவை செய்வதில் பேரின்பம் துய்ப்பவர் இத்தகைய தூயவுள்ளம் படைத்த பெரியோர் மிகச் சிலரே ஆவர்" என்று அந்த அதிகாரிகள் வெளிப்படையாகக் கூறிக் கார்வேயைப் பாராட்டினர்.

இனிக் கார்வே பெர்கூசன் கல்லூரியில் பேராசிரியாராக இருந்தபொழுது நடைபெற்ற அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காண்போம்.

---

4. கைம்பெண் மறு மணம்

கார்வே மஹாராஷ்டிரப் பிராமண வகுப்பிற் பிறந்தவர்; சிறந்த வைதிக மனப்பான்மையுடைய பெற்றோரையும், உறவினரையும் பெற்றவர். ஆயினும் அவர் தம்மளவில் சீர்திருத்த உணர்ச்சி உடையவர்; 'சட்ட திட்டங்கள் என்பன காலப் போக்கில் மனித சமூக வளர்ச்சிக்கு ஏற்பக் கால நிலைகளை

ஒட்டி மாற்றப்பட வேண்டுவன. அவை மனிதர் நலன்களுக்காக அமைக்கப்பட்டனவே. சட்ட திட்டங்கட்காக மனிதர் படைக்கப்படவில்லை. மனிதரே சட்ட திட்டங்களைப் படைத்தவர். ஆதலின் அறிவுள்ள மனிதர் கால நிலைக்கு ஏற்பப் பழைய சட்டங்களை 'மாற்றி அமைத்துக்கொண்டே போக வேண்டும்' என்ற கருத்துடையவர்.

இத்தகைய நோக்குடன் அவர் பழைய சமூகக் சட்டதிட்டங்களை ஆராய்ந்தார்; இளமைப் பருவத்தில் மணம் செய்தல் தவறு என்பதை உணர்ந்தார்; அவ்வாறே கைம்பெண்களை மறுமணம் செய்துகொள்ளக்கூடாது என்று வற்புறுத்துதல் பெருந்தவறு என்பதையும் அறிந்தார்; 'இளமை மணத்தினுற் பல பெண்கள் சிறு வயதில் விதவைக் கோலத்திற் காணப்படுகின்றனர். அவர்கள் தங்கள் ஆயுட்காலம் முழுவதும் உலக இன்பங்களை வெறுத்துக் கைம்பெண்களாக இருக்க வேண்டும் என்பது மனித வளர்ச்சிக்கு மாறுபட்ட தண்டனையாகும். இளங் கைம்பெண்களாற் சமூக ஒழுக்கம் கெடும். இயற்கைக்கு மாறுபட்ட நிலையில் இந்தத் திட்டத்தைச் செய்துள்ள சமூகம் கீழ் நிலையை அடைந்தே தீரும். சமூகத்தை உயர்த்த வேண்டுமாயின், கைம்பெண்கள் மறு மணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்' என்று அடிக்கடி தம் நண்பர்களிடம் கூறிவந்தார்.

இத்தகைய சீர்திருத்த உணர்ச்சியுடைய அவர் மறு மணம் செய்துகொள்ள வற்புறுத்தப்பட்டார். அவரது முதல் மனைவியார் 1891-ல் காலமானர் அல்லவா? அதன் பிறகு அவர் பம்பாயை விட்டுப் பூனவிற்குச் சென்று பேராசிரியராக இருந்த பொழுது அவர் தாயார் அவரை மறுமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினர். கார்வே அதுவரை மறுமணத்தைப் பற்றிய எண்ணம் இல்லாதவராக இருந்தார். தாயார் பலமுறை வற்புறுத்தத் தொடங்கவே அவர் அந்த அம்மையாரைப் பார்த்து "அம்மா, என் வயது ஏறத்தாழ முப்பத்தைந்து ஆகிறது. நான் என் மகள் என்று சொல்லத்தக்க 15 வயதுடைய பெண்ணை மணக்க ஒருபோதும் இசையேன். நான் ஒரு விதவையையே மணப்பேன்; இன்றேல் எனக்கு மறு மணம் வேண்டுவதில்லை" என்று அழுத்தமாக அறைந்தார்.

கார்வே தாம் சொன்னபடி நடப்பவர் என்பது அவர் தாயாருக்கு நன்கு தெரியும். ஆதலின் அந்த அம்மையார் தம் மூத்த மைந்தரையும் மகளையும் கலந்து ஆலோசித்தார்; கார்வே அவர்கள் மூவருக்கும் மாதந்தோறும் பண முட்டுப்பாடு இல்லாமல் இருக்கப் பணவுதவி செய்துவந்தார். அதனல் அவர்கள் மூவரும் அவருடைய விருப்பப்படியே கைம்பெண் மறுமணம் செய்துகொள்ள அநுமதித்தனர். ஆயின் அவர்கள் உற்றார் உறவினர்க்கு அஞ்சி

னர். அப்பொழுது கார்வே, "நமக்கு நியாயம் என்று படுவதைச் செய்வதில் எவர்க்கும் அஞ்ச வேண்டுவதில்லை. சமூகம் பாழாகத் தக்க தவறான காரியம் ஒன்றையும் நாம் செய்யப் போவதில்லை. சமூகத்தை அலைக்கழிக்கும் — இழிநிலைக்குக் கொண்டுபோகும் பழக்கத்தை ஒழிக்கவே நாம் விதவை மணத்தை ஆதரிக்கிறோம். விதவைகள் தங்கள் வாழ்க்கையைச் சன்மார்க்கத்தில் நடத்திச் சமூக நிலையை உயர்த்தவே அவர்களை ஆடவர் மணத்தல் வேண்டும். இந்தத் தூய பணி செய்வதற்கு நாம் பின் அடைதல் ஆகாது" என்றார். அவரது உருக்கமான - அழுத்தமான - பேச்சைக் கேட்ட மூவரும் மனமகிழ்ச்சியுடன் அவர் கருத்தை ஒப்புக்கொண்டனர்.

பம்பாயில் கார்வே வீட்டில் ஜோஷி என்பவர் குடியிருந்தார் என்பதை முன்னர்க் குறித்தோம் அல்லவா? அவருக்குத் தங்கையர் ஒருவர் இருந்தனர். அவர் பெயர் கோடுபாய் என்பது. அவர் பத்து வயதினராக இருந்தபொழுதே கைம்பெண் ஆனார்; அதுமுதல் அந்த அம்மையார் தம் பெற்றோருடன் கிராமத்தில் இருந்து வந்தார். அங்கு வயல்களில் வேலை செய்தார். கடுமையான வீட்டு வேலைகளைச் செய்தார். அந்தப் பெண்மணியார் தம் இருபத்தைந்தாம் வயதில் பம்பாய்க்கு வந்து தம் தமையனார் வீட்டிற் சிறிது காலம் இருந்தார். அப்பொழுது கார்வேயும் தம் குடும்பத்துடன் அந்த வீட்டில்

இருந்தமையால் அந்த அம்மையாரை நன்கு அறி வார்.

அம்மையார் பம்பாயில் இருந்த பொழுது பண்டிதா இராமபாய் என்ற கிறித்தவ அம்மையார் பெண்களுக்குப் பள்ளி ஒன்றை ஏற்படுத்தினர். அதற்கு மேனுடுகளிலிருந்து ஏராளமாகப் பணம் குவிந்தது. விதவைகட்கும், மணமாகாத பெண்கட் கும், மணம் செய்துகொள்ள விரும்பாத பெண்கட் கும் அப்பள்ளி புகலிடமாக இருந்தது. அங்குக் கைத்தொழில், அறிவுக் கல்வி, ஒழுக்கக் கல்வி முதலியன கற்பிக்கப்பட்டன. அப்பள்ளி தோன் றியவுடன் அதிற் சேர்ந்த முதல் மாணவியார் கோடுபாய் அம்மையாரே ஆவர். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தைந்து.

இராமபாயினுல் தோற்றுவிக்கப்பட்ட சேவா சதனம் பூனவிற்கு மாற்றப்பட்டது. அதனல் கோடு பாய் முதலிய மாணவிகளும் பூனவிற்குச் சென்ற னர். இராமபாய் அம்மையார் பிராமண வகுப்பினர்; மிக எளிய குடும்பத்திற் பிறந்தவர்; இளமையில் உண்ண உணவின்றி ஆதரிக்க ஆண் இன்றித் துன்புற்றவர்; ஆயின் ஓரளவு வடமொழிப் பயிற்சி உடையவர்; பேச்சாற்றல் பெற்றவர்; இவ்விரு தகுதிகளைக் காட்டிப் பல இடங்களில் யாத்திரை செய்தார்; இறுதியில் எவ்வாருே இங்கிலாந்து சென்ருர்; அங்குக் கிறித்தவ மடங்களைக் கண்ணுற் ருர்; கன்னிப் பெண்கள் துறவு வாழ்க்கையை மேற்

கொண்டு சிலுவையின் கீழ் நின்று சமயத்தொண்டு புரிதலைக் கண்டு வியந்தார்; அவ்வியப்பினால் அச் சமயத்திற் சேர்ந்தார். அவரது பேச்சாற்றலைக் கண்ட மேனாட்டார் அவரை மதித்துப் பொருள் உதவி செய்தனர்; வேண்டும்பொழுதெல்லாம் பொருள், உதவி செய்வதாக வாக்களித்தனர். அம்மையார் இந்தியாவில் ஒரு மடத்தைத் தாபித்து இந்தியப் பெண்களை உயர்நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று கருதிப் பம்பாய்க்கு வந்தார்; முன் சொன்ன சேவாசதனத்தைத் தோற்றுவித்தார்.

இராமபாய் தோற்றுவித்த சேவாசதனம் பூனாவில் இருந்து நல்ல தொண்டாற்றிவந்தது. அதற்குக் கௌரவ மேற்பார்வையாளராக மகாதேவ கோவிந்த ரானடே போன்ற பெருமக்கள் இருந்தனர். அதனால் இந்துக்கள் அந்நிலையத்தினிடம் நம்பிக்கைகொண்டு தம் பெண்களை அங்கு விட்டிருந்தனர். அங்ஙனம் விடப்பட்ட பெண்களில் சிலர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர்; அதுவே சிறந்த சமயமெனப் பேசலாயினர். இதனை உணர்ந்த பெருமக்கள் திடுக்கிட்டனர்; 'தொண்டு' என்ற போர்வையில் 'மதமாற்றம்' நடைபெறுவதை உணர்ந்தனர். உடனே ரானடே போன்ற பெருமக்கள் அதனைப் பலர் அறிய வெளிப்படுத்தி அந்நிலையத் தொடர்பிலிருந்து விலகிக்கொண்டனர். அதனால் அந்நிலையம் பொதுமக்கள் ஆதரவை இழந்தது. கோடுபாய் அந்த விடுதியிலிருந்து நீங்கினார்.

அந்தச் சமயத்திற்றான் 'கோடுபாயை நீர் மணக்கலாமே' என்று நண்பர் சிலர் நமது கார்வேக்கு யோசனை கூறினர். அது வரை அந்த அம்மையாரைப் பற்றிய நினைவே இல்லாதிருந்த கார்வே. அந்த யோசனையைப் பற்றிச் சிந்தித்தார்; முன்னர் அறியாத புதிய விதவை ஒருத்தியைத் தேடி மணப்பதைவிடத் தம் உயிரினைய நண்பர்க்குத் தங்கையாரான கோடுபாயை மணத்தல் நல்லதே என்பதை எண்ணினர்; மேலும் அந்த அம்மையார் சேவாசதனத்திற் சேர்ந்து எழுதப்படிக்கத் தெரிந்திருந்தார்; கைத்தொழிற் கல்வி கற்றிருந்தார்; ஒழுக்கமுறைகளை உணர்ந்திருந்தார். இவை அனைத்தையும் எண்ண எண்ண, அவரையே மணக்க வேண்டும் என்ற எண்ணம் உறுதிப்பட்டது.

கோடுபாயின் பெற்றோர் வைதிக மனப்பான்மை உடையவர். ஆதலின் அவர்கள் கைம்பெண் மறு மணத்திற்கு இசைவரோ என்று கார்வே ஐயுற்றார்; எதற்கும் கோடுபாயையே நேரிற் கண்டு அவரது கருத்தை அறிதல் சிறந்தது என்று கருதி அவரைச் சந்தித்தார். நண்பர் கார்வே செல்லு முன்னரே கோடுபாய்க்கு விஷயத்தை அறிவித்திருந்தனர். அந்த அம்மையாரும், அவர் பெற்றோரும் மணத்திற்கு இசைந்தனர். 1893-ல் கார்வேக்கும் கோடுபாய்க்கும் பூனாவில் திருமணம் நடைபெற்றது. அதனை நடத்திய புரோகிதர் சிறந்த வைதிகர்; சாத்திரங்களை நன்கு படித்தவர். அவர்

இத்திருமணத்திற்காகப் பம்பாயிலிருந்து வரவழைக்கப்பட்டார். அவர் கைம்பெண் மறு மணத்தை மனமார ஆதரித்து வந்த புரோகிதர்.

'மஹாராஷ்டிரம்' என்ற பத்திரிகையை நடத்தி வந்த பால கங்காதர திலகர் திருமணத்திற்குச் சென்றிருந்தார்; பெர்கூசன் கல்லூரி ஆசிரியரும், மாணவரும், பெருமக்களும் குழுமியிருந்தனர். 'இருந்த இடம் தெரியாது இருந்த கார்வே துணிவுள்ள சீர்திருத்தக்காரர்' என்று எல்லோரும் பாராட்டிப் பேசினர். திலகர் தமது பத்திரிகையில், "இத்திருமணம் வரவேற்கத் தக்கது. மனம் ஒத்த இருவர்க்கும் இத்திருமணம் நடைபெற்றது பாராட்டத் தக்கது. மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிற விதவைகளை மறு மணம் செய்துகொள்ள விடுவதே சமூக நன்மைக்கு ஏற்ற வழியாகும். இத்திருமணம் சிறந்த வைதிக முறையில் நடைபெற்றது. இத்தகைய திருமணங்கள் நாட்டில் பெருகுதல் வேண்டும்" என்று எழுதினர். மற்றொரு சீர்திருத்தப் பத்திரிகை புகழ் மாரி செய்து மணமக்களை வாழ்த்தியது. ஆயினும் வேறு சில செய்தித் தாள்கள் கைம்பெண் மறுமணத்தை எதிர்த்து எழுதின. எனினும் பூனா நகரத்தில் அத் திருமணம் மக்களிடை ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கி விட்டது.

அவர் செய்துகொண்ட திருமணம் மூரத் கிராமத்தாரிடை என்ன உணர்ச்சியை உண்டாக்கியது? கிராமத்தார் பழைய நடைமுறைகளை உயர்ந்தவை எனக் கருதுபவர் அல்லவா? கார்வே ஒரு விதவையை மணந்து கொண்டார் என்ற செய்தி கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டார்கள்; "ஐயோ, நல்ல ஒழுக்கமுடைய கார்வே கெட்டு விட்டாரே!" என்று வருந்தினவர் பலராவர்; சிலர், "இனி அவரை நாம் எப்படி மதித்து நடத்துவது!" என்று யோசனை செய்தனர். அவர் பெருந் தவறு செய்துவிட்டதாகவே அவர்கள் கருதினர்; அவர் தம் கிராமத்திற்கு வந்தால் எவரும் அவருடன் பேசலாகாது—அவர் தம் தமையனார் வீட்டுக்கு வந்தால், அத்தமையனாரைச் சாதியிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டனர்.

திருமணம் நடந்து இரண்டு மாதங்கள் கழிந்த பிறகு கார்வே தம் கிராமத்திற்குச் சென்றார்; கிராமத்தாரது கட்டுப்பாட்டை அறிந்தார்; அவர் தம் அறியாமைக்கு இரங்கிப் பூனாவிற்குத் திரும்பினார். அடுத்த மூன்று வருடகாலம் அவர் மூரத்திற்குச் செல்லவில்லை; பின்னர் ஒரு முறை சென்று ஒரு பாழ் வீட்டில் தங்கினார்; தாமே சமையல் செய்துகொண்டார்; நள்ளிரவில் தம் தாயாரையும் தமையனாரையும் கண்டு பேசினார். அறியாமை மீது கட்டப்பட்ட சமூகக் கொடுமையைப் பாருங்கள்!

இங்ஙனம் அக்கிராமத்தார் செய்த கொடுமையால் கிராமத்திற்கு விளைந்த நலன் யாது? கார்வே அக்கிராமத்திற்குச் செய்துவந்த பல நன்மைகள் நிறுத்தப்பட்டமையே கிராமத்தாரது கொடுமைக்குப் பலனாக இருந்தது. கார்வே அமைத்த தாலூகா அமைப்பு, கிராம அமைப்பு இரண்டும் உயிர் இழந்தன; பள்ளிகள் சரிவரக் கவனிக்கப்படவில்லை. அவற்றைக் கவனித்து ஆவன செய்ய வேறு ஆட்களும் முன்வரவில்லை. இவ்வாறு ஏறக்குறையப் பத்தாண்டுகள் கழிந்தன. அக்கால நீட்டிப்புக்குப் பின்னரே கிராமத்தாரது சீற்றம் ஒருவாறு தணிந்தது. ஆயினும் கார்வே தனித்துச் சாப்பிடவேண்டியவர் ஆனார். அவருடைய சொந்த சகோதரர் அவருடன் இருந்து உண்ணலாகாது என்பது கட்டுப்பாடு. எனினும் கார்வே, "இம்மக்களுக்கு நல்லறிவு வரும் நாள் என்றோ!' என்று ஏங்கிப் பொறுமையுடன் நடந்து வந்தார்.

கார்வே புதிய மனைவியாருடன் இல்லறத்தை இனிதாக நடத்தி வந்தார். கோடுபாய் அம்மையார் சிறுவயது முதல் திருமணம் ஆகும்வரை குடும்பத் துன்பங்களை நிரம்ப அநுபவித்தவர். ஆதலால் மிகவும் மதி நுட்பத்துடன் புதிய குடும்பத்தைத் திறம்பட நடத்தலானார்; கணவர் குறிப்பறிந்து ஆவன செய்துவந்தார்; அவர் முதல் மனைவியின் மகனைத் தம் மகனைப்போலப் பாதுகாத்தார்; கார்வே விருப்பத்திற்கு இசைய அவர் இல்லத்தில்

இருந்து படித்துவந்த சிறுவர்களைத் தாயைப்போல நேசித்து வந்தார்; சுருங்கக் கூறின் கணவர் மனம் பல்லாற்ருனும் மகிழும்படி வாழ்க்கையை நடத்தி வந்தார். அவர்கட்கு ஆண் மக்கள் மூவர் பிறந்து வளர்ந்தனர். முதல் மனைவியின் மகன் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பேராசிரியர் பதவி வகித்தான். கோடுபாயின் பிள்ளைகள் நன்கு படித்து வந்தனர்.

---

5. கைம்பெண்கட்குத் தொண்டு

கார்வேயின் மறுமணத்திற்குப் பிறகு அவர் சிறந்த சீர்திருத்தக்காரர் என்று கருதப்பட்டார். அதனுல் கைம்பெண் மறுமணம் செய்துகொள்ள விரும்பினவர் அவர் யோசனையைக் கேட்கலாயினர். கார்வேயும் வாளா இருக்கவில்லை. கைம்பெண் மறுமணத்தை எங்ஙனம் பரப்புதல் கூடும் என்று பலவாறு யோசித்தார்; 'அங்ஙனம் மறுமணம் செய்துகொண்டவரது வாழ்க்கை உயர வேண்டும்; அம்மணமக்கள் நன்கு வாழ்வதைக் காணும் பிறர் அத்தகைய மணத்தால் கெடுதல் இல்லை என்று நம்பி, அதனைத் தாமும் செய்யத் துணிவர். ஆதலால் அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும்' என்று கருதினர். அதனுல் அவர் தம்மைப் போலக் கைம்பெண்களை மணந்தவர் நட்பை நாடினர்; அவர்களைக் கூட்டித் தம்

யோசனையைக் கூறினர். அவர்கள் அதனை ஏற்று, அவர்களுக்குச் சிறிது பொருள் உதவி செய்தனர்.

கார்வே விதவை மணம் செய்துகொண்டு தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க முடியாமல் துன்புற்ற குடும்பங்களுடன் கடிதப் போக்குவரவு வைத்துக்கொண்டார்; அவர்கள் பிள்ளைகளைத் தம் இல்லத்துக்குத் தருவித்துக்கொண்டார். நண்பர் உதவிய பொருளைக்கொண்டு அப்பிள்ளைகளைப் படிக்க வைக்கலானர். இங்ஙனம் ஆறு ஏழு பிள்ளைகள் அவர் இல்லத்தில் இருந்து படிக்கலாயினர்.

கார்வேயின் தமையனர் மகள் இளவயதில் மணம் செய்விக்கப்பட்டாள். அவள் கணவன் சட்டக்கல்லூரியில் படித்துவந்தபொழுது திடீரென்று காலமானன். அந்தக் கைம்பெண்ணைக் கார்வே படிக்கவைத்தார்; ஆசிரியப் பயிற்சி அளித்தார்; பிறகு தம்முடன் பெர்கூசன் கல்லூரியில் ஆசிரியராக இருந்த ஒருவர்க்கு அப்பெண்ணை மணம் செய்வித்தார். அச்செயலைக் கண்ட பின்னரே பொதுமக்கள், "கார்வே சொல்வதுபோலச் செய்பவர்; கருமவீரர்" எனப் பாராட்டினர்; பூனு நகரிலும் சுற்றுப் புறங்களிலும் கார்வேயின் பெயர் பரவியது.

கார்வே அடுத்துச் செய்த காரியம் கைம்பெண் மறுமண உதவிச் சங்கத்தை ஏற்படுத்தியதாகும். அச்சங்கத்தில் கைம்பெண் மணம் செய்துகொண்ட

அனைவரும் உறுப்பினர் ஆயினர். அவர்கள் அச் சங்கத்தில் அடிக்கடி கூடி உறவாடுவர்; ஒருவர்க் கொருவர் உதவி செய்துகொள்வர்; ஒரு குடும்பத் தினரைப் போல ஒற்றுமைப்படலாயினர். ஒரு வகுப்பினர்க் குள்ளேயே மறுமணம் செய்து கொள்ள வேண்டும் - அதுவும் புரோகிதர் செய் விக்கும் மணமாக இருத்தல் வேண்டும் - என்பது அவர்கள் கருத்து; அக்காலத்தில் அந்த அளவில் சீர்திருத்தம் ஏற்படுதல் போதும் என்று கருதினர். விதவை மணத்தில் அழுத்தமான பற்றுடையவரே உறுப்பினராகச் சேர்க்கப்பட்டனர். விதவை மணம் செய்துகொண்ட வீடுகட்குப் பழைய கொள் கையுடைய புரோகிதர்கள் வர மறுத்தார்கள். அத ஞல் மேற்சொன்ன சங்கம் ஒரு புரோகிதரை மாதச் சம்பளம் கொடுத்து வேலையில் அமர்த்திக் கொண்டது. சங்க உறுப்பினர் வீட்டுச் சடங்கு களைச் செய்விப்பதே அப்புரோகிதர் வேலை.

இவ்வாறு சங்கம் கண்ட பிறகு கார்வே என்ன செய்தார்? பொதுமக்களிடம் விதவை மணத் தேவை யைப் பிரசாரம் செய்ய விரும்பினர்; இந்த முயற்சி யில் திலகரது ஒத்துழைப்பைப் பெற்ருர். திலகர் விதவை மணம் செய்தவருடன் இருந்து உண்பதில் தவறு இல்லை என்று தம் பத்திரிகையில் எழுதினர்; பல கூட்டங்களில் அதனைக் குறிப்பிட்டார். திலகர் வேதங்களை நன்ருகப் படித்தவர்; சிறந்த

வடமொழிப் புலவர். ஆதலின் அவர் வாக்கிற்குப் பொதுமக்கள் மதிப்பு வைத்திருந்தனர்.

கார்வே தம் நண்பர் சிலருடன் தென் மஹாராஷ்டிரப் பகுதியில் யாத்திரை செய்தார்; பல பொதுக் கூட்டங்களில் பெண்கல்வி — கைம்பெண் மறுமணத் தேவை — இவற்றை வற்புறுத்தி விளக்கமாகவும் உருக்கமாகவும் பேசினர். அவருடைய நண்பர்களும் பேசினர். அவர்கள் அனைவரும் விதவை மணம் செய்துகொண்டவர்கள்; கல்லூரிப் பேராசிரியர்கள்; மஹாராஷ்டிரப் பிராமணர்கள்; நல்ல மரபில் வந்தவர்கள். அப்பெருமக்கள் பேச்சுப் பொதுமக்கள் உள்ளங்களில் உறுத்தியது. அறிவுடைய பலர் அவர்கள் கூறியன நியாயமானவை என மனத்திற்குள் எண்ணினர்; அறியாமை ஒன்றையே அணிகலனாகப் பெற்று நாட்டு நடப்பை அறியாது விதவை மணத்தை வெறுத்துப் பேசியவர் முன்னிலையில் தம் கருத்தைக் கூறத் தயங்கினர். ஆயினும் கார்வே அவர்களை விடவில்லை; அவர்கள் இல்லங்கட்குச் சென்று உருக்கமாகப் பேசினர்; பெருமக்கள் பலர் அவர் மேற்கொண்ட திருப்பணிக்கு உதவி செய்வதாக வாக்களித்தனர். இங்ஙனம் கார்வே பல ஊர்களுக்குச் சென்று தம் கருத்தை வெளிப்படுத்தினர். அவரது உழைப்பு, மக்களை விதவை மணத்தைப்பற்றி ஓரளவு சிந்திக்கச் செய்தது.

---

6. விதவையர் விடுதி

விதவைகட்கு எவ்வகையில் தொண்டு செய்யலாம் என்று கார்வே இராப்பகலாக யோசித்தார். விதவை மறு மணச் சங்கத்திற்குப் பேராதரவு கிடைக்க வில்லை. பொது மக்கள் விதவை மறு மணத்தைப் பற்றிக் கவலை கொண்டவர்களாகத் தெரிய வில்லை; அச்செயல் சமயக் கொள்கைக்கு மாறுபட்ட தென்னும் கருத்துக் கொண்டிருந்தார்கள். இதனைக் கார்வே பலரிடம் உரையாடித் தெரிந்துகொண்டார். "விதவைகள் வாயில்லாப் பூச்சிகளாக வீட்டில் பெற்றோர்க்கும், மற்றோர்க்கும் சுமையாக இருக்கும்வரை அவர்கள் கவனிக்கப் படமாட்டார்கள். தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளும் உணர்ச்சியும் விதவைகட்கு இல்லை; அதற்குக் காரணம் அவர்கட்குக் கல்வி இன்மையே ஆகும். தக்க கல்வி இருந்து தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் நிலை வந்துவிடின், விதவையர் தாமே துணிந்து மறு மணம் செய்துகொள்ளுதல் கூடும். கல்வி அறிவு இன்மையாலும், பிறர் பொருள் உதவியால் வாழ வேண்டும் நிலையில் இருத்தலாலும் பெண்கள் சுயவுரிமை இன்றி அவதிப்படுகின்றனர். ஆகவே, நாம் விரைந்து செய்யத்தகும் தொண்டு விதவையர்க்குக் கல்வி புகட்டப் பிரசாரம் செய்வதே ஆகும்; பிரசாரத்துடன் **விதவையர் விடுதி** ஒன்றை அமைப்பதே நல்லது. பெற்றோர் விதவையர் மறு

மணத்தை எதிர்க்கின்றனரே தவிர அவர்கட்குக் கல்வி கற்பிப்பதை எதிர்க்கவில்லை. அவர்கள கல்வி கற்றுப் பொருளீட்டி வாழ்தலை எவர் தாம் தவ றென்று கூறுவர்! ஆதலின் விதவையர் விடுதி ஒன்றை ஏற்படுத்த முயல்வோம்" என்று கார்வே தீர்மானித்தார்.

விதவையர் விடுதியை வைத்து அவர்களை நன் னிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்று வங்கா ளத்திலும், ஆந்திர நாட்டிலும் கார்வேக்கு முன்பே முயற்சி நடைபெற்றது. வங்கத்தில் தோற்று விக்கப்பட்ட விதவையர் விடுதி ஏறத்தாழப் பதி னைந்து ஆண்டுகள் நடைபெற்றது. அதனைத் தோற் றுவித்தவரே முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்த வேண்டியவரானார். அவர் முதுமை அடைந்தபடி யால் அவ்விடுதியை மூடி விட்டார். பொது மக்கள் அதனை மேனிலைக்குக் கொண்டுவரக் கவலைப்பட வில்லை.

ஆந்திர நாட்டிற் சிறந்த புலவர் தலைமணி யாக விளங்கிய விரேசலிங்கம் பந்துலு என்பவர் விதவையர் விடுதி ஒன்றை ஏற்படுத்தினர். அவருக் குப் பின்னும் அது நடைபெற்று வருகிறது; ஆயி னும் பணக்காரர் செல்வ உதவியும், பொதுமக்கள் அனுதாபமும் இன்மையால் அவ்விடுதி பெயரள வில் இருந்து வருகிறது. நல்ல எண்ணம் கொண்டு ஒருவர் தொடங்கும் பொதுநலப் பணிக்குப்

பொது மக்கள் ஆதரவளிப்பது நமது நாட்டில் அரிதாகக் காண்பதால் அப்பணி தொடர்ந்து நடைபெற முடிவதில்லை.

இச்செய்திகளை யெல்லாம் கார்வே நன்கு அறிந்தவர். ஆதலின், இன்று தோன்றி நாளை அழியக்கூடிய முறையில் ஒரு விடுதியை அமைக்க அவர் விரும்பவில்லை. அதனால் நண்பர் பலரைத் தீர யோசித்து, விதவையர் மறுமணச் சங்கத்தார் இசைவுப்படி விடுதிக்கென்று முதலில் வசூலித்த சிறு தொகையைக்கொண்டு, விதவைப் பெண்கள் இருவரை வரவழைத்துப் பள்ளியிற் சேர்த்துப் படிக்கவைத்தார்; அவர்களை பள்ளிக்கூடத்தார் நடத்திவந்த உண்டி-உறையுட் சாலையிலேயே இருக்க ஏற்பாடு செய்தார்; இந்த நற்பணிக்குத் தம் பொருளாக ஆயிரம் ரூபாய் உதவினர். அந்த ஏழை ஆசிரியர் சிக்கனமாகச் சேர்த்து வைத்த தொகை அதுவே. அதனை அப்படியே தருமம் செய்தார் எனின் அவரது தியாக வுணர்ச்சியை என்னென்பது!

கார்வே 1896-ல் விதவையர் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டார்; பம்பாய், அஹ்மதாபாத், தாஞ, பரோடா முதலிய இடங்களிற் சுற்றுப் பிரயாணம் செய்து விதவையர் விடுதி கட்டப் பொருள் உதவி தேடினர்; ஓராண்டிற்குள் விதவையர் எழுவரைப் பள்ளியிற் படிக்க ஏற்பாடு

செய்தார்; ஓராண்டிற்குள் மூவாயிரம் ரூபாய் சேர்த்தார்; அந்தப் பணத்தைத் தொடாமல் வேறு வசூலித்து விடுதி ஒன்றை அமைத்தார்; தம் பாது காப்பில் விடப்பட்ட விதவையர்க்கு அவ்விடுதியில் உண்டியும், உறையுளும் இலவசமாக வழங்கினர்; பள்ளிச் சம்பளம் கட்டினர்.

கார்வே சீரிய ஒழுக்கம் உடையவர். அவர் மீது பொதுமக்கட்கு அளவு கடந்த நம்பிக்கை இருந் தது. அவர் 'தொண்டு' ஒன்றையே குறிக் கோளாகக்கொண்ட உத்தமர் என்பதைப் பெருமக்கள் அறிந்திருந்தனர். அவர் விடுதியில் இருந்த விதவையரைத் தம் மக்களாகப் பாவித்து நடந்துவந்தார்; அவர்கட்குக் காலை மாலைகளில் பாடம் கற்பித்து வந்தார்; எனினும் அப்பெண்கள் விடுதியை நடத்தப் பெண்மணிகளே ஏற்றவர்கள் என்பது அவர் எண்ணம். அதனால் அவர் தம் இரண் டாம் மனைவியாரின் இளைய சகோதரியாராகிய பார்வதிபாய் என்பவரை விடுதி மேற்பார்வையாள ராக நியமித்தார். அந்த அம்மையார் அவ்விடுதியில் ஆசிரியர் வேலையையும் பார்க்கலானர். பின்னர்ப் படித்து மணமான பெண்கள் சிலர் விடுதியில் ஆசிரியராக நியமனம் பெற்றனர். விடுதியில் வகுப்புக்களும் வைத்து நடத்தப்பெற்றன.

விதவையர் விடுதி இங்ஙனம் வளர்ச்சியுற்று உண்மை ஊழியம் செய்வதைக் கண்ட பெருமக்கள்

பொருள் உதவி செய்யலாயினர். விதவைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்ற உணர்ச்சியை அவ் விடுதி பொதுமக்கட்கு ஊட்டியது என்பது மிகையா காது. விதவையர் அவரவர் குடும்பப் பழக்கவழக்கங் கட்கு ஏற்ப விரதம் முதலிய சமய சம்பந்தமானவற் றைப் பின்பற்ற உரிமை தரப்பட்டது. பிரார்த்தனை மண்டபத்தில் எல்லோரும் அமைதியாகக் கூடி அவாவர்க்குத் தேவையானபடி பிரார்த்தனை செய்ய வசதி அளிக்கப்பட்டது. விதவையர் அங்குச் சமையல் வேலை, தையல் வேலை, பின்னல் வேலை முதலிய சிறு தொழில்களில் நல்ல பயிற்சி பெற்ற னர்; வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்ளல், சுகாதார விஷயங்கள், பொதுவுலகில் நடந்து கொள்ளும் முறை, பெண்கள் உலகிற்குச் செய்யத் தகும் தொண்டு முதலியன பற்றியும் நன்கு கற்பிக் கப்பட்டனர். இவை அன்றி உத்தியோகக் கல்வி யும் பெற்றனர்.

அவ்விடுதியிற் படித்த பெண்களிற் சிலர் பி. ஏ., பி. எஸ்ஸி., எம். ஏ. முதலிய பட்டங்களைப் பெற்றுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரிய ராக இருக்கின்றனர்; சிலர் வைத்தியப் பட்டங் களைப் பெற்று மருத்துவராக இருக்கின்றனர்; வேறு சிலர் மருத்துவக்கூடங்களில் தாதியராக உள்ளனர்; பலர் படித்தபின்னர் மறுமணம் செய்துகொண்டு இல்லத்து ஆசிரியராக இருந்து வருகின்றனர்.

இங்ஙனம் மேனிலையை அடைந்த விதவைப் பெண்கள் முதலில் எப்படி இருந்தனர்? "நமக்கும் இன்பம் இல்லை; நம் பெற்றோர்க்கும், உற்றோர்க்கும் நம்மால் இன்பம் இல்லை. இந்தத் துன்ப நிலையில் நாம் ஏன் இப்பொழும் உலகில் இருத்தல் வேண்டும்? நாம் பூமிக்குப் பாரமாக இருத்தலைவிட இறந்துபடுதல் நன்றன்றோ?" என்று கண்ணீரும், கம்பலையுமாக வாழ்வை வெறுத்தவரே ஆவர். மஹாராஜன கார்வேயின் பெருமுயற்சியால் அவர்களது நரக வாழ்வு நாகரிக வாழ்வாயிற்று. அப்பெருமானது முயற்சியால் அப்பெண்மணிகள் கல்வியறிவு பெற்று, உலகத்திற் பல துறைகளில் நுழைந்து, தொண்டுசெய்ய வாய்ப்புப் பெற்றனர்; 'சமூகம் நினைத்தால் நரகமும் சுவர்க்கமாகும்' என்னும் உண்மையை உணர்ந்தனர். அப்பெண்மணிகள் தங்கள் வாழ்க்கையைப் பயனுறச் செய்த கார்வேயை இன்றும் எண்ணி எண்ணிப் பாராட்டி வருகின்றனர்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது பொய்யாமொழி அன்றோ? தம் விடுதியிற் படித்து முன்னேற்றம் பெற்ற பெண்கள் உயர் நிலையில் இருப்பதைக்கண்டு கார்வே கொண்ட—கொள்ளும்—மகிழ்ச்சிக்கு அளவுண்டோ? அந்த மகிழ்ச்சியே அவரது எல்லையற்ற உழைப்புக்குப் பலனாகும்.

7. பெண் கல்விக்கு உழைத்தல்

[மஹிலா வித்யாலயம்]

கார்வேயின் உண்மை உழைப்பைக் கண்ட பொது மக்கள் மணமாகாத பெண்களையும் விடுதியிற் சேர்த்துக்கொள்ள வேண்டினர். அப் பெண்கள் தொகை முதலிற் குறைவாகவே இருந்தமையால் கார்வே அவர்களை விதவையர் விடுதியிலேயே வைத்திருந்தார்; பின்னர்ப் பெண்கள் தொகை மிகுதிப்பட்டதால் அவர்கட்குத் தனி விடுதி கட்ட வேண்டியவர் ஆனார்; பொருள் வேண்டிப் பம்பாய் மாகாணம் முழுவதும் சுற்றலானார்: நடுத்தர இந்துக்கள் தங்கள் பெண்கள் இந்து சமயச் சூழலில் இருந்து படிப்பதையே விரும்பினர்; கார்வே போன்ற கருணையாளர் மேற்பார்வையில் தங்கள் பெண்களை ஒப்படைக்க இசைந்தனர். அதனால் அவர்கள் அவரவர் இயல்புக்கேற்றவாறு பொருள் உதவி புரிந்தனர்; செல்வரும் கார்வேயின் தந்நலமற்ற ஊழியத்தைப் பாராட்டிப் பொருள் அளித்தனர்.

கார்வே இங்ஙனம் தேடிய சிறிய தொகையைக் கொண்டு முன்னர் விதவையரை வேறு பள்ளிகட்கு அனுப்பிப் படிக்க வைத்தவாறே புதிய பெண்களையும் படிக்க வைத்தார்; பின்னர்ச் சிறு பெண்களுக்காக ஆரம்ப வகுப்புகளைக் கொண்ட பள்ளியைத் தொடங்கினர்; அதற்கு ஒரு

கட்டடம் கண்டார்; பள்ளிக்கு 'மஹிலா வித்யாலயம்' என்று பெயரிட்டார். அப் பள்ளி வளர் பிறை போல வளர்ச்சி பெறலாயிற்று; ஆண்டு தோறும் பெண்கள் பெருந் தொகையினராகச் சேர்ந்து படிக்கலாயினர்.

பெண்களுக்கு உழைக்கும் பெரு மக்களைக் கொண்ட சாதனம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பது கார்வேயின் நீண்ட கால அவா ஆகும். அதனை எங்ஙனம் அமைப்பது என்பதைப் பற்றி அவர் யோசித்து வந்தார்; கோகலேயினால் ஏற் படுத்தப்பட்ட இந்திய ஊழியர் சங்க அமைப்பு அவ ரது கவனத்தை இழுத்தது. உண்மை ஊழியத்திற் பற்றுக்கொண்ட பெருமக்கள் தங்கள் பொருளை அச் சங்கத்திற்கு உதவி, அச் சங்கத்தார் மாதந் தோறும் தரும் வாழ்க்கைக்குப் போதுமான தொகையைப் பெற்றுப் பொது நலத் தொண்டு செய்து வாழும் முறை அவர் உள்ளத்தை ஈர்த் தது. அந்த முறையைப் பின்பற்றிப் பெண்களுக்கு உழைக்கும் சங்கம் ஒன்றைக் காண விழைந்தார்.

கார்வே 1908-ல் 'நிஷ்காம கர்ம மடம்' என் பதைத் தோற்றுவித்தார். 'தந்நலமற்ற சேவைக் குரிய ஆசிரமம்' என்பதே அச் சங்கத்திற்குப் பெயர். அதனில் கார்வேயும் வேறு இருவரும் முதலிற் சேர்ந்தனர்; தங்கள் கையில் இருந்த பொருளை அம்மடத்திற்கு அளித்தனர்; "நாங்கள்

இன்று முதல் இந்த மடத்தின் ஊழியர்கள்; எங்களுக்கு என்று தனிப் பொருள் இல்லை; நாங்கள் இந்தப் பெண்கள் பணிக்காக இம் மடத்தை எப்பாடு பட்டாயினும்—வீடு வீடாகச் சென்று இறந்தாயினும் வளர்ப்போம். மடம் இடும் எந்தப் பணியையும் மன மகிழ்ச்சியுடன் செய்வோம்" என்று வாக்குறுதி செய்தனர். பின்னர் விதவையர் விடுதியில் இருந்த ஆசிரியர் சிலரும் அம்மடத்திற் சேர்ந்தனர். "நாங்கள் எங்கள் படிப்பு முடிந்ததும் இம் மடத்திற் சேர்ந்து எங்கள் பெண் இனத்திற்கு ஊழியம் புரிவோம்" என்று விதவையர் சிலர் வாக்களித்தனர்.

மடத்தார் விதவையர் விடுதி, மஹிலா வித்யாலயம், மடம் ஆகிய மூன்றின் நிருவாகத்தைக் கவனிக்க வேண்டியவர் ஆயினர். அவர்கள் முதலில் விதவையர் விடுதியை அடுத்திருந்த இடத்தை வாங்கினர்; அங்குப் பள்ளி ஒன்றைக் கட்டத் தீர்மானித்தனர். ஆயின் அவர்கள் கையில் பொருள் இல்லை; எனினும் துணிவுடன் கட்டட வேலையைத் தொடங்கினர்; பல இடங்களில் பொருள் உதவி பெற்றனர்; எஞ்சிய தொகையை ஒரு பாங்கியில் கடனாகப் பெற்றனர்; அத் தொகையை ஆண்டு தோறும் கட்டிவர இசைந்தனர். கட்டடம் கட்டி முடிக்க நாற்பதினாயிரம் ரூபாய் செலவாயிற்று. பூனா நகர வாசிகள் கார்வேயின் திருத்தொண்டி

யையும் தியாகத்தையும் கூர்ந்து, கவனித்து மகிழ்ந் தனர்.

இந்தியப் பெண்கள் பல்கலைக் கழகம்

மேற்சொன்ன திருப்பணிகளுடன் கார்வே நின்று விடவில்லை. இந்தியப் பெண்கள் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பது அவரது பெரு விருப்பம். அவர் அந்த எண்ணத்தைப் பல இடங்களில் வெளியிட்டார்; 1915-ல் பம்பாயில் நடைபெற்ற சீர்திருத்த மகாநாட்டுத் தலைமைப் பேருரையிலும் வெளிப்படுத்தினார்; அன்று முதல் அதற்குரிய முயற்சியில் ஈடுபட்டார். அவரிடம் பொருள் இன்மையாற் பலர் அவரைப் பரிகசித் தனர். எனினும் மனத் துணிவுடைய கார்வே அவர் களது பரிகசிப்பைப் பொருட்படுத்தவில்லை.

"எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற குறட் கருத்தை அவர் நன்கு அறிந்தவர். ஆதலின் அவர் ஆங்காங்குச் சென்று தம் கருத் தைப் பொது மேடையிற் பேசினார்; பெரு மக்கள் பலரைக் கண்டு தம் கருத்தை வெளியிட்டார்; அவ ருடைய நற்பணிகளைப் பல ஆண்டுகளாகக் கவ னித்து வந்த பெருமக்கள் அவர் நன்முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தனர்.

கார்வே ஓரளவு பொருளைச் சேமித்தார். 1916-ல் பல்கலைக் கழகச் செனேட் சபையை

அமைத்தார்; பல்கலைக் கழகம் அதுமுதல் பணியாற்றத் தொடங்கப்பட்டது. இந்தியப் பெண்கள் பல துறை வாழ்க்கையில் தொண்டு செய்யுமாறு பயிற்றுவித்தல் வேண்டும் என்பதே அப் பல்கலைக் கழக நோக்கமாகும். அஃது அரசாங்க ஆதரவினை எதிர்பார்க்கவில்லை; எதிர்பார்ப்பதாயின் அரசாங்கக் கட்டுதிட்டங்கட்கு அடங்கிப் பாடதிட்டங்களை வகுக்க வேண்டும்; அப்பாட திட்டங்கள் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுவன அல்ல. ஆதலின் இந்தியப் பெண்கள் வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க முறையிற் பாடதிட்டம் அமைக்கப்பட வேண்டும் என்பதே கார்வே கருத்து. மேலும் எல்லாப் பாடங்களும் தாய்மொழியாகிய மஹாராஷ்டிர மொழியிலேயே கற்பிக்க ஏற்பாடாயின. இந்தப் பாராட்டத்தக்கமுறை—1916-ல் கார்வேயினுல் தொடங்கப் பெற்ற இம்முறை—முப்பதாண்டுகள் ஆகியும் நம் பல்கலைக் கழகங்களிற் கையாளப்படாமை வருந்துதற்குரியதன்றோ!

பெண்கள் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டது. தாய்மொழி முதல் இடத்தைப் பெற்றது. வரலாறு கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட்டது. வீட்டுக் கல்வி (சமையல், சுகாதாரம், முதல் உதவி முதலியன) கட்டாயப் பாடமாக இருந்தன. இசை, ஓவியம் வரைதல், சமுதாயக் கல்வி முதலியனவும் கற்பிக்கப்பட்டன. சில ஆண்டுகள் கழிந்த பின்னர்ப் பல்

கலைக் கழகத்தின் சார்பில் ஆசிரியப் பயிற்சிச்சாலை ஒன்றும் அமைப்புண்டது. விதவை மறுமணச் சங்கத்தார் ஒரு கல்லூரியைத் தொடங்கினர். இங்ஙனம் தோன்றிய கல்லூரிகள் சில பல்கலைக் கழகத்துடன் இணைப்புண்டன.

இந்தியப் புகழ்பெற்ற டாக்டர் சர் ராமகிருஷ்ண பந்தர்க்கர் என்பவர் பல்கலைக் கழக வேந்தராக இருந்தார். இரண்டு ஆண்டுகட்குள் பல்கலைக் கழகத்திற்கு எழுபத்தையாயிரம் ரூபாய் மூலதனம் சேர்க்கப்பட்டது. பெண்கள் மிகுந்த ஊக்கம் காட்டிப் படிக்கலாயினர்; பட்டம் பெற்ற பெண் மணிகள் பலர் ஆசிரியர்களாக அமர்ந்தார்கள்; பெருமக்கள் பலர் கார்வேயின் நன்முயற்சியைப் பாராட்டி மேலும் பொருள் உதவி செய்தனர்.

கார்வேயின் சலியா உழைப்பின் பயனாக மஹாராஷ்டிரப் பெண்மணிகள் கல்வி கேள்விகளிற் சிறந்துவருதலைக் கூர்ந்து கவனித்துவந்த ஸர் விதல்தாஸ் டி. தாக்கர்சி என்னும் கனவான் பெண்கள் பல்கலைக் கழகத்திற்காகப் பதினைந்து லக்ஷம் ரூபாய் ஒதுக்கிவைத்து, அதன் வட்டியாக ஆண்டுதோறும் வரும் 52,500 ரூபாய்களைப் பல்கலைக் கழகத்திற்கு உதவி வருகிறார். அவரது இந்த அறப்பணி இன்றும் நடைபெற்று வருகின்றது.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?' என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு. அதனை

நன்கறிந்து செயலாற்றும் பெருவீரராகிய கார்வே பல்கலைக் கழகத்தை நன்னிலையில் நிறுத்தப் பெரும் பொருள் திரட்டலானார். அதற்காக அவர் உலகப் பிரயாணமும் செய்யலானார்; அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களிற் சுற்றித் தாம் மேற்கொண்ட திருப்பணியைப் பல கூட்டங்களில் விளக்கிப் பேசினார்; அவருடைய உழைப்பின் வரலாறு அறிஞர் உள்ளத்தை உருக்கியது. கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட மேனாட்டுப் பெருமக்கள் அவருக்குப் பொருள் உதவி புரிந்தனர்.

இங்ஙனம் கார்வே இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றிப் பொருள் திரட்டினார். அவர் இங்ஙனம் மேற்கொண்ட சலியா உழைப்பின் பயனாக இன்றும் பெண்கள் பல்கலைக் கழகம் சிறப்பாக வளர்ச்சியுற்று வருகின்றது. பூனா, பம்பாய், பரோடா, அஹ்மதாபாத் என்னும் நான்கு நகரங்களில் நான்கு கல்லூரிகள் பல்கலைக் கழகத்தின் இணைப்புண்டு தொண்டாற்றுகின்றன. ஹிங்கினி, பூனா, பம்பாய், பரோடா, சூரத், அஹ்மதாபாத், இராஜகோட்டை, பகவன் நகர், நாகபுரி, ஐதராபாத், சிந்து, மால்வார், பெல்காம், சங்கிலி, சதரா முதலிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் நடைபெறுகின்றன. இரத்தினகிரி, ஷோலாப்பூர் முதலிய இடங்களில் நடுத்தரப் பள்ளிகள் நடந்து வருகின்றன. இவை யாவும் பெண்கள் பல்கலைக் கழகத்தால் இணைப்புண்டவையாகும்.

கார்வேயின் பொதுநல ஊழியத்தைப் பாராட்டிய இந்திய அரசாங்கம் அவருக்குக் கெய்சரி ஹிந்தி வெள்ளிப் பதக்கம் அளித்துச் சிறப்பித்தது. இந்தியப் பெருமக்கள் அவரை மனமாரப் பாராட்டலாயினர். இவர் அனைவர்க்கும் மேலாக மஹாராஷ்டிரப் பெண்மணிகள் அவர் திருவுருவத்தைத் தங்கள் உள்ளமாகிய கோவிலில் வைத்துப் பூசிக்கலாயினர்; 'விதவையர்க்குக் கல்வி அறிவை அளித்த மஹான்' என்று போற்றுகின்றனர்; 'பெண்கள் உலகத்தை வாழ்விக்க வந்த பெருந்தகையாளர்' என்று புகழ்மாலை சூட்டி வருகின்றனர்.

---

8. குண நலன்கள்

பேராசிரியர் கார்வே அடக்கத்தை அணிகலனாகக் கொண்டவர்; நற்குணங்கட்கு உறைவிடமானவர்; அமைதி குடிகொண்ட உள்ளத்தினர்; உண்மை உழைப்பாளி. அவர் பெண்களுக்கு உழைக்கவே பிறப்பெடுத்தவர் என்னல் பொருத்தமானது. 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்னும் முதுமொழிக்கிணங்க அவர் மேற்கொண்ட ஒவ்வொன்றும் சிறிய தொடக்கமே ஆகும். அதனை அப்பெரியார் தமது உலையா உழைப்பினாற் படிப்படியாக உயர்த்திச் சென்றார்; முதலில் விதவையர் மறுமணச் சங்கத்தைத் தோற்றுவித்தார்; பின்னர் விதவையர் விடுதியைக் கண்டார்; அதன் பிறகு மஹிலா வித்

யாலயத்தை அமைத்தார்; இவற்றின் வளர்ச்சிக் காகத் தம் உடல்-பொருள்-ஆவி மூன்றையும் தத்தம் செய்து நிஷ்காம கர்ம மடத்தை ஏற்படுத்தினர்; இவை ஒழுங்காக நடைபெறத் தம் உயிர் ஒப்பந் தத்தை (ரூ. 5000)த் தம் பெயர் குறியாது 'ஓர் அன் பர்' என்னும் பெயரால் உதவினர்; பின்னர் இந்தி யப் பெண்கள் பல்கலைக் கழகத்தைக் கண்டார்.

உண்மை உழைப்பு உலகில் பயன்தரும் என்ப தற்கு அவரது முயற்சி சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகின்றது. கார்வே அரசியல் வாதியைப் போல அனைவர் கருத்தையும் கவரத்தக்க பணியில் இறங்கிப் பெயர் பெறவில்லை. ஆயின் அரசிய லிற் பெறும் பெயர் சிலருக்கே நிலைத்து நிற்கும்; பலருக்கு நிலைத்து நில்லாது. ஆனல் கார்வேயின் பெயர் இந்தியா உள்ளளவும், மஹாராஷ்டிர நாடு இருக்கும் அளவும், மஹாராஷ்டிரப் பெண்மணிகள் இருக்குமளவும் நிலைபெற்று நிற்கும். அவர் இந்தி யாவிலேயே பெண்களுக்கென்று எந்தப் பெரியா ரும் செய்து முடிக்க முடியாத அளவு பெருந் தொண்டு செய்துள்ளார். இது நாடறிந்த உண்மை.

கார்வே மிகுந்த நாட்டுப் பற்றுடையவர்; நாடு விரைவில் சுய ஆட்சி பெறவேண்டும் என்பது அவ ரது அவா; நாட்டு விடுதலைக்குப் பலர் உழைக்கும் பொழுது ஏனையோர் நாட்டு மக்கள் நலங்கருதித் தீண்டாமை, பெண்கல்வி, சாதி ஒழிப்பு, சமூக

ஒற்றுமை முதலிய துறைகளில் தனித்தனியே உழைக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அவர் இந்தக் கருத்தினைப் பல கூட்டங்களிற் கூறி இருக்கின்றார்.

கார்வே இசை, நடனம் முதலிய நாகரிகக் கலைகளில் விருப்புடையவர்; அவை நன்கு வளர வேண்டும் என்ற ஆர்வமுடையவர். சாதி பேதங்கள் ஒழிந்து இந்து சமூகம் ஒற்றுமைப்பட வேண்டும் என்பது அவரது பேரவா. இந்து சமூகத்தை அரித்துவரும் மற்றொன்று தீண்டாமை என்பது. "ஏறத்தாழ ஒன்பது கோடி மக்கள் தொகையைத் 'தீண்டாதார்' என்ற பெயரில் கொண்டுள்ள சமூகம் எவ்வாறு பலம் பொருந்தியதாகும்? அஃது எவ்வாறு முன்னேற்றம் அடையும்?" என்று பல கூட்டங்களிற் பேசியுள்ளார். அவர் தம்மளவில் சாதி வேறுபாடு கவனித்ததில்லை.

'சிக்கனம் இருப்பின் எவரும் செல்வராகக் கூடும்' எனபது அவரது கருத்து. அவரது வருவாய் மிகக் குறைவு. அதனில் அவர் சிறு தொகையை மீதப்படுத்திப் பெண்கள் கழக முன்னேற்றத்திற்கும், கிராம முன்னேற்றத்திற்கும் செலவிட்டனர் அல்லவா? 'இவ்வாறு என் மற்றவர் செய்யலாகாது?' 'சமூகத்தினிடத்தில் உண்மைப் பற்று இருக்குமாயின் மக்கள் வீண் காரியங்களிற் பெரும் பணத்தைச் செலவழிப்பரா? ஒரு திருமணம்

நடத்த ஆயிரக்கணக்கான ரூபாய்கள் ஏன் செல வழிக்கப்பட வேண்டும்? குறைந்த செலவில் திருமணத்தை நடத்தி எஞ்சிய பணத்தைச் சமூக முன்னேற்றத்திற்கான வழிகளிற் செலவு செய்யும் மனப்பான்மை செல்வர்க்கு உண்டாதல் வேண்டும்' என்று அவர் அடிக்கடி கூறுவதுண்டு.

கார்வே தொண்ணூறு வயதுடைய கிழவராகி விட்டார். அவர் பிள்ளைகள் கல்லூரிப் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள்; அவர்கள் அனைவரும் தந்தையாரைப் பின்பற்றிப் பொதுநலப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கார்வே முயற்சியால் உண்டான நிலையங்கள் நன்கு வேரூன்றித் தம் பணி ஆற்றி வருகின்றன. இப்பொழுது கார்வே மன அமைதியுடன் தமது முதுமைப் பருவத்தைக் கழித்து வருகின்றார்.

பெண்கல்வி, விதவையர் கல்வி, பெண்கள் முன்னேற்றம், விதவையர் மறுமணம் இவற்றுக்காகத் தம் உடல்-பொருள்-ஆவி மூன்றையும் அளித்து, இடைவிடா உழைப்பால் ஆயிரக் கணக்கான பெண்கள் வாழ்க்கையைக் கல்விச் செல்வம் அளித்து மேனிலைக்குக் கொணர்ந்த கார்வே என்னும் மஹான் இந்தியர் உள்ளத்தில் இடம்பெறத் தக்கவர் ஆவர். அப்பெரியாரைப் போலத் தமிழகத்துக் கல்விமான்களுள் சிலரேனும் பாடுபடின், நம் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் நிலைமை உயர வாய்ப்புண்டு. கார்வே கொண்ட மனவுணர்ச்சி தமிழ் அறிஞர்க்கு உண்டாகுமா?

III. சர் அசுடோஷ் முக்கர்ஜி

1. இளமைப் பருவம்

பொதுநலப் பணியில் ஈடுபட்ட இந்தியப் பெரியாருள் அசுடோஷ் முக்கர்ஜி என்பவர் ஒருவராவர். அப்பெரியார் வங்க மாகாணத்தவர்; பிராமண வகுப்பினர்; 1864-ல் பிறந்தவர். அவர் தந்தையார் கல்கத்தாவில் சிறந்த மருத்துவராக இருந்தவர். அவர் பெயர் கங்காப் பிரசாத் என்பது. கங்காப் பிரசாத் தம் பெற்றோரை வற்புறுத்திக் கிராமத்தை விட்டு நீங்கிக் கல்கத்தாவை அடைந்து ஆங்கிலக் கல்வி கற்றவர்; மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்து படித்து, மருத்துவப் பட்டம் பெற்றுக் கல்கத்தாவில் சொந்தமாக மருத்துவக்கூடம் வைத்துத் தொழில் செய்து வந்தவர். அவரது நயமான பேச்சும், நோயாளிகளை மிகுந்த கவலையோடு கவனித்தலும், நோய்களை விரைந்து போக்க முயல்வதும் அவருக்கு நற்பெயரைத் தந்தன. அவரது தொழில் வளர்ந்தது. அதனால் அவர் நாளடைவில் பெருஞ்செல்வர் ஆனார். அவர் கல்கத்தாவில் தனி மாளிகை ஒன்றைச் சொந்தத்தில் அமைத்துக்கொண்டு தம் அலுவலைக் கவனித்து வந்தார். மருத்துவ நூல் ஒன்றை வங்க மொழியில் வரைந்தார். அஃது இன்றளவும் நல்ல மருத்துவ மாணவரால் போற்றிப் படிக்கப் பட்டு வருகின்றது.

சர் அசுடோஷ் முக்கர்ஜி

அசுடோஷ் தாயார் கல்வியறிவும், சிறந்த ஒழுக்கமும் உடையவர்; கணவரைத் தம் உயிராக நேசித்தவர்; கருத்துடன் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தவர். அந்த அம்மையார் அசுடோஷைப் பேரன்புடன் வளர்த்து வந்தார்; கண்ணை இமைகள் காப்பது போல அவரை நாள்தோறும் கவனித்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார். தந்தையாராகிய கங்காப் பிரசாத் தம் ஓய்வு நேரங்களில் தம் தவ மைந்தருடன் விளையாடுவார்; அவருக்கு இனிய கதைகள் கூறுவார்; பாடங்களைக் கற்பிப்பார்; அவருக்கு இளமையிலேயே நல்ல பழக்கங்கள் உண்டாகப் பாடுபட்டார்; நாள்தோறும் காலையில் தாம் உலாவப் போகும் பொழுது தம் மைந்தரையும் உடன் அழைத்துச் செல்வார். காலை நடை உடம்பிற்கு உரத்தைத் தருவது. அந்த நற்பழக்கம் அசுடோஷுக்குச் சிறுவயது முதலே ஏற்பட்டது நல்லதாயிற்று. அவர் தம் தந்தையுடன் நடந்து செல்ல அதிகாலையில் எழுந்திருக்கும் நற்பழக்கத்தையும் பெற்றார்; தந்தையாருடன் அல்லது பெரியோருடன் எவ்வாறு நடந்து செல்லவேண்டும் என்பதை அறிந்துகொண்டார். மிக மெலிந்த உடலைக் கொண்டு வாட்டமுற்றிருந்த அசுடோஷ் காலை நடையினால் நல்ல உடல் உரம் பெறலானார்; காலையில் நடக்கும் அப்பழக்கத்தை அவர் ஆயுட்காலம் முழுவதிலும் கைக்கொண்டிருந்தார்.

தந்தையார் தம் மைந்தர் வீட்டிலேயே படிக்க வேண்டும் என்ற கருத்தினல் நல்ல ஆசிரியரை அமர்த்தினர். அசுடோஷ் வெளியிற் சென்று மற்ற மாணவருடன் பழகாமல் வீட்டிலேயே அமைதியாகக் கல்வி கற்று வந்தார். தம் மைந்தர் தீய பிள்ளைகளுடன் சேரச் சந்தர்ப்பம் அளிக்கலாகாது என்பதே டாக்டர் கங்காப் பிரசாத் எண்ணமாகும். அவர் எண்ணத்தை மைந்தர் அறியார். அவர் வீட்டில் அமைதியாகப் படிப்பதும் தாயாரிடம் கதைகள் கேட்பதுமாகக் காலம் கழித்துவந்தார். அவரைத் தந்தையார் பள்ளியில் விட்டபொழுது, அவர் பள்ளியில் மாணவர் போராட்டங்களையும், கூச்சலையும் வெறுத்தார்; பள்ளிக்குப் போவதை மறுத்தார்; வீட்டிலேயே முன்போல அமைதியாகக் கணிதம், வங்காளி முதலியவற்றிற் பயிற்சி பெற்று வந்தார்.

டாக்டரைத் தேடி நண்பர் பலர் அவர் வீட்டுக்கு வருவர் அல்லவா? அங்ஙனம் வந்தவருள நண்பர் பலர். அவர்கள் பல துறைகளிற் சிறந்திருந்தார்கள். அவருள் துவாரகநாத மித்தர் என்பர் ஒரு நீதிபதியாவர். அவரது பேச்சிலும், நடையிலும் நமது அசுடோஷ் ஈடுபட்டார்; அவரைக் கண்டு பேசுவதில் விருப்பம் கொண்டார்; நீதிபதி அடிக்கடி மருத்துவர் இல்லம் வருவார். அவரைக் காணும் போதெல்லாம் அசுடோஷ் முகம் கதிரவன் வரவு கண்ட தாமரை மலர் போல மலரும். இளவயதில்

அசுடோஷ் இங்ஙனம் ஒரு பெரியவரை முன்மாதிரி யாக வைத்துப் பின்பற்றத் தொடங்கியது நல்ல தாயிற்று.

வங்காளக் கல்வி உலகில் பிரேம்சந்த் ராய்சந்த் உதவிச் சம்பளம் பெறும் மாணவனே சிறந்த மாணவனுகக் கருதப்பட்டு வந்தான். அத்தகைய உதவிச் சம்பளத்தைத் தாம் பெறவேண்டும் என் னும் எண்ணம் வீட்டிற் படிக்கையிலேயே அசுடோஷுக்கு உண்டாயிற்று.

இளமைப் பருவத்தில் இங்ஙனம் எண்ணம் உண்டாதல் நல்லது. மாசு மறுவற்ற உள்ளத்தில், படிப்பிற் சிறந்தார் ஒருவரையோ உறுதியிற் சிறந் தார் ஒருவரையோ முன் மாதிரியாக எண்ணி 'அவ ரைப் போல நாமும் உயர வேண்டும்' என்று உறுதி கொள்ளுதல் நல்ல அடிப்படை. மாணவர் அந்த அடிப்படைக்கேற்ற கட்டிடத்தைத் தன் விடா முயற்சியால் சிறிது சிறிதாகக் கட்டுவான்; இறுதி யில் எண்ணிய எண்ணியாங்கு எய்துவான்; அங்ங னம் எய்துதற்குரிய முயற்சிகளையும் அவன் மேற் கொள்வான். அவனது வாழ்க்கைப் பாதை செப் பனிடப்பட்டுக் குறித்த திசையை நோக்கிச் சென்ற படியிருக்கும். ஆதலின் தன் எதிர்கால வாழ்வு செம்மையுற வேண்டும் என்று எண்ணும் மாணவர் இளமையில் முன்னேற்றம் அடைந்தவர் ஒருவரை முன்மாதிரியாகக் கொண்டு தம் முயற்சிகளை

நடத்திக்கொண்டு செல்லுதல் வேண்டும்; வழியிற் பல இடையூறுகள் தோன்றித் துன்புறுத்தும்; கவலைப் படலாகாது; எண்ணிய குறிக்கோளைத் திண்ண மாகப் பிடித்துத் துன்பங்களை இன்பமாக எதிர்த்து வென்று மேல்நோக்கிச் செல்லவேண்டும்; வெற்றி உறுதி. இதனை வற்புறுத்தவே திருவள்ளுவர்,

"எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்றார். நாம் இதனை உளங்கொண்டு, அசுடோஷ் தம் இளமையில் எண்ணிய எண்ணங்களில் எவ்வாறு வெற்றிகண்டார் என்பதைக் காண்போம்.

அசுடோஷ் படிப்பு வெறிகொண்டார்; ஓயா மற் படிப்பிற் கவனம் செலுத்தி வந்தனர்; அதனால் நோய்வாய்ப்பட்டார். அவருக்கு இருதய வலி இருப்பதாக மருத்துவர் கூறி ஓய்வு வேண்டும் என் பதை வற்புறுத்தினார். கங்காப் பிரசாத் மருத்துவர் அறிவுரைப்படி அசுடோஷை ஓர் ஊருக்கு அனுப்பினார். அசுடோஷ் அந்த ஊரிற் சிறிது காலம் இருந்தார்; அங்குள்ள இயற்கைக் காட்சி களில் உள்ளத்தைச் செலுத்தினர்; ஓய்வு பெற்றார்; உடல் நலம் வளரத் தலைப்பட்டது; சில மாதங்கட் குப் பிறகு கல்கத்தாவை அடைந்தார்.

உடல் நலம் பெற்று மீண்ட பிறகு அசுடோஷ் ஆங்கிலப் பள்ளி ஒன்றிற் சேர்க்கப்பட்டார். அவர் எல்லாப் பாடங்களிலும் முதல்வராக விளங்குதலைக்

கண்ட ஆசிரியன்மார் அவரை அன்புடன் கவனிக்க லாயினர். அவர் கணிதத்தில் கூரிய அறிவுபடைத் திருந்ததைக் கண்ட கணித ஆசிரியர் அவரைப் பாராட்டினார். ஒரு முறை அந்த ஆசிரியர் தந்த கணக்கை வகுப்புப் பிள்ளைகள் போட முடியாமல் விழித்தனர். ஆனால் அசுடோஷ் சில நிமிடங்க ளில் அக்கணக்கை நன்கு விளக்கி அதனைப் போடும் முறையையும் தெளிவுறக் காட்டினார். ஆசிரியர் பெரு வியப்படைந்து, அசுடோஷ் பெரிய கணித சாஸ்திரி ஆவான். அவனால் இந்தியா பெருமை பெறும்' என்றார். அச்சொல் நாளடைவில் உண்மை ஆயிற்று.

இக்காலப் பெற்றோர் பலர் தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிடுவதாலேயே கடமை கழிந்து விட்டதாகக் கருதி ஏமாறுகின்றனர். பிள்ளைகள் பள்ளியிற் பெறும் கல்வி வீட்டில் கவனிக்கப்பட வேண்டும். பள்ளியில் கூறப்படுவனவற்றை மாண வர் வீட்டிற் கவனித்துப் படிக்கின்றனரா—ஆசிரி யர் தந்த வீட்டு வேலைகளைப் பிள்ளைகள் செவ்வனே செய்கின்றனரா என்பதைப் பெற்றோர் அன்றாடம் வீட்டில் கவனிக்கவேண்டும். அங்ஙனம் கவனிக்கப் படாவிடில் பிள்ளைகள் கவனிப்பவர் இல்லாததால் நாளடைவில் சோம்பேறிகள் ஆகலாம்; பெரும் பாலான பிள்ளைகள் இங்ஙனமே கெட்டுவிடுகின் றனர். அவர் தம் பிற்கால வாழ்க்கை பயனற்ற தாகும்.

இதனை நன்கு உணர்ந்தவர் ஆதலின் டாக்டர் கங்காப் பிரசாத் தம் மைந்தரது படிப்பைக் கண்ணும், கருத்துமாகக் கவனித்துவந்தார்; தக்க ஆசிரியர் ஒருவரை அமர்த்தித் தம் மைந்தரது படிப்பை வீட்டில் கவனிக்குமாறு செய்தார்; தம் மைந்தர் சிறந்த கல்வி அறிஞர் ஆதல் வேண்டும் என்பது தந்தையார் பெரு விருப்பம். அதற்கு ஏற்பவே உத்தம மைந்தராகிய அசுடோஷ் ஆசிரியர் பாராட்டுக்கு உரியவராகப் படிப்பில் படிப்படியாக உயர்ந்து விளங்கலானர்.

டாக்டர் தம் மைந்தரை வழக்கறிஞராக்க விரும்பினர். வழக்கறிஞர் நல்ல பேச்சாளராக இருத்தல் வேண்டும் அல்லவா? அசுடோஷ் நாணமுடையவராக இருந்தார். அவர் பேச்சுப் பழக்கம் இல்லாதவர்; பள்ளியிலும் பேசிப் பழக்கம் இல்லை. அதனல் தந்தையார் அவருக்குப் பேச்சுப் பயிற்சி அளிக்கத் தொடங்கினர்; அசுடோஷுக்கு ஒரு பொருள்பற்றிப் பேசப் பழக்கப்படுத்தினர். குறித்த நாளில் வீட்டில் ஒரு சபை கூடியது. அச்சபை முன் அசுடோஷ் பேசலானர். சபையில் இருந்தவர் யாவர்? அசுடோஷின் தந்தையார், தாயார், அத்தை, வேருெரு நண்பர் ஆகிய நால்வரே ஆவர். இங்ஙனம் வாரந்தோறும் சொற்பொழிவுப் பயிற்சி நடைபெற்றது. தம் மைந்தரிடம் இருந்த 'பெருங் குறை' என்று தந்தையார் கருதிக் கவலை கொண்டது அவரது நன்முயற்சியாலேயே நீக்கப்பட்டது.

அசுடோஷ் சிறந்த பேச்சாளர் என்ற பெயர் பெறத்தக்கவர் ஆயினர்.

இங்ஙனம் அசுடோஷ் உயர்நிலைப்பள்ளியிற் படிக்கும்பொழுதே சிறந்த அறிஞராகவும், பேச்சாளராகவும் விளங்கினர். அவர் ஆங்கில நூல்கள் பலவற்றைப் படிப்பதிற் பெரும் பொழுதைக் கழித்தார்; நாளும் பத்துமணி நேரம் வீதம் வேலைசெய்து வந்தார்; தம் ஆசிரியருடனும், சிறந்த படிப்புடைய மாணவருடனும் பல பொருள்பற்றி விவாதித்தார்; தம் தந்தையாருடன் பல பொருள்பற்றிப் பேசுவார். தம் மைந்தரது கூரிய அறிவைக் கண்டு தாயாரும் தந்தையாரும் கொண்ட மகிழ்ச்சி அளவிடற்கு அரியது!

2 பல்கலைக் கழகப் படிப்பு

அசுடோஷ் முக்கர்ஜி 1880-ல் கல்கத்தா மாகாணக் கல்லூரியிற் சேர்ந்தார். அவர் ஓயாத படிப்புப் பழக்கத்தினல் உடல் இளைப்புக்கொண்டார். அவர் சேர்ந்த மாகாணக் கல்லூரி சிறந்த ஆசிரியரைக் கொண்டது. ஒவ்வொரு பாடப் பகுதியிலும் புகழ்பெற்ற பேராசிரியர் அங்கு இருந்தனர். அவர்கள் மாணவருடன் கலந்து பழகி அவர்கள் பழக்க வழக்கங்களை நன்கு உருப்படுத்தினர்.

கல்லூரியிற் சேர்ந்த அசுடோஷ் கல்லூரி நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்தத் தொடங்கினர்;

தமக்குப் பெரு விருப்பத்தைத் தந்த கணிதக் கலை நூல்களை நிரம்ப வாங்கிப் படித்தார்; ஆங்கில நூல்கள் பலவற்றைப் படித்தார்; வடமொழி நூல்களையும் படிக்கலானார். கல்லூரி மாணவருடன் பேசிக் காலத்தை வீணாக்குவதைவிடப் பெருமக்கள் வரைந்த நூல்களைப் படிப்பதே பேரின்பம் என்பது அவர் கருத்து. அவரது படிப்பு வெறியைக் கண்ட பேராசிரியர்கள் அவரைத் தமக்குள் பாராட்டி மகிழ்ந்தனர்.

மாணவர் பலர் தாம் படிக்கும் வகுப்புக்கு ஏற்ற நூல்களையே படிப்பது வழக்கம். சிலரே அவற்றைப் படித்து முடித்து மேல் வகுப்புக்கட்குரிய பொது நூல்களையும் படிக்க முற்படுவர். அத்தகைய முன்னேற்ற மாணவருள் அசுடோஷ் ஒருவர். அவர் எப். ஏ. வகுப்பில் படித்தபொழுது எம். ஏ. வகுப்புக்குரிய ஆங்கில நூல்களைப் படித்து வந்தார் எனின், அவரது ஆங்கில நூலறிவினை என்னென்பது! கல்லூரியில் அவரைப் பாராட்டாத மாணவர் இல்லை; பேராசிரியர் இல்லை. கல்லூரி மாணவர் கழகப் பேச்சுக்களில் எல்லாம் அசுடோஷ் முதல் இடம் பெற்றார்; ஒவ்வொரு தேர்விலும் முதல் இடம் அவருடையதாகவே இருந்தது.

அசுடோஷ் படிப்புவெறி கொண்டவர் என்பதை முன்னரே கூறினேம் அல்லவா? அவர் இரவில் நெடுநேரம் கண் விழித்துப் படிப்பது

வழக்கம். தந்தையார் அவரைப் பத்து மணிக்குப் படுக்கைக்குப் போகவேண்டும் என்று வற்புறுத்தினர். ஒரு நாள் அவர் இரவு இரண்டு மணிக்கு விழித்துக்கொண்டார்; அசுடோஷ் அறையில் விளக்கு எரிவதைக் கண்டார்; மெல்லச் சென்று பார்த்தார். தம் செல்வ மைந்தர் மிகுந்த ஊக்கத்துடன் படிப்பதைப் பார்த்தார். அவருக்கு வியப்பு ஒரு பக்கமும், வருத்தம் மற்றொரு பக்கமும் உண்டாயின. அவர் தம் மைந்தரை விளித்து "அசுடோஷ், இயற்கைத் தாயின் விதிகளைப் பின்பற்றாதவரை அவ்வன்னை தண்டித்தே தீருவாள். நீ உறங்கவேண்டும் சமயத்தில் படிக்கிறாய். அது மிகக் கெடுதி; உன் உடம்பைக் கெடுத்து விடும். இனி அவ்வாறு செய்யாதே" என்று எச்சரித்துச் சென்றார்.

தகப்பனார் கூறியவாறே சில மாதங்கட்குள் அசுடோஷ் நோய்வாய்ப்பட்டார்; முன்போலவே மருத்துவர் 'ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும்' என்று அறிவுறுத்தினர். இளைஞர் காஜிப்பூர்க்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் சில நாட்கள் இருந்து உடல் நலம் பெற்றார்; மனத்திற்கு அமைதியும், உடலுக்கு ஓய்வும் பெற்றார். பிறகு அவர் கல்கத்தா மீண்டார்; மீண்டவுடனே கொடிய காய்ச்சல் நோய் கண்டது. தந்தையார் இராப் பகலாகத் தம் செல்வ மைந்தரிடம் இருந்து கவனித்தார்; தாயார் மைந்தர்க்கு வேண்டிய பத்திய உணவுப்

பொருள்களைத் தயாரித்துத் தந்தார். மருத்துவர் நாள்தோறும் வந்து கவனித்துச் சென்றனர்.

இறைவன் திருவருளால் அசுடோஷ் குணம் பெற்றார். அவர் முழு நலம் பெறுதற்கு முன்னரே கல்லூரித் தேர்வு தொடங்கப் பெற்றது. மருத்து வரும் பிறரும் தேர்வுக்குச் செல்லவேண்டாம் என்று கூறினர். ஆனால் அசுடோஷ் கேட்கவில்லை. அவர் தேர்வுக்குச் சென்று விடை எழுதினார்; கேட்ட வர் வியக்குமாறு மூன்றாம் மாணவராகத் தேறினார். தேர்வுக்குப் பிறகு அவர் உடல் நிலை சிறிது சிறி தாக வளம் பெறலாயிற்று.

அசுடோஷ் பி. ஏ. வகுப்பிற் சேர்ந்து படிக்க லானார். அப்பொழுது அவரது தாய் மாமன் ஒரு வர் கல்கத்தாப் பல்கலைக் கழக உறுப்பினர் ஆனார். அதனை அறிந்த இளைஞரான அசுடோஷ் தாமும் அக்கழகத்தில் சேரவேண்டும்; பல்கலைக் கழகத்தின் வாயிலாகக் கல்வி வளர்ச்சிக்குப் பாடு பட வேண்டும் என்று அழுத்தமாக எண்ணினார். அது முதல் அவர் தம் மாமனுக்கு வந்துகொண் டிருந்த பல்கலைக் கழக தொடர்பான அறிக்கைகள், சட்டதிட்டங்கள் முதலிய எல்லா வற்றையும் கருத்தூன்றிப் படிக்கலானார். அந்தப் பருவத்திலேயே பல்கலைக் கழக நடப்புக்களை நன்கு அறியும் ஆற்றல் பெற்றார்.

அசுடோஷ் பி. ஏ. வகுப்பில் திறம்படக் கற்றார். அவர் பாட சம்பந்தமாகக் கல்லூரி நூல் நிலையத்தில் இருந்த பல நூல்களைப் படித்து முடித்தார்; எந்தப் பொருளைப் பற்றியும் தாராளமாகப் பேசவும், விவாதிக்கவும் ஆற்றல் பெற்றார்; கல்லூரிக் கழகத்தில் சிறந்த பங்கெடுத்து உழைத்தார்; பல போட்டிப் பேச்சுகளிற் கலந்து கொண்டார். அவரது சொற்பொழிவு கல்லூரி மாணவர் சொற்பொழிவாக இருந்ததில்லை; சிறந்த பேராசிரியர் பேச்சாகவே மற்ற மாணவராலும், ஆசிரியராலும் மதிக்கப்பட்டது. இங்ஙனம் கல்லூரிகளிற் பேசி வந்த பழக்கம் அவருக்குப் பிற்கால வாழ்க்கையில் பேருதவி புரிந்தது.

'ஆரியக் கூத்து ஆடினாலும் காரியத்தின்மேல் கண்ணாக இருத்தல் வேண்டும்' என்பது நாட்டப் பழமொழி. அதுபோல அசுடோஷ் பல பொருள் சம்பந்தமான பல நூல்களைப் படித்தபோதிலும், சொற்பொழிவுகள் செய்த போதிலும், போட்டிப் பேச்சுக்கள் நிகழ்த்திய போதிலும், தமது கல்லூரிப் படிப்பைக் கைவிடவில்லை. அவர் 1883-ல் பி. ஏ. வகுப்பில் முதல்வராகத் தேறினர்.

'பி. ஏ. பட்டம் பெற்றுவிட்டோம்; இனிப் படிக்கவேண்டுவது ஒன்றும் இல்லை; இருப்பினும் நமக்கு வேண்டா' என்று அசுடோஷ் அலட்சியமாக இருந்து விட்டனரா? இல்லை. அந்த அறிஞர்

அடுத்த ஆண்டே கணிதத்தில் எம். ஏ. பட்டம் முதல் வகுப்பில் முதல்வராகப் பெற்றார்; பல் கலைக் கழகத் துணைவேந்தரால்* பட்டமளிப்பு விழாவில் பாராட்டப்பட்டார். கிடைத்தற்கரிய இப்பேறு பெற்ற இந்தியர் எத்துணையர்? அசுடோஷ் விஞ்ஞானத்திலும் எம். ஏ. பட்டம் பெற்றார்; கணிதத்தில் அரிய ஆராய்ச்சி செய்து பல நுட்பங்களையும் கண்டறிந்தார். அவை இந்திய அறிஞராலும், மேனாட்டுக் கணித வல்லுநராலும் ஒப்புக் கொள்ளப்பட்டன. அசுடோஷ் இளமையில் 'பெற்றே தீரவேண்டும்' என்று உறுதிகொண்ட பதினாயிரம் ரூபா மதிப்புள்ள பிரேம்சந்த் ராய் சந்த் உதவிச் சம்பளம் பெற்று மகிழ்ந்தார்.

இங்ஙனம் அசுடோஷ் பட்டத்தின்மேல் பட்டம் பெற்றுப் பெரும் புகழ் பெற்று விளங்கிய பொழுது அவருக்குத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. கல்வியுடன் நல்லொழுக்கமும், நல்லறிவும் இயல்பாகப் பெற்ற அவர் பெற்றோர் வரதக்ஷிணையை வற்புறுத்தவில்லை; வாங்க விரும்பவும் இல்லை. இஃது எவ்வளவு நாகரிகமான செயல்!

அசுடோஷ் சட்டக் கல்லூரியிற் சேர்ந்தார்; அவர் சென்ற இடம் எல்லாம் சிறப்பே பெற்றார். அவர் சட்டக் கல்லூரிப் பேராசிரியர் வியக்குமாறு சட்டங்களில் விளக்கம் கூற முற்பட்டார். அவரது

* Vice-Chancellor.

பேச்சுவன்மையும், வாதிக்கும் திறமையும் பல்கலை அறிவும் கண்ட சட்டக் கல்லூரிப் பேராசிரியர் அவரை வியந்து பாராட்டினர்; 'இவர் எதிர்காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைவார்' என்றும், நாட்டில் நிலைத்திருக்கத்தக்க புகழை எய்துவர் என்றும் கூறி மகிழ்ந்தனர். அசுடோஷ் சட்டக் கல்லூரியிற் பல பரிசுகள் பெற்றார்; கல்லூரியிற் கணிதம் அவருக்கு விருப்பத்தைத் தந்தது போலச் சட்டக் கல்லூரியில் சட்டம் அவரது உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அவர் சட்டங்களை மிக நுணுக்கமாகப் படித்து முடித்தார்; சில சட்டங்களில் அடங்கிய சிக்கலான குறிப்புக்களையும் விவாதித்து முடிவுகண்டார்; இறுதியில் பி. எல். பட்டம் பெற்றார்.

---

3. கல்விக்குத் தொண்டு புரிதல்

கல்கத்தாவில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முதல் கல்லூரி ஆசிரியர் வரை—நீதிமன்ற வழக்கறிஞர் வரை—அஃதாவது கற்றவர் என்னும் வான மண்டலத்தில் நமது இளைஞரான அசுடோஷ் 'இளஞாயிறு' எனத் திகழ்ந்தார். அவர் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்; நாள்தோறும் கல்கத்தா உயர் நீதிமன்றத்திற்குச் சென்று வந்தார்.

அவரது மதிநுட்பத்தைப் பாராட்டியவர் பலர். அவருள் கல்கத்தா மாகாணக் கல்வி அதிகாரியான வெள்ளையர் ஒருவர். அவர் மாதம் 250 ரூபா தரத் தக்க உத்தியோகத்தில் அசுடோஷை நியமிப்ப தாகக் கூறினர். ஆனல் அசுடோஷ் கல்கத்தா விலேயே தம்மை நிலையாக வைத்திருக்குமாறு கூறினர். அதிகாரி அதற்கு இணங்கவில்லை. உடனே அசுடோஷ் அந்த வேலை தமக்கு வேண்டாமெனக் கூறி வந்துவிட்டார்.

அசுடோஷ் வழக்கறிஞராக இருந்தபொழுதிலும் தமது பல்கலைப் படிப்பையோ—ஆராய்ச்சியையோ நிறுத்தவில்லை. அவர் நாள்தோறும் தம் ஓய்வு நேரங்களை ஆராய்ச்சியிற் கழித்தார். அக் காலத்தில் கல்கத்தாவில் இருந்த வெள்ளையர் ஒருவர் தம்மிடம் இருந்த நூல்களை விற்கலானர். அவற்றுள் பிரஞ்சு மொழியில் வரைந்த இரண்டு கணித நூல்களை வாங்க அசுடோஷ் விரும்பினர். அந் நூல்களைக் கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் (வெள்ளையர்) வாங்க முன்னேற்பாடு செய்திருந்தார்; அவர் அங்ஙனமே அவற்றை வாங்க முயன்றபோது விலை ஏறிவிட்டது. அந்த விலையேற்றம் அசுடோஷினல் உண்டானது என்பதை அறிந்ததும் அந்த நீதிபதி அவரைப் பார்க்க விரும்பினர்; 'பிரஞ்சு மொழியில் உள்ள மிக வுயர்ந்த கணித நூல்களை இந்திய வழக்கறிஞர் ஒருவர் வாங்க விரும்பி விலையை ஏற்றினர்' என்று

கேள்விப்பட்டதும் அவர் வியப்புற்றார்; அந்த இந்தியரைக் காண எண்ணங்கொண்டார். அந்த நீதிபதி அசுடோஷைக் கண்டு அவர் பட்டங்களையும், தகுதியையும் அறிந்த பிறகு மிக்க மகிழ்ச்சி அடைந்து அந்த இரண்டு நூல்களையும் அவருக்கே பரிசாகத் தந்தார் எனின், அப்பெரியாரது தாராள மனப்பான்மையை என்னென்பது! அந்த நாள் முதல் நீதிபதிக்கும், அசுடோஷுக்கும் இடையில் நட்பு வளரலாயிற்று.

அசுடோஷ் எண்ணம் எல்லாம் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின்மீது பதிந்திருந்தது. அவர் அக் கழகத்தில் ஓர் உறுப்பினராக விரும்பினார்; முதலிற் கூடவில்லை; பின்னர் ஓர் ஆங்கில நண்பர் உதவியினால் உறுப்பினராக நியமனம் பெற்றார். அந்த நியமனத்தன்று அவர் அடைந்த மகிழ்ச்சி சொல்லுந்தரத்ததன்று. இங்ஙனம் அவர் உறுப்பினர் ஆனபொழுது அவர் 24 வயதுடைய இளைஞராக இருந்தார்.

அவர் உறுப்பினரான மூன்று மாதங்கட்குள், பல்கலைக் கழக †ஆட்சிக்குழுவில் ஓர் இடம் காலி ஏற்பட்டது. அந்த இடத்திற்கு அசுடோஷைத் தேர்தலில் நிற்குமாறு அவருடைய நண்பர் பலர் வற்புறுத்தினர். அசுடோஷ் முதலில் இணங்கவில்லை. ஆயினும் நண்பர் தேர்தலில் உதவி புரிவதாக வாக்

† Syndicate.

களித்ததன்மீது அசுடோஷ் தேர்தலுக்கு நின்றார். மிக்க இளைஞரான அவரை ஆட்சிக்குழுவில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கலாகாது என ஆட்சிக்குழு உறுப்பினர் பலர் தீர்மானித்தனர். ஆதலால் அசுடோஷுக்கு எதிராக நின்ற ஒருவர்க்கு உதவி புரியலாயினர். எனினும் அசுடோஷின் கூரிய மதிநுட்பத்தையும், ஆற்றலையும் அறிந்த பலர் அவர்க்கே தம் வாக்களித்தனர்; நண்பர் பலரும் அவர் வெற்றிக்காகப் பாடுபட்டனர். இறுதியில் இளைஞரான அசுடோஷ் சிண்டிகேட் உறுப்பினர் ஆனார். இங்ஙனம் இருபத்து நான்கு வயதுடைய இளைஞர் அப் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவில் உறுப்பினர் ஆனது இதுகாறும் இல்லை என்னலாம். கல்கத்தாப் பல்கலைக் கழகத் தொடர்பு கொள்ளவேண்டும் என்று அசுடோஷ் மனத்திற் கொண்ட எண்ணம் அவரது இருபத்து நான்காம் வயதில் நிறைவேறியது அல்லவா?

இத்தகைய உயர் பதவிகளைப் பலர் மதிப்புக்காக வைத்திருப்பது வழக்கம். அவர்கள் உறுப்பினர் கூட்டங்கட்குச் செல்லார்; கழக ஆட்சி முறையை கவனியார்; அதைப்பற்றிக் கடுகளவும் கவலைப்படார்; தம்மால் இயலும் உதவியும் செய்யார்; பிறர் இருந்து பணிசெய்யத் தம் பதவியை விடவும் செய்யார். அத்தகைய பெருமக்களில் அசுடோஷ் ஒருவரா? அல்லர். அவர் உயர்நிலைக் கல்விக்கு உழைக்கவேண்டும் என்னும் வேட்கை

யால் ஆட்சிக்குழுவில் உறுப்பினர் ஆனார்; ஆக லின் அதன் ஒவ்வொரு கூட்டத்திற்கும் சென்று நடவடிக்கைகளைக் கவனித்தார்.

தமிழராகப் பிறந்தும் நம் நாட்டுப் பெரு மக்கள் பலருக்குத் தமிழ் மொழிப் பற்றில்லை; தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும் என்னும் எண்ணம் இல்லை. ஆனால் அசுடோஷ் அத்தகையவர் அல்லர். அவர் தாய்மொழி வளர்ச் சியில் நாட்டம் உடையவர்; தாய் மொழியைக் கல்லூரியில் போதிக்க வேண்டும் என்னும் தீர் மானத்தைக் கொணர்ந்தார். பலர், "போதிய நூல் கள் வங்க மொழியில் இல்லாமையால் அந்த முயற்சி வேண்டா" என்றனர். அசுடோஷ் எழுந்து அவர்களை எதிர்த்து வாதித்தார். 'அப்பொழுது அவர் தாய்மொழியின் தேவையை வற்புறுத்திப் பேசிய பேச்சு உள்ளத்தை உருக்கியது' என்று பல்கலைக் கழக உறுப்பினர் ஒருவர் கூறினார். ஆயினும், அசுடோஷ் கொணர்ந்த தீர்மானம் தோற்றது. எனினும், அசுடோஷ், மனமுடைந்த னரா? இல்லை, இல்லை. கல்லூரிகளில் தாய்மொழிக் குத் தக்க இடம் தந்தே தீரவேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் உறுதிப்பட்டது.

அசுடோஷ் நீதி மன்றத்திலும் பெயர் பெற லானார். அவருடைய வாதத்திறமை, பல்கலை அறிவு, ஓயாத படிப்பு, வசீகரத் தோற்றம் ஆகிய அனைத்

தும் அவருக்கு நற்பெயரை அளித்தன; அவர் விரைவில் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் பெயர் பெற்ற வழக்கறிஞருள் ஒருவரானார். அவர் சட்டக் கலையில் மிக வுயர்ந்ததாகிய டாக்டர்* பட்டத்தையும் பெற்றார்; அதனால் கல்கத்தாப் பல்கலைக் கழகத்திலேயே தாகூர்ச் சட்டப் பேராசிரியர்† என்னும் பெரும் பதவியில் அமர்த்தப்பட்டார். அப் பதவி எளிதாகப் பெறத் தக்கதன்று. முப்பது வயதும் நிரம்பப் பெறாத அசுடோஷ் அந்த மிக வுயர்ந்த பதவியைப் பெற்றமைக்குக் காரணம் அவரது இணையற்ற பேராற்றலே அன்றோ? புதிய பதவியை ஏற்ற அசுடோஷ் சட்டங்களைப்பற்றிய பல ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆற்றினார். அவை ஒரு நூலாக வெளிவந்தன. அந்நூல் இன்னும் சட்ட நிபுணர்களால் ஆதாரமாகக் கொண்டாடப்படுவதே அதன் சிறப்பைக் குறிக்கப் போதியதாகும்.

---

4. பதவிகளும் பொதுப் பணியும்

ஆண்டுகள் சில கழிந்தன. அசுடோஷ் கல்கத்தா நகரத்தில் இருந்த மிகச் சிறந்த அறிஞர் சிலருள் ஒருவராக விளங்கினார். கல்கத்தாப் பல்கலைக் கழகம் அவரை வங்காள மாகாணச் சட்ட சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பியது. சட்ட சபையில் அசுடோஷ் ஒரு விண்

*Doctorate in Law. †Tagore Professor of Law.

மீகை விளங்கினர்; இந்தியர் நலனுக்காகப் பல சந்தர்ப்பங்களிற் பேசினர்; வரி குறைக்குமாறு வாதாடினர்; இந்தியரை அரசாங்க உயர் பதவிகளில் அமர்த்துமாறு வேண்டினர். சீர்திருத்தச் சட்டங்கள் பலவற்றை மனதார ஆதரித்துப் பேசினர். சுருங்கக் கூறின் அசுடோஷ் பேசாத சட்ட சபைக் கூட்டம் இல்லை எனின் அவர் அதன் நடவடிக்கைகளிற் காட்டிய கருத்தை நன்குணரலாம் அல்லவா?

பின்னர் அவர் வங்க அரசாங்கத்தினல் கல்கத்தா நகர சபைக்கு உறுப்பினராக அனுப்பப்பட்டார். அங்கு அப்பெரியார் பேசிய பேச்சுக்களும் நகர மக்கட்குச் செய்த நலன்களும் பலவாகும்.

அவருடைய நகர சபைப் பேச்சுக்களும் சட்ட சபைச் சொற்பொழிவுகளும் இந்திய அரசப் பிரதிநிதியின் கருத்தைக் கவர்ந்தன. அவர் அசுடோஷைச் சிறந்த அறிஞராக மதித்தார். அசுடோஷ் இந்தியச் சட்ட சபைக்கு ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் பொது மக்கள் நூற்றுக்கணக்கில் அவருக்குத் தொண்டராக இருந்து, தேர்தல் வேலையைத் திறம்படச் செய்தனர் எனின் வங்காளிகள் அவரிடம் கொண்டிருந்த பெருமதிப்பை என்னென்பது! அப்பெரியார் இல்லாத சபை முழுமதி இல்லாத வானமண்டலமாகக் கருதப்பட்டது. அவர் இந்தியப் பேரவையில் இந்தியாவின் நலனைப்பற்றிப் பல சொற்பொழிவு

கள் செய்தார். அவருடைய உருக்கமான பேச்சுக்கள் அதிகாரிகள் உள்ளத்தைக் கவர்ந்தன. அவர்கள் அவரைப் பாராட்டியதுடன் அவராற் குறிக்கப்பட்ட பல திருத்தங்களை மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். அப் பேரவையில் அவருக்கு உறு துணைவராக இருந்தவர் மஹாராஷ்டிர வீரராகிய கோபால கிருஷ்ண கோகலே என்பவர்.

இந்தியப் பல்கலைக் கழகச் சட்டம்* ஒன்று இந்தியப் பேரவையில் ஆராயப்பட்டது. அசுடோஷ் அந்த ஆராய்ச்சிக் குழுவினருள் ஒருவராக இருந்தார். அச் சட்டத்திற்கு முன் பல்கலைக் கழகங்கள் பரீக்ஷைகளை மாத்திரம் நடத்திப் பட்டங்களை வழங்கி வந்தன; பல்கலை வளர்ச்சிக்கான அறிவியல் துறைகளை ஏற்படுத்தி ஆராய்ச்சி அறிஞரை நியமிக்க ஆராய்ச்சிக் கூடங்கள் இல்லாதிருந்தன. அவை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அசுடோஷ் விரும்பினர்; அந்தப் புதிய சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கல்கத்தாப் பல்கலைக் கழகத்தைப் பலவழிகளிலும் சிறப்புறச் செய்யலாம் என்பது அவரது கருத்தாக இருந்தது.

மேற்சொன்ன சட்டம் நிறைவேறிய பிறகு அசுடோஷ் கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதிகளுள் ஒருவராக நியமனம் பெற்றார். தாம் நீதிபதியாக வரவேண்டும் என்று அவர் சிறு வயதில் எண்ணி

* Indian University Bill.

ஞர் அல்லவா? அந்த அழுத்தமான எண்ணம் அவரை அவ்வுயர் பதவிக்குக் கொண்டு சென்றது. புதிய பதவி கௌரவமானதே அன்றி அவருக்குப் பொருள் வகையில் நஷ்டத்தையே உண்டாக்கியது என்னலாம். அவர் வழக்கறிஞராக மாதம் சுமார் பதினுயிரம் ரூபாய் பெற்று வந்தார். உயர் மன்ற நீதிபதிக்கு மாதச் சம்பளம் 4000 ரூபா எனவே, அவருக்கு மாதந்தோறும் ஆறுயிரம் ரூபா நஷ்டமே உண்டாயிற்று. அத்துடன் அவர் அரசாங்க ஊழியர் ஆகிவிட்டனர். ஆதலால் முன்போலப் பொது மக்கள் சார்பில் நின்று தாராளமாகப் பேச உரிமையற்றவர் ஆயினர். எனினும் மிக உயர்ந்த பதவி ஆதலின் அவர் அதனைச் சிறிது காலம் அநுபவிக்க விரும்பினர்.

இங்ஙனம் அசுடோஷ் எண்ணிய எண்ணியாங்கு எய்திவந்தார். ஆனல் அவரது அவா முழுவதும் கல்விக்கு உழைப்பதில் இருந்தது. அதனல் கல்கத்தாப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக வர வேண்டும் என்பதை அழுத்தமாக எண்ணினர்; அவ்வாறே அப்பதவியையும் பெற்றூர்.

பல்கலைக் கழகம் அவருக்குப் புதியதன்று; அதன் நுட்பங்களை எல்லாம் அவர் நன்கு அறிந்தவர்; ஆதலால் அதன் தலைவர் என்ற முறையில் அதனைத் திருத்தி அமைக்க முயன்றூர்; அவர் அதற்காகச் செய்த வேலைகளால் பொதுமக்கள் அப்பல்

கலைக் கழகம் வேறு - அவர் வேறு என்ற எண்ணத்தை மறந்து விட்டனர். அவர் பல்கலைக் கழகச் சார்பில் பெரியோர்கட்கும், உத்தியோகஸ்தர்க்கும், அல்லாதவர்க்கும் கௌரவப் பட்டங்களை வழங்கலானார். அப் பட்டங்களைப் பெற்ற பெருமக்களைப் பல்கலைக் கழகத்திற்குப் பக்க பலமாகச் சேர்த்துக் கொண்டார். அப் பெருமக்களைப் பல்கலைக் கழகம் தக்கவாறு மதித்துப் பட்டங்களை வழங்கியதனால் பொதுமக்கள் அசுடோஷைப் பாராட்டி வாழ்த்தினர். அசுடோஷ் பல்கலைக் கழகத்தில் உயர்தரப் பட்டப் படிப்பு நிலைகளைப் புதியனவாக வைக்கப் பெரிதும் முயன்றார். அதற்கு மூலப்பொருளாகப் பல லக்ஷ ரூபாய்களை வசூலித்தார்; இந்தியாவில் வேறு பல்கலைக் கழகங்களில் வைக்கப் பெறாத உயர்தரப் பட்டங்கட்குரிய வகுப்புக்களை வங்கக் கல்லூரிகளில் தொடங்கச் செய்தார்; வங்க மொழியைக் கல்லூரி வகுப்புக்களில் கற்பிக்கச் செய்தார்; கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிக்குரிய பதவிகளை உண்டாக்க அரும்பாடு பட்டார். இத்தகைய புதிய பல ஏற்பாடுகளைச் செய்ததால் கல்கத்தாப் பல்கலைக் கழகம் இந்தியப் பல்கலைக் கழகங்களில் பாராட்டத் தக்கதாயிற்று.

வங்காளத்தில் 'வங்க - ஆசியக் கழகம்' என்பதொன்று இருந்தது. அஃது சிறந்த ஆராய்ச்சி அறிஞர் கழகம் ஆகும். வங்க மாகாண ஆராய்ச்சி அறிஞர் அதனில் உறுப்பினராக இருந்தனர்.

அந்தப் புதிய கழகத்திற்கு நமது அசுடோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவி இந்தியர்க்குக் கிடைப்பது அருமையாகும். அசு டோஷின் கல்வி மேம்பாட்டையும், கல்விக்கு அவர் செய்த சேவையையும் மதித்து அப்பெரிய பதவி அவருக்கு வழங்கப்பட்டது. அசுடோஷ் ஆராய்ச் சிப் பிரியர். ஆராய்ச்சி வளரவேண்டும் என்பது அவரது பேரவா. அவர் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடைபெறப் பலரை நியமித்த அறிஞர். ஆதலின் அவர் 'வங்க - ஆசியக் கழகத்' தலைவராவ தற்கு உரியரே ஆவர்.

கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்து கொண்டே அசுடோஷ் பல வேலைகளில் ஈடுபட்டு வந்தார். அவர் கல்கத்தாவில் இருந்த மஹா போதிக் கழக*த் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். இது புகழ்பெற்ற பௌத்த சங்கம். அவர் முழு - இந்திய முஸ்லிம் மகாநாட்டுக்குத் தலைவராக இருந்து திறம்பட நடத்தினர். இங்ஙனம் முஸ்லிம் மகாநாட்டுக்கு இந்து ஒருவர் தலைவராகச் சென் றது வழக்கம் இல்லை. இதனை நோக்க அக்கால முஸ்லிம்கள் அசுடோஷினிடம் கொண்டிருந்த மதிப்பையும், நம்பிக்கையையும் நன்கறியலாம் அல் லவா? வங்க மாகாணத்தில் கல்லூரிகள் வைப்பது பற்றிப் பல்கலைக்கழகம் ஓர் அறிக்கையைத் தயா ரிக்க நேர்ந்தது. அதனைத் தயாரிக்கக் குழு ஒன்று

* பௌத்த சங்கம்.

நியமிக்கப்பட்டது. அக்குழுவினர் மாகாணம் முழுவதும் சுற்றித் திரிந்து கல்லூரி வைக்கத்தக்க இடங்களும் அவ்விடங்களில் இருந்த வசதிகளும் ஆராய்ந்தும், விசாரித்தும் அறிக்கை தயாரித்தனர். அக்குழுவினருள் சிறந்தவர் நமது அசுடோஷ் ஆவர். அவர் கல்விக்கு உழைத்தமுறை கண்ட வங்க அறிஞர் அவரை வாயார வாழ்த்தினர்.

அசுடோஷ் சிறிதுகாலம் கல்கத்தா உயர் நீதி மன்றத்துத் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றார். அவர் ஒரு சமஸ்தான அரசர் சார்பில் வழக்கறிஞராகப் பாடலிபுரத்திற்குச் சென்றார். சென்ற இடத்தில் திடீரென நோயினால் தாக்குண்டு காலமானார். †

---

5. குண நலன்கள்

அசுடோஷ் முக்கர்ஜி உழைப்பே உருவமாக வந்தவர். அவர் படிப்பின் திறனையும், கூர்ந்த அறிவையும் நோக்க அவரைக் கல்வியின் அவதாரம் என்று கூறலாம். அவர் ஆங்கிலம், வடமொழி, விஞ்ஞானம், கணிதம், சட்டம் இவற்றில் பெரும் புலமையும் ஆராய்ச்சி வன்மையும் அடைந்திருந்தார். தம் உடல் நலத்தையும் கருதாது எண்ணிறந்த நூல்களைப் படித்துப் படித்து அறிவு விளக்கம் பெற்ற அப்பெரியார் எந்தப் பொருளைப்பற்றியும்

† காலமான நாள் 22-5-1924.

பேச ஆற்றல் பெற்றிருந்தார். அவர் ஆயிரக் கணக்கான நூல்களைத் தம் மாளிகையில் சேர்த்து வைத்திருந்தார். கல்வியின் சிறப்பை நன்கு உணர்ந்த அப்பெரியார் கல்வி கற்க விரும்பிய எளிய மாணவர்க்குத் தம்மால் இயன்ற அளவு தளராமல் உதவி புரிந்துவந்தார்.

அசுடோஷ் வாதத்தில் வல்லவர். அவரது பேச்சாற்றலைக்கண்ட வெள்ளையரும், இந்தியரும் பெருவியப்பும், மகிழ்ச்சியும் கொண்டனர்; அவரது சகல கலா வல்லமையை அவரது பேச்சுப் புலப்படுத்தியது கண்ட அறிஞர் அவரைப் பெரிதும் மதித்து நடந்தனர். இந்திய மக்கள் நன்மைக்காக—இந்தியர் கல்வி பெறுதற்காக—இந்தியர்க்கு உயர்ந்த உத்தியோகங்கள் வழங்கவேண்டும் என்பதற்காக அவர் கல்கத்தா நகரசபை, வங்கச் சட்டசபை, இந்தியப் பேரவை இவற்றிற் செய்த சொற்பொழிவுகள் இந்தியர் உள்ளத்தை அவர்பால் ஈர்த்தன. அரசாங்க அதிகாரிகளும் அவரது நாட்டுப்பற்றையும், இனப்பற்றையும் கண்டு மகிழ்ந்தனர்.

அசுடோஷ் பெரியார் உண்மையின் அவதாரம் என்று கூறலாம்; தம் உள்ளத்திற்பட்டதை அஞ்சாமற் கூறுபவர்; தம் தாய் தந்தையர் இறக்கும் வரை அவர் மனம் கோணாமல் நடந்த உத்தம மைந்தர். உயர்நீதிமன்ற நீதிபதி உத்தியோகத்தைத் தம் தாயார் யோசனையைக் கேட்ட பிறகே

ஏற்றுக்கொண்டார் எனின், அவர் தம் தாயாரிடம் கொண்டிருந்த பெருமதிப்பை நன்கு அறியலாம் அல்லவா?

அவர் தம் செல்வ மகளாரான கமலா என்பவரைத் தம் உயிர்போல நேசித்து வந்தார். அந்த அம்மையார் இளவயதில் கைம்பெண் ஆனார். அசுடோஷ் சிறந்த வைதிகர். அங்ஙனம் இருந்தும் தம் மகளார் இன்பமாக இருத்தலைக் காணவிழைந்து, தமது சமூக எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், அம் மகளார்க்கு இரண்டாம் திருமணம் செய்து வைத்தார். பாவம்! அந்த அம்மையார் இரண்டாம் முறையும் கைம்பெண் ஆனார்; சில ஆண்டுகட்குப் பின் காலமானார். அசுடோஷ் வாழ்க்கையில் கமலாவின் கைம்மைக் கோலமே துன்பத்தைத் தந்தது. அவர் அந்த அம்மையார் நினைவுக்கு அறிகுறியாகக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் நாற்பதினாயிரம் ரூபாய் கொடுத்தார்; அதன் வட்டியைக் கொண்டு ஆண்டு தோறும் தக்காரைக்கொண்டு ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நடத்துமாறு ஏற்பாடு செய்தார். அச் சொற்பொழிவுகட்குக் '**கமலாச் சொற்பொழிவுகள்**' என்பது பெயர். கல்கத்தாப் பல்கலைக் கழகம் இன்றளவும் இப்பணியை நிறைவேற்றி வருகின்றது. உலகப் புகழ் பெற்ற டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் ஓராண்டு இச் சொற்பொழிவுகளைச் செய்து புகழ் பெற்றார்.

அசுடோஷ் மிக எளிய உடைகளை அணிவது வழக்கம். அவர் தகுதிக்கு ஆடம்பரமான உடைகளை உடுத்தியிருக்கலாம். ஆயினும் அவர் அங்ஙனம் செய்யவில்லை. அப்பெரியார் இன்னார்—இனியார் என்ற வேறுபாடு இன்றி அனைவரிடமும் மிகுந்த அன்புடன் நடந்துகொண்டார். அவர் கடவுள் பக்தியிலும் சிறந்து விளங்கினர்.

'அவரது இல்லத்தில் அவரைக் கண்டு யோசனை கேட்க அல்லது உதவிபெறச் சமஸ்தான அதிபதிகளும், சட்ட நிபுணர்களும் பேராசிரியர்களும், அரசியல் அலுவலாளரும், புலவர்களும், வியாபாரிகளும், எளிய மாணவரும் நாள்தோறும் கூடியிருப்பது வழக்கம் என்று அறிந்தோர் கூறியுள்ளனர். அப்பெரியாரை ஆங்கிலோ—இந்தியரும், கிறித்தவரும், முஸ்லிம்களும், பௌத்தரும் வாழ்த்தினர் எனின் அவரது அருங்குணத்தை விளக்க வேறு சான்று வேண்டுவதில்லை அல்லவா?

அசுடோஷ் பல்கலைக் கழக ஊழியரிடத்தும், உயர் நீதிமன்ற ஊழியரிடத்தும் அன்பும் இரக்கமும் கொண்டிருந்தார்; அவர் அன்பை, அவரவர் விரும்பும் முறையில் நடந்து பெற்றதே அவர்பால் காணப்பட்ட தனிச்சிறப்பு என்னலாம். சுருங்கக் கூறின் அவர் வங்க மக்கள் அனைவராலும் போற்றப்பட்டார். அப்பெரியார்க்குப் பிறந்த பிள்ளைகள் அவர் பெயரை நிலைநாட்டி வருகிறார்

கள். அவர் மக்களுள் ஒருவராகிய டாக்டர் சியாமப் பிரசாத் முக்கர்ஜீ என்பவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்தார் எனின், அங்ஙனம் தந்தைக்குப்பின் தனயர் துணை வேந்தரானமை வேறு எந்த இந்தியப் பல்கலைக் கழகத்திலும் இல்லை எனின் சர் அசுடோஷ் முக்கர்ஜியின் சிறப்பையும் அவர் பெற்ற அருஞ்செல்வர் தம் சிறப்பையும் என்னெனப் புகழ்வோம்! அச் சியாமப் பிரசாத் முக்கர்ஜியே இப்பொழுது இந்திய அரசாங்க அமைச்சருள் ஒருவராக இருந்து வருபவர்.

THE MADURA TAMIL SANGAM